# அகவிழி

ஆசிரியத்துவ நோக்கு...

விழி - 7 பார்வை - 77 டிசம்பர் 2011




கொழும்பு தமிழ்ச் சங்கம்
நூலகம்

- கல்வி மாற்றம் பற்றிய சமூகவியல் மாதிரிகள்
- பொதுக் கல்வி பற்றிய உத்தேச கல்விச் சட்டம் - ஓர் அறிமுகம்
- கல்வியில் கணினிப் பயன்பாட்டின் எதிர்காலம் அதன் அவசியம் பற்றிய தெளிவுறல்
- மனநோயின் அறிகுறிகள்
- பாடசாலைகளில் நூல் நிலையப் பயன்பாடு - ஒரு கண்ணோட்டம்

www.viluthu.org

விலை ரூபா. 100/=

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளியீடு மற்றும் தொடர்புகளுக்கு :

AHAVILI
3, Torrington Avenue, Colombo - 07
Tel : 011-2506272
E-Mail : ahavili.ehthq@gmail.com

## உள்ளே...


- மனநோயின் அறிகுறிகள் — 04
- கல்வி மாற்றம் பற்றிய மாதிரிகள் — 11
- பொதுக் கல்வி பற்றிய உத்தேச புதிய கல்விச் சட்டம் ஓர் அறிமுகம் — 16
- கல்வியில் கணினிப் பயன்பாட்டின் எதிர்காலமும் அதன் அவசியம் பற்றிய தெளிவுறல் — 21
- வினாக்களைத் தேர்ந்து வினா — 26
- விருதினை வென்றப் பணி... — 28
- பாடசாலைகளில் பூரண்நிலைப் பயன்பாடு ஒரு கண்ணோட்டம் — 31
- வட இலங்கையின் கல்வி வளர்ச்சியில் பசுபதிச் செட்டியாரின் பங்களிப்பு — 37
- இருமொழியும் மும்மொழியும் — 42




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ISSN 1800 - 1246

அகவிழி

மாத இதழ்

ஆசிரியர் :
V. S. இந்திரகுமார்

நிர்வாக ஆசிரியர் :
சாந்தி சச்சிதானந்தம்

ஆசிரியர் குழு:
க. சண்முகலிங்கம்
சாந்தி சச்சிதானந்தம்
திருமதி பத்மா சோமகாந்தன்

ஆலோசகர் குழு:
திரு. து. ராஜேந்திரம்
[illegible]
கலாநிதி உ. நவரட்ணம்
[illegible]
திரு. தை. தனராஜ்
[illegible]
பேராசிரியர் வ. மகேஸ்வரன்
[illegible]
பேராசிரியர் இரா. வை. கனகரட்ணம்
[illegible]
திரு. க. இரகுபரன்
[illegible]
திரு. ஜி. போல் அன்ரனி
[illegible]
லெனின் மதிவாணம்
[illegible]
திரு. கே. சாம்பசிவம்
[illegible]
கலாநிதி சசிகலா குகமூர்த்தி
[illegible]
திருமதி அருந்ததி ராஜவிஜயன்
[illegible]
திரு. ஆ. தியாகராஜா
[illegible]

# ஆசிரியர் பக்கம்

புதியன பிறப்பித்தலையும் கூட கல்வியையும் இடைநிறுத்தாது முன்னோக்கிச் செல்லும் ஆசிரியர்களின் வாண்மை நிலையை விருத்தி செய்தல் இன்று நாட்டின் கல்வித் துறையில் இடம்பெறுகின்ற முக்கிய விடயம் என்பது யாவரும் அறிந்ததே. ஆசிரியர் கல்விப் பாடநெறியில் கற்பிக்கும் பயிற்சி வழங்கல் இடம், ஆசிரிய மாணவர்கள் பெயர் பதிவு, அதிகரித்த பயிற்சியின் முக்கியத்துவம், அதன் குறிக்கோள்கள், நோக்கங்கள் என்பன தொழில்சார் துறையில் ஏற்படுகின்ற அனைத்து மாற்றங்களின் கட்டமைப்புகள் பற்றிய தகவல்களும் இதில் முக்கியத்துவம் பெறுகின்றன. வகுப்பறையில் ஆசிரியரின் ஆற்றுகை என்பது ஆசிரியரின் வகிபங்கை உள்ளீர்த்துள்ள விருத்தியில் செய்து காட்டுவதும் ஆசிரியரின் நடத்தைப் பாங்கை எடுத்துக்காட்டுவதும் ஆகும். மேலும் அது ஆசிரியரின் கல்விப் பரப்பை விரிவுபடுத்துவதற்குரிய வாய்ப்புகள் கூறுகின்ற கல்வித் தத்துவங்கள், கல்வி உளவியல், கற்பித்தல் முறைகள், மதிப்பீட்டு நுட்ப முறைகள் போன்ற விடயங்களிலும் அறிவு பெற்றுக்கொண்டு தொடர்ந்து ரீதியான அறிவை வகுப்பறையில் மாணவர்களின் கற்றல் நிலைமையை உயர்த்துவதற்காக நன் முறையில் பயன்படுத்துவதும் ஆகும்.

மேலே குறிப்பிட்ட விடயங்களை அர்த்த பூர்வமாகவும் விளைவுமிக்கதாக விருத்தியடையச் செய்வதற்காக விரிவான ஆற்றல்கள், விழுமியங்கள், அறிவு மட்டங்கள் என்பவற்றைக் கொண்ட பிள்ளைகளையும் பல்வேறு சமூகச் சூழலில் இருந்து வரும் பிள்ளைகளையும் மனதில் கொண்டு கற்பித்தலை மேம்படுத்துவதற்கான ஆற்றுகைகளை அகவிழி ஆசிரியர் சஞ்சிகை ஆசிரியர்களுக்கு உதவுவதற்கு என்ன செய்திருக்கிறது. இனிவரும் காலங்களில் என்ன செய்ய இருக்கிறது? இது தொடர்பில் இலங்கையின் கல்வித் துறையிலுள்ள பல கல்வியியல் வல்லுனர்களை ஒன்றுசேர்த்து அகவிழி தனது பணியினைத் தொடர்கிறது. கடந்த மூன்று ஆண்டுகள் தொடர்ந்து வெளிவந்த நிலையில் ஒரு சில காரணங்களால் சிறு இடைவெளி தேவைப்பட்டது. மீண்டும் தொடங்கும் மீட்சி என்பது போல அகவிழி தனது பணியை மீண்டும் தொடர்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வினைத் திறமையையும் நிச்சயமான நல் விளைவுகளையம் எதிர்பார்க்கும் சகல செயன்முறைகள் தொடர்பான விளைவுகளையும் அகவிழி தனது விழிகளை அகலத் திறந்து ஆசிரியர் சமூகத்திற்குப் பணியாற்ற விளைகிறது. அவ்வகையில் அறிவுசார் பொருளாதாரத்தில் "நீங்கள் எங்கு வாழ்கின்றீர்கள் என்பதை விட உங்களுக்கு என்ன தெரியும் என்பது மிக முக்கியமானது. அவ்வாறாயின் எமது ஆற்றலை எவ்வாறு பேணிக்கொள்ளலாம்? முதலில் தொடக்கத்தில் இருந்தே ஒவ்வொரு மாணவர்களுக்கும் தரமான கல்வியை வழங்குதல் வேண்டும். அப்போது பிரதான எழு வினாக்களான கல்விவாய்ப்பு, அதனைப் பெறுவதற்கான ஆற்றல், வகைகூறும் தன்மை, தராதரம் என்பன கருத்திற் கொள்ளப்பட வேண்டும்........ மாணவர்களை அவர்களுடைய எதிர்காலம் நோக்கி ஆயத்தம் செய்வது ஒரு தார்மீகப் பொருளாதாரக் கடப்பாடாகும்".

மேற்படி கூற்றைக் கவனத்தில் கொண்டு நாட்டின் கல்விமுறைசார் பொருளாதாரத்தையும் சமூக வினைப்பாடுகளையும் உள்ளடக்கி சிறந்ததோர் ஜனநாயகப் பண்புள்ள நற்சமூகத்தை உருவாக்கிட அடிப்படையில் இருந்து செயற்படுதல் எனும் நோக்குடன் கல்விசார் பணிகளையும் அதன் தத்துவங்களையும் நல்விளைவுகளையும் வேண்டிநிற்கின்ற இச்சமூகத்திற்கு ஆசிரியர் சமூகத்தினூடாக நாம் உன்னதமான சேவையை வேண்டி நிற்கின்றோம். அதற்கென உங்களது வாழ்நாள் முழுவதும் அர்ப்பணிப்பும் தியாகசிந்தையும் கொண்டு உழைக்க முன்வந்திருக்கும் உங்கள் ஒவ்வொருவருக்கும் நன்றி கூறுகின்றோம். "உங்களால் ஆனதே உய்வழி உலகம்" இவற்றைக் கருத்திற்கொண்டு அகவிழி மாத இதழ் கல்விதொடர்பான பல ஆழமான கட்டுரைகளைத் தாங்கிப் புதுப்பொலிவுடன் வெளிவருகிறது. இது உங்களது அறிவுசார் பொருளாதாரத்தை உயர்நிலைக்கு இட்டுச் செல்லும் என்பது எங்களது அசையாத நம்பிக்கை. கற்றலும் கற்பித்தலும் ஆசிரியத்துவத்தின் இறுதித் தீர்வு. இது எழுதப்பட்டதும் எழுதப்படாததுமான தீர்வு. இந்தத் தீர்வை உங்களுக்கு சாதகமாக்கிக் கொள்வீர்கள் என நம்புகிறோம்.

அகவிழி சஞ்சிகையை வெளியிடுவதில் விழுது குழுமம் மகிழ்ச்சி கொள்கிறது. உங்களது பார்வையில் இருந்து கல்விசார் புலமையாளர்களாக நீங்கள் உங்களது வகிபங்கினை வினைத்திறன்மிக்கதாக ஆக்கிக் கொள்ள வேண்டும் எனில் மாறிவரும் கல்விசார்ந்த புதிய சிந்தனைகளுக்கு முகங்கொடுத்து பரந்து விரிந்து நிற்கும் அறிவுசார் பொக்கிசத்தில் உங்களுக்குத் தேவையானவற்றைத் தெரிந்து கற்றுக்கொள்வதற்கான விரிந்த பார்வையை அகவிழி உங்களுக்குச் செய்யும். எங்கள் கல்விசார் ஆளணியினரின் இந்த முயற்சி உங்கள் ஆசிரியத்துவ வாண்மையை விருத்தி செய்யும் என்பதில் உறுதியாக உள்ளோம். எதிர்காலத்தில் அகவிழியின் நோக்கங்களை அடைவதற்கு நாம் காத்திரமான பணிகளை முன்னெடுத்துச் செயற்படுவோம் என்பதையும் இந்நேரத்தில் கூறிக் கொள்கின்றோம்.

- **கல்வி எனும் அனுபவம் முதிர்ச்சியடைந்த ஆசிரியர் மனதுக்கும் முதிர்ச்சியடைந்து கொண்டிருக்கும் மாணவர் மனதுக்குமிடையே அமைகின்ற தொடராகும். – பிளாட்டோ**
- **மாணவர்களின் கற்றலுக்கு ஏற்ற பரஸ்பர மனிதாபிமான உறவுகள் ஆசிரியருக்கும் மாணவருக்கும் இடையே ஏற்படுமாறு செய்ய வேண்டும். – கிளார்க்**
- **முழுமையின் நிறைவு பெற்ற வாழ்க்கைக்கு ஆயத்தமாகுவதே கல்வியின் நோக்கமாகும். – ஹெபர்ட் ஸ்பென்சர்**
- **சமுதாயத்தில் நல்லாசிரியர்கள் தமக்கிணையில்லாத் தனிமனிதர்கள் ஆவார்கள். – கோம்ஸ்**
- **மாணவர்களுக்கும் ஆசிரியருக்கும் இடையேயும் மாணவர்கள் ஒருவருக்கொருவரிடையேயும் கருத்துப் பரிவர்த்தனைக்கு (communication) வழி செய்ய வேண்டும். – கிளார்க்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனநோயின் அறிகுறிகள்

டாக்டர் ஓ. சோமசுந்தரம்
டாக்டர் தி. ஜெயராமகிருஷ்ணன்

உடற் செயல்களும், உளச் செயல்களும் ஒழுங்கமைந்து, ஒன்றுக்கொன்று திருப்தியான முறையில் பொருந்தியிருப்பதுதான் உடல், உள நல ஆரோக்கியமாய் இருப்பதற்கான அறிகுறி. உடல் நலமில்லாதவர்களின் எண்ணிக்கை குறைவாக இல்லை. அந்நிலையில் உடல் வன்மையும் மனத்திறனும், சமூகங்களின் வளர்ச்சியையும் பாதிக்கிறது. இன்றைய கல்வி முறையில் ஆசிரியர்களும் மாணவர்களும் உடல், உள ஆரோக்கியத்தில் நிறைவாக உள்ளனரா? என்பது பற்றிய ஆய்வுகள் வருத்தமளிப்பவையான விளைவுகளைத் தருகிறது.

அண்மைக் காலமாக இடம் பெயர்வுகளுக்கு வெகுவாக ஆளாகி போர்ச் சூழல் பல சொல்லொணாத் துயரங்களுக்கு உட்பட்டிருக்கிறது. இந்நிலையில் உண்டான இடப்பெயர்வுகளும், உயிர் இழப்புகளும், உடமை இழப்புகளும், மந்தபோசணையும் என்று பல வகைகளில் மன அழுத்தங்களை ஏற்படுத்தியிருக்கின்றன. குறிப்பாக கல்விச் சமூகத்தை பாதித்து மாணவர்கள் முக்கியமாக யுத்தம் முடிவுக்கு வந்த நிலையிலும் மன அழுத்தங்களுக்கும் மனநோய்க்கும் ஆட்பட்டோரை காணக்கூடியதாக இருக்கிறது. இந்நிலை கல்விச் சமூகத்தை பெருமளவில் பாதிக்கக் கூடியதாகும். இதற்கான மாற்றுத் தீர்வுகள் பற்றி ஏதேனும் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றனவா? என்பதில் பல கேள்விகள் உள்ளன.

இவ்வகையில் மனக்குழப்பத்திற்கு உள்ளாகும் போது, விளக்கமற்ற நடவடிக்கைப் பிறழ்வுகள் கற்பனையான உலகிற்கு இட்டுச்சென்று அசாதாரண நிலையில் இருக்கும் ஒருவரை மனநோயாளியாய் ஆக்கிவிடும் என்பதால், மனநோயும் அதற்கான மருத்துவம் பற்றியும் விளக்கிச்செல்கின்றது...

**மனநோயும் இன்றைய மருத்துவமும் என்ற நூலின் ஒரு அத்தியாயம் இங்கு நன்றியுடன் மீள் பிரசுரிக்கப்படுகிறது. தமிழ்நாடு எம். சி. டி. எச் நிறுவனத்தின் இந்நூலின் ஆசிரியர்கள் டாக்டர். ஓ. சோமசுந்தரம், டாக்டர். தி. ஜெயராமகிருஷ்ணன் ஆகிய இருவரும் மனநலத்துறை நிபுணர்கள். இந்நூல் தமிழக அரசின் பரிசு பெற்றது.**



'தன்னுடல் உறுப்புகளின் அழகைக் கூறிய நோயின் அறிகுறி வெளிப்படுகிறது'

## மனநோயின் அறிகுறிகள்

மனநோயின் அறிகுறிகள் பெரும்பாலும் சிந்தனை, கவனிப்பு, உணர்ச்சி, செயல்முறை, நினைவாற்றல், மனப்பான்மை தொடர்பு முதலியவற்றால் ஏற்படும் குறைபாடுகளாகவே தோன்றும். இவ்வறிகுறிகளைக் குடும்பத்தார் ஆரம்பத்திலேயே கண்டறிந்தால், பிணியாளரைத் தக்க மருத்துவரிடம் உடனடியாக அழைத்துச் சென்று முறையான சிகிச்சை அளிக்கப் பெரிதும் உதவும்.

### சிந்தனையும் குழப்பமும் (Thought Disturbance)

மனநோய் உள்ளோரின் சிந்தனையானது அவரது அறிவிற்கும் அனுபவத்திற்கும் பொருத்தமற்றதாக இருக்கும். பெரும்பாலும் இவர்கள் கற்பனை உலகத்தில் சஞ்சரிப்பார்கள். நிறைவேறாத ஆசைகளைத் தம் கற்பனைகள் மூலம் நிறைவேற்றிக் கொள்வார்கள். இவர்களின் பேச்சில் அகராதியில் இல்லாத புது வார்த்தைகளும் தொடர்பற்ற சொற்களும் நிறைந்திருக்கும். ஒரு விஷயத்தைப் பற்றிப் பேசும்போது அதை முடிக்காமல் சொல்லொன்றை அப்படியே விட்டுவிடுவார்கள். வேறு ஒரு விஷயத்தில் தாவிப் பேசுவார்கள். சொன்னதையே திரும்பத் திரும்பச் சொல்வர். பல விஷயங்களைக் கேட்காமல் கலந்து பேசுவர்.

இது தவிர, ஒரு பொருளைப் பற்றிப் பேசிக் கொண்டிருக்கும்போது அதை விட்டு விட்டுத் திடீரென்று இன்னொரு பொருளைப்பற்றிப் பேசுவார்கள். அதுமட்டுமல்லாமல் பேச்சில் அதிக வேகமும், இரைச்சலும் இருக்கும். இதனால் அவர்கள் என்ன சொல்கிறார்கள் என்பதை அறிந்து கொள்வது மிகக் கடினமாக இருக்கும். சில சமயம் பேசிக்கொண்டிருக்கும்போதே திடீரென்று பேச்சை நிறுத்திவிடுவார்கள். இதற்குக் காரணம் கேட்டால் சரியான பதில் வராது. சில சமயம் கேட்ட கேள்விக்குப் பதில் கூறாமல் மௌனமாக இருப்பார்கள். பின்பு திரும்பத் திரும்பப் பலமுறை அதே கேள்வியைக் கேட்டால், மிகவும் மெதுவாக ஓரிரு வார்த்தைகளில் எவ்வித உணர்ச்சியுமின்றிப் பதில் சொல்வார்கள். அத்துடன் அவர்கள் வெறித்த பார்வை உடையவர்களாகவும் இருப்பார்கள். சில சமயம் லேசான ஞாபக மறதியும், பிறர் சொல்லும் வார்த்தைகளுக்கு அர்த்தம் தெரிந்து கொள்வதில் குழப்பமும், ஒரு பொருளின் பெயரைச் சொல்வதில் சிரமமும் இருக்கும்.

**அசைக்கமுடியாத தவறான நம்பிக்கைகள்**
(Delusions)

சிந்தனைக் குழப்பத்தில் தவறான நம்பிக்கையானது மிகவும் முக்கியமான அம்சமாகும். அதுதான் நோயாளியையும் மற்றோரையும் வெகு சிரமத்திற்கு ஆளாக்கும் அறிகுறி. இத்தகைய நம்பிக்கை நோயாளியின் கல்வி அறிவிற்கும் கலாச்சாரப் பழக்க வழக்கத்திற்கும் சற்றும் பொருந்தாமல் இருக்கும். இந்த நம்பிக்கை தவறானது என்பதைக் காரணங்களோடு விளக்கிச் சொன்னாலும்கூட நோயாளியின் மனதிலிருந்து அதை அகற்ற முடியாது.

மற்றவர்கள் செய்யும் எந்தக் காரியமும் தன்னைத் துன்புறுத்த அல்லது கொலை செய்ய என்று எண்ணி நம்புவது (Persecutory Delusion) தன்னைச் சுற்றியுள்ள ஒவ்வொரு அங்கமும் தனக்குக் கேடு உண்டாக்கவே இருக்கிறது எனக் கருதுவது போன்றவை சந்தேகத்தின் பாற்பட்ட தவறான நம்பிக்கைகளாகும். தான் மிகவும் சக்தி வாய்ந்த மனிதன் என்று என்னால் எதையும் சாதிக்க முடியும் என்றும் சொல்வது தவறான உயர்வெண்ணம் ஆகும். (Grandiose Delusion) உதாரணமாக தான் இயேசுவின் மறு அவதாரம் என்றோ, அல்லது நாட்டின் பிரதம மந்திரி என்றோ தன்னை உயர்த்திக் கூறுவதோடு, அதை முழுமையாக நம்பவும் செய்தல். இதுதவிர, பிறர் தன்னை அடக்கி ஆள்வது போலவும் (Delusion of Control) தன்னைப் பற்றி மற்றவர்கள் அவதூறாகப் பேசுவதாகவும், கெட்ட நோக்கோடு பார்ப்பதாகவும் கூறுவது (Delusion of reference) முதலியன தவறான நம்பிக்கைகளாகும். மேலும் சிலர் தங்கள் மனதில் உள்ள எண்ணங்களை எவரோ கட்டுப்படுத்துவதாகவும், கருவிகள் மூலம் கவர்வதாகவும் அவற்றை வானொலி, தொலைக்காட்சி மூலம் ஒலி பரப்புவதாகவும் எண்ணுவர். வேண்டாத எண்ணங்களைத் தங்கள் மனதில் பிறர் பலவந்தமாகத் திணிப்பதாகவும் கூறுவர். மற்றும் சிலர், தமக்குப் புற்றுநோய், காசநோய், பால்வினை நோய் போன்ற சில பயங்கரமான நோய்கள் இருப்பதாக நம்பித் துன்புறுவர் (Delusion of illness). வேறுசிலர் தாம் உலகத்திலேயே மிகவும் மோசமானவர்கள், கொடும் பாவங்கள் செய்தவர்கள் என்று நம்புவர் (Delusion of sin and guilt) அதனால் தாங்கள் கடுமையான தண்டனைக்குரியவர்கள் என்றும் சொல்லுவர். அதுமட்டுமல்லாமல் அத்தகைய தண்டனை தயாராகிக் கொண்டு இருக்கிறது என்றும், சீக்கிரத்தில் போலீஸ் வந்து அவர்களைப் பிடித்து விசாரித்துத் துன்புறுத்துவார்கள் என்றும், தூக்கில் போடுவார்கள் என்றும் நம்புவர். சில நோயாளிகள் தாங்கள் இறந்துவிட்டதாகவும், தம்மைச் சுற்றி இருக்கும் எல்லாமே உயிரற்றுப் போய்விட்டதாகவும் செயல் இழந்து விட்டதாகவும் (Nihilistic Delusion) கூறுவர். இது தவிர சிலர் தனது மனைவியோ அல்லது காதலியோ நடத்தை கெட்டவர்கள் என்று கூறுவர். தன் உணவிலே விஷம் கலந்துள்ளது என்றும், எதிரிகள் தனக்கு மந்திரம், செய்வினைகள் செய்து தன்னைக் கொல்வதற்கு முயற்சிப்பதாகவும் கூறுவார்கள். அளவுக்கதிகமான சந்தேக முடையவர்களாக நடந்து கொள்வார்கள். (Paranoid Delusion) இதனால் மிகவும் உணர்ச்சிவசப்படுவர்.

சிலர் அர்த்தமற்ற பயம் (Phobia) அவர்களது பயத்தின் அளவிற்கும், பயத்திற்குக் காரணமான விஷயத்திற்கும், மலைக்கும் மடுவிற்கும் உள்ள வித்தியாசம் இருக்கும். இது அவர்கள் மனதிற்கு ஓரளவு தெரிந்தாலும்கூட அப்பயத்திலிருந்து மீள முடியாமல் தவிப்பர். இத்தகைய பயம் ஏதாவது ஒரு குறிப்பிட்ட விஷயத்தில் மட்டும் இருக்கும். உதாரணமாக உயர்ந்த இடங்களான மலைக்குன்றுகள், பல மாடிக் கட்டிடங்கள், திறந்த சமவெளிகள் முதலியவற்றில் நிற்பதற்கும் இருட்டு, தண்ணீர் பற்றியும், தனி அறையில் இருப்பதற்கும் மிகவும் பயமிருக்கும். புதிய மனிதர்களைக் காணுதல் அல்லது ஏதாவது ஒரு மிருகத்தைப் பார்த்தல் போன்றவைகளும் சிலருக்கு மிகுந்த அச்சத்தை அளிக்கும். இதுபோல ஏதாவது ஒரு விஷயத்திற்குத் தேவையற்ற பயம் கொள்ளுதலும் மனநோயின் முக்கியமான அறிகுறியாகும். இது தவிர சிலருக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எவ்வளவுதான் மறக்க முயன்றாலும், தடுக்க முயன்றாலும் முடியாத அளவிற்குச் சில கெட்ட எண்ணங்களும் உணர்ச்சிகளும் (Obsession) மனதிலே வினாடிக்கு வினாடி உண்டாவதுண்டு. அத்தகைய எண்ணங்களை, அவை தவறானவை என்று பிணியாளர் நன்றாக உணர்ந்தாலும்கூட மாற்றமுடியாது. அவ்வெண்ணங்கள் அவ்வளவு சக்தி வாய்ந்தவையாகவும், அவற்றால் மனதிற்கு மிக்க சஞ்சலம் ஏற்படுவதாகவும் கூறுவர். உதாரணமாக மிகவும் நெருங்கிய ஒருவரை, குறிப்பாகத் தனது குழந்தையின் கழுத்தையே நெரித்துக் கொன்றுவிடவேண்டும் என்ற ஒரு எண்ணம் தாயின் மனதில் உண்டாகலாம். இப்பயங்கரமான எண்ணத்தால் தோன்றும் மன உளைச்சலைத் தாங்கவும், அதன் கோரப் பிடிக்குப் பலியாகாமல் தடுக்கவும், தனது மனதை வேறு திசையில் திருப்ப ஏதாவது ஒரு செயலில் ஈடுபடவும் வாய்ப்பு உண்டு. மணிக்கணக்கில் கைகளைச் சுத்தம் செய்வது அல்லது ஏதாவது ஒரு செயலைத் திரும்பத் திரும்ப அர்த்தமில்லாமல் செய்து கொண்டிருப்பது போன்றவை இத்தகைய செயல்களுக்கு உதாரணமாகும். சிலர் தம் உடலின் உறுப்புகளில் நோயிருப்பதாக நம்பி (Hypochondriasis) ஒவ்வொரு நாளும் வெவ்வேறு விதமான அறிகுறிகளைக் கூறுவர். மேற்கூறியவைகள் எல்லாம் சிந்தனைக் குழப்பத்தால் தோன்றும் மிக முக்கியமான மனநோய் அறிகுறிகளாகும். இத்தகைய குழப்பங்கள் மனிதனது மனதிலே உருவாகி, வளர்ந்து, பின்பு வெளிப்படுகின்றன. ஆனால் மன நோயாளி இதை உணர்வதில்லை.

**உணர்ச்சி மாற்றங்கள்**
(Disturbances in Mood)

நவரச உணர்ச்சி மாற்றங்கள் எல்லோரது வாழ்க்கையிலும் சாதாரணமாக நிகழ்வதுண்டு. அவை மனிதனின் கட்டுக்குள் அடங்கி ஒரு நிலைப்பட்டு இருக்கும். ஆனால் மனநோயாளிகளைப் பொறுத்த வரையில், அவ்வித உணர்ச்சிகள் அளவுக்கு அதிகமாகவோ, குறைந்தோ அல்லது அந்தச் சூழ்நிலைக்கும், சந்தர்ப்பத்திற்கும் சற்றும் பொருந்தாமலோ இருக்கும். அதாவது அழவேண்டிய நேரத்தில் சிரிப்பதும், சிரிக்க வேண்டியபோது அழுவதுமான செயல்கள், ஏதாவது ஒரு காரணத்தால் கோபமோ, கவலையோ கொள்ளும் ஒருவர், அந்தச் சூழ்நிலை மாறியவுடன் கோபதாபம் விலகி, பழைய சாதாரண நிலைக்கு வந்துவிடுகிறார். மனநோயாளியின் நிலைமை அப்படியல்ல. அவருக்கு ஏற்படும் உணர்ச்சி மாற்றங்கள் வெகுநாட்கள் வரை, சூழ்நிலை மாறினாலும் மாறாவிட்டாலும் அப்படியே இருக்கும். அறிவுக்கும் சூழ்நிலைக்கும் பொருந்தாத ஒரு சாதாரண விஷயத்திற்குக்கூட மனநோய்க்காட்பட்டோரில் சிலர் மிகவும் சந்தோஷமடைவர். ஏன் மகிழ்ச்சி வெள்ளத்தில் நீந்தவே செய்வர். அது மட்டுமல்லாமல், அளவுக்கு அதிகமான தன்னம்பிக்கையும், உற்சாகமும் கொண்டு, இங்கும் அங்கும் சுற்றியலைந்தும், பேசியும் திரிவர். தங்களைப் பற்றி மிகவும் பெருமையாகவும், சர்வ சக்தி வாய்ந்தவர்கள் என்றும் நம்பி மற்றவர்களிடம் அதை வெளிப்படுத்துவர். மனித சமுதாயத்தைக் காப்பாற்ற வந்த தேவதூதர்போல் நடந்துகொள்வதும், பேசுவதும் இவர்களுக்கு வழக்கம். சிலவேளை ஒரு ஏகாந்தமான நிலைக்குத் தாங்கள் ஆளாகியிருப்பதாகக் கூறி அவ்வாறு நடந்து கொள்வர். சிலர் ஆழ்ந்த கவலையும், மனத்தளர்வும் கொண்டு, தங்கள் வாழ்க்கை, கடலில் மூழ்கிய கப்பல்போல் ஆகிவிட்டது என்று கூறி மீளாத துயரத்தில் ஆழ்வர். தற்கொலை எண்ணங்களும், முயற்சிகளும் இத்தகைய பிணியாளர்களிடம் அதிகம் உண்டு. சிலரிடம் அளவுக்கு அதிகமான பொருத்தமற்ற பயம், பதற்றம், பரபரப்பு, மன அழுத்தம் முதலியன இருக்கும். அல்லது எவ்வித உணர்ச்சியும் இல்லாத மரக்கட்டை போலச் சிலர் இருப்பர். வெறுப்பும், அதேசமயம் விருப்பும் கலந்த உணர்ச்சிகளைச் சிலர் கொண்டிருப்பர். இவை தவிர, சில நோயாளிகள் தங்கள் உடலின் சில உறுப்புக்கள் சுருங்கிப் போவதாகவும், அல்லது பெருத்துவிட்டதாகவும் கருதிக் கவலையுறுவர். மிதமிஞ்சிய கோபம், வெறி, பொறாமை, சந்தேக உணர்ச்சிகளும் சிலருக்குத் தோன்றும். இத்தகைய தீவிர உணர்ச்சிகளால் உந்தப்படும் பிணியாளர் மிகக் கொடூரமாக நடந்து கொள்வர். சில நேரங்களில் கொலையும் செய்து விடுவார். மேற்கூறிய பலவகை உணர்ச்சி மாற்றங்களில் ஏதாவது சிலவற்றை மனநோயிலே காணலாம். திடீரென சந்தோஷமும் அழுகையும் மாறி மாறி வருவதும் உண்டு. மூளைச்சிதைவு நோயில் இது குறிப்பிடத்தக்கது.

**கண்ணோட்டத்தில் மாறுபாடு**
(Perceptual disorder - Hallucinations)

இது பல வகைப்படும். உண்மையான புறத்தூண்டுதல் எதுவுமே இல்லாதபோது அப்படி இருப்பதாக ஐம்புலன்களாலும் உணர்ந்து நம்புதலை இது குறிக்கும். கண், காது, மூக்கு, நாக்கு, தோல் ஆகிய ஐம்பொறிகளில், நோயாளி இல்லாததொன்றை இருப்பதாக உணர்ந்து, அதை நம்பிக் கூறுகிறார். அவ்வுணர்வால் மிகவும் அவதிப்படுகிறார். அவ்வுணர்வுதான் தவறானவை என எவ்வளவு எடுத்துக் கூறினாலும், அவரை நம்பவைக்க முடியாது. புற உலகிலிருந்து இவ்விதமான தூண்டுதல்கள் வருவதாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோயாளி [illegible] உண்மையில் [illegible] ஆழ்மனதில் ஏற்படுகின்ற இவை உருவாகின்றன.

**மாயத்தோற்றம் (Visual Hallucination)**

கண்ணெதிரே எந்தப் பொருளோ, மனிதரோ, மிருகமோ இல்லாத நிலையிலும் நோயாளி தனக்கு முன் மனிதர்கள் வந்து நிற்பதாகவும் [illegible] இறைவனோ [illegible] அல்லது பேய், சிங்கம் [illegible] காட்சிகளோ [illegible] தோற்றமளிக்கும். அதை அவர்கள் சொல்லும்போது உண்மையாகத் தோன்றும். எனினும் அது உண்மையல்ல. ஆனால் அவர்கள் மனதில் அவ்வாறு தோன்றுகிறது. இந்த மருட்சிக்கும் (illusion) உள்ள முக்கிய வேறுபாடு என்னவெனில், மருட்சியில் எதிரில் பொருள் இருக்கும். ஆனால் அதைப் பிழையாக விளங்குவதில் தான் தவறு இருக்கும். உதாரணமாக [illegible] இருக்கும் கயிற்றைப் பாம்பு என மருட்சி. எதுவுமே எதிரில் இல்லாதபோது 'அதோ பாம்பு வருகிறது' என்பது மாயத்தோற்றம்.



**மாயஒலி (Auditory Hallucination)**

[illegible] ஒலியின் இருப்பை உணர்ந்து, [illegible] பல்வகை ஒலிகள், அல்லது இசை முதலியன காதில் கேட்பது ஒருவகை. மனிதக் குரல்களைக் கேட்பது மற்றொரு வகை. யாருமே அருகில் இல்லாதிருந்தும் யாரோ பேசுவதுபோல நோயாளிக்குக் கேட்கும். சில சமயம் அக்குரல் மிகத் தெளிவாக இருக்கும். நோயாளிக்கு 'இதைச் செய் அல்லது அதைச் செய்யாதே' என்று கட்டளை இடும். நோயாளி இந்தக் கட்டளைக்குக் கட்டுப்பட்டு அதன்படி நடக்கலாம். அல்லது அதைப் பொருட்படுத்தாமல் உதாசீனப்படுத்தலாம். சில சமயம் அந்தக் குரல்கள் நோயாளியின் நடவடிக்கைகளைப் பற்றிக் குறை கூறியோ அல்லது புகழ்ந்தோ விமர்சனம் செய்யும். நம்பிக்கையூட்டும். [illegible] பற்றியும் குரல்கள் பேசுவதாகச் சிலர் கூறுவர். குரல்கள் [illegible] கூறுகின்றன என்று [illegible] முடியவில்லை எனவும் கூறுவர். அக்குரல்களுக்கு முக்கியத்துவம் தருவதில் நோயாளிகளுக்குள்ளே



வேறுபாடுகள் உண்டு. சிலர் அவற்றை அலட்சியப்படுத்தி வேறு [illegible] மறக்க முயல்வர். ஆனால் ஒரு சாரார் இக்குரல் தொடர்ச்சியாகக் கேட்பதால் தமது தினசரி வாழ்க்கையில் எதையும் செய்ய முடியாமல் சிரமப்படுவர். தீவிரமான உண்மை [illegible] இவ்விதப் போலிக் குரலைப் பகுத்தறிய [illegible] பயமும், பரபரப்பும் அடைந்து ஆழ்ந்த கவலைக்குள்ளாவர். சிலர் இதைப் பொறுக்க முடியாமல் தற்கொலை செய்து கொள்ள முயல்வர். அல்லது குரல்களின் கட்டளைக்கு அடிபணிந்து கொலை புரியவும் துணிவர். இவ்விதமாகத் தாங்கள் கேட்கும் குரலுக்குக் காரணம் மந்திரம், மாயம் அல்லது பேய் பிசாசுகளின் சேஷ்டை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றும் கூறுவர். சிலர் இதைத் தொலைக்காட்சி, வானொலி, மின்காந்த அலைகள் போன்றவை மூலம் தம்மைத் தன்னுடைய அனுப்புகிறார் செய்திகளாகக் கருதுவர். ஆனால் இவையெல்லாம் ஆபத்தானது என்னவென்றால் தன் பக்கத்திலுள்ள ஒருவர்தான் கேவலமாகப் பேசுகிறார் என்று எண்ணி அவர் மீது பாய்ந்து அடித்து நொருக்க ஆரம்பிப்பதுமுண்டு.

**போலி வாசனைகள்** (Olfactory Hallucination)

இவைகள் பலவிதம். இருக்க லாம். அழுகிய பொருட்களின் வாசனை அல்லது மலங்களின் வாசனை இவற்றில் ஏதாவது ஒன்றைப் பிணியாளர் நுகர்வதாகக் கூறுவர். சிலர் தங்களை யாரோ ஒருவர் நச்சுப்புகையைச் செலுத்திக் கொல்ல முயலுவதாகவும் கூறுவர். சிலர் விபூதி நறும் வாசனையோ, பெயின்ட் வாசனையோ, கற்பூர வாசனையோ உண்டாவதாகக் கூறுவர். ஆனால் இத்தகைய வாசனைகளுக்குக் காரணமான பொருட்கள் எதையுமே சுற்றுப்புறத்தில் இருக்காது.

**போலிச்சுவை** (Gustatory Hallucination)

வாயில் எவ்வித உணவுப் பொருளும் இல்லாத நிலையிலும் சிலருக்கு இனிப்பு, புளிப்பு, கசப்பு போன்ற சுவையுணர்வுகள் திடீரென்று தோன்றுவதாகக் கூறுவர். இதுவே போலிச் சுவையாகும். பெரும்பாலும் மூளைப் பாதிப்பால் ஏற்படும் சில நோய்களையடுத்து இவ்வுணர்வுகள் தோன்றுகின்றன.

**போலித் தொடு உணர்ச்சி** (Tactile Hallunication)



சிலருக்குச் சிறு பூச்சிகளும், பூச்சிகளும் உடம்பில் ஊர்வதாகத் தோன்றும். சிறு மிருகங்கள் தங்களது உடலில் ஊர்ந்து மிருதும் ஊர்ந்து செல்வதாக மற்றும் சிலர் கூறுவர். குறிப்பாக மதுப்பழக்கத்தினால் ஏற்படும் முதிர்மனநோயில் இவ்வறிகுறி தோன்றும். இன்னும் சிலர் ஆண்களாக இருப்பின் அவர்களை யாரோ காம உணர்ச்சிக்கு ஆளாக்கு வதாகவும் அவர்களது இந்திரியத்தை அவர்களிலிருந்து பிரித்து எடுப்பதாகவும் கூறுவர். பெண்களாயின் யாரோ தங்களைக் கற்பழிப்பதாகவும், ஆண் குறியைத் தங்களது உடம்பினுள் நிரந்தரமாக வைத்துவிட்டதாகவும் கூறுவர். சிலர் தொண்டையிலே ஒரு கட்டி இருந்து அவை தங்கக் கொல்லுகிறார் என்பதாகவோ அல்லது யாரோ கத்தியைத் தொண்டைக்குள் செருகி விட்டதாகவோ கூறுவர்.

**ஞாபகசக்திக் குறைபாடுகள்**
(Memory disturbances)

மனநோயில் சிலருக்கு ஞாபக சக்தி சிறிதளவோ அல்லது முழுமையாகவோ குறைதல் உண்டு. இவர்களுக்கு ஒரு விஷயத்தைச் சரியாகப் புரிந்து கொள்வதில் சிரமம் இருக்கும். சிலர் தங்கள் ஞாபக மறதியால் ஏற்பட்ட இடைவெளியை நிரப்பத் தம்மையறியாமலேயே புனைந்துரைப்பர். (Confabulation). ஒரு சிலர் ஏற்கெனவே நன்கு அறிமுகமான இடத்தையும் மனிதர்களையும் புதிதாகப் பார்ப்பது போலவே அல்லது பழக்கம் இல்லாத முன்பின் அறியாத இடத்தையும் மனிதர்களையும் ஏற்கெனவே தெரிந்தது போலவோ உணர்வர். சிலருக்குச் சமீபத்தில் நடந்த நிகழ்ச்சிகள் யாவும் ஞாபகத்திற்கு வராமலிருக்கும்.

**செயல் மாற்றங்கள்**
(Disturbance in Activity)

பேசும்போது சொன்ன வார்த்தை அல்லது விஷயத்தைத் திரும்பத் திரும்பச் சொல்லுதல், ஒருவர் செய்வதை அப்படியே திரும்பச் செய்தல், சிலையைப்போல் இருந்த இடத்திலேயே உடல் விறைப்போடு வெகுநேரம் இருத்தல். சொன்னவுடன் அப்படியே அமைவின்றி ஒரு காரியத்தைச் செய்தல், சொல்வதற்கு எதிராக நடத்தல் ஆகிய இவை எல்லாம் மனநோய் உற்றவரிடம் ஏற்படும் செயல்மாற்றங்கள் ஆகும். இவை தவிர பரபரப்பு, பொருட்களை நாசம் செய்தல், தூக்கத்தில் எழுந்து நடத்தல், ஏதாவது ஒரு பொருத்தமற்ற காரியம் செய்தல் முதலியவையும் சில செயல் மாற்றங்களாகும்.

ஏதாவது ஒரு செயலைத் திரும்பத் திரும்பக் கட்டுப்படுத்த முடியாமல்தொடர்ந்து செய்தல் ஒரு முக்கியமான செயல் மாற்றமாகும். உதாரணமாக மணிக்கணக்கில் கையைச் சுத்தம் செய்தல், குளித்தல்


வேண்டியவரும் தன்னைப் பற்றி மிகவும் பெருமையாக நினைத்துச் செயலாற்றுதல், ஒதுங்கி இருத்தல், பழக்கவழக்கத்தில் மிதமிஞ்சிய ஈடுபாடு, தவிர்க்க முடியாத திருட்டுப் பழக்கம், தேவையில்லாமல் தனது தலைமுடியைப் பிடுங்குதல், அளவிற்கதிகமாகத் தீனி உண்பதும் பக்தி முதலிய செயல்கள் மனநோயில் ஏற்படும் குறிப்பிடத்தக்க சில செயல் மாற்றங்களாகும். அருவருக்கத் தக்க நடத்தையும் இதில் அடங்கும்.

## சுய உணர்வில் மாற்றங்கள்
(Disturbances Consciousness)

இது தன்னையும் தன் சுற்றுப்புறத்தையும் உணர்ந்து கொள்வதில் நோயாளருக்கு ஏற்படும் பல்வகைக் குழப்பங்களைக் குறிக்கும். இவ்வுணர்வு மாறுதல்களை நான்கு நிலைகளாகப் பிரிக்கலாம்.

### முதல் நிலை - சிறிதளவு மனக் குழப்பம்

கவனக்குறைவை மன இயக்கமும் இந்நிலையில் குறைந்து இருக்கும். சிந்திப்பதில் கஷ்டமும் எதிலும் கவனம் செலுத்த முடியாமலும் இருக்கும். சொல்லைப் புரிந்து கொள்வதில் தாமதம் ஏற்படும். தானே ஒன்றைச் செய்ய வேண்டும் என்ற எண்ணம் இல்லாதிருந்தாலும், சிறு காரியம் செய்தாலும் உடலும் மனமும் மிகவும் தளர்ச்சி அடையும். இந்நிலையில் உண்டு, உறக்கம் இல்லாமல் மாறாட்ட நிலையும், தெளிவான மனநிலையும் மாறி மாறி நோயாளியிடம் காணப்படுவதால் ஆடும் பழக்கத்தினால் ஏற்பட்ட மனக் குழப்ப நிலையை அறிந்து கொள்ள இயலாமல் போகலாம். நோயாளி எளிதான கேள்விகளுக்கே பதில் கூறுவார். சிக்கலான கேள்விக்கு அவரால் பதில் கூற இயலாது. அவரால் தொடர்ந்து உரையாட முடியாது. சுற்றுப்புறச் சூழ்நிலையை அவரால் முழுமையாக உணர்ந்து கொள்ளவும் முடியாது.



### இரண்டாம் நிலை - மிதமான மனக்குழப்பம்

இந்நிலையில் சுற்றுப்புறமும், சூழ்நிலையும் நோயாளருக்கு மறந்து போகிறது. நேரத்தைச் சரியாக உணர முடிவதில்லை. இடம் பொருட்களை அடையாளம் கண்டு கொள்ளவும் முடிவதில்லை. மிகவும் எளிதான கேள்விக்குக்கூட கஷ்டப்பட்டுப் பதில் சொல்வார். அப்போதும் மிகவும் சுருக்கமாக இருக்கும். எதிரிலிருப்பவர் ஒன்றுமே பேசாமல் இருந்தால் நோயாளி உடனே தூங்க ஆரம்பிப்பார்.

### மூன்றாம் நிலை - அதிக அளவு மனக்குழப்பம்

இரண்டாம் நிலையின் குறிகுறிகள் அனைத்தும் இந்நிலையில் காணப்படும். மேலும் அச்சத்துக்குரிய போலித் தோற்றங்கள், ஒலிகள், இந்நிலையில் தோன்றுகின்றன. அதனால், அவர்கள் பயந்து வீட்டை விட்டு ஓட முயல்வர். ஆனால் அவர்களுக்குக் கைகால்கள் சரிவர இயங்காததால் சில சமயங்களில் கீழேவிழ நேரலாம். எப்பொழுதும் பதற்றத்துடனும், பரபரப்புடனும் இருப்பர். இவரைத் தடுத்து உட்காரவோ, படுக்கவோ வைக்க முயன்றால் கடுங்கோபமுற்று ஆத்திரப்பட்டு அவரைத் தாக்க முயல்வர். இந்நிலையே ஜன்னி எனப்படுகிறது.

### நான்காம் நிலை - சுய உணர்வு அற்றுப்போதல்

இந்நிலையில் நோயாளியின் சுயஉணர்வு மோசமடைவதால் எல்லாவிதமான செயல்களும் பாதிக்கப்படுகின்றன. பேச்சு நின்று போகிறது. லேசான முனகல் மட்டும் இருக்கலாம். முழுச் சுய உணர்வும் அற்றுப் போய், பலவிதமான தூண்டுதல்களுக்கும் பதில் இல்லாத நிலையை அடைவர். அப்பொழுது இதய ஓட்டமும், சுவாசமும் மட்டுமே இருக்கும். இந்நிலையில் இருந்து மீண்டும் நினைவு திரும்பாமல் நோயாளி மரணமடைய நேரலாம்.

## தூக்கக் குறைபாடுகள்
(Sleep Disturbances)

மனநோய் ஆரம்பிக்கும்போது பலவிதத் தூக்கக் குறைபாடுகள் ஏற்படுவது மிகவும் குறிப்பிடத்தக்க அறிகுறியாகும். தூக்கமின்மை, அடிக்கடி தூக்கத்திலிருந்து எழுதல், அளவிற்கு அதிகமான தூக்கம், பகலில் பேசிக்கொண்டு அல்லது ஒரு வேலையைச் செய்துகொண்டு இருக்கும்போது தவிர்க்க முடியாது அசைவிழந்துத் தூக்கம் வருதல் போன்றவைகள் சில தூக்கக் குறைபாடுகள் ஆகும். மேலும் இரவு வெகு நேரம்வரை தூக்கமின்றி இருந்து பின் தூங்குதல், அதிகாலையில் விடிவதற்கு முன்பே (3 அல்லது 4 மணிக்கே) எழுந்து தூக்கம் கெட்டு மீண்டும் உறங்காமல் தவித்தல் முதலியவையும் தூக்கக் குறைபாடுகளாகும்.

## பேச்சு, எழுத்துக் குறைகள்
(Distubances in Speech and Writing)

### பேச்சுக்குறை

மனநோயாளியின் பேச்சு பலவகையில் குறைந்தோ, கூடியோ அல்லது இல்லாமலோ இருக்கலாம். பேச்சு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருத்தமற்று, கோர்வையின்றிப் பொருளற்று இருக்கும். கேட்ட கேள்விகளுக்கு நேரடியாகப் பதிலைச் சொல்லாமல் சுற்றி வளைத்துத் தேவையற்ற விஷயங்களை எல்லாம் பேசி, பின்பு பதிலைச் சொல்லுதல் போன்ற பலவிதமான குறைகளையும் இவர்களிடம் காணலாம். அல்லது அளவிற்று அதிகமாக, தொடர்பற்ற வகையில் பேசுதலும் உண்டு. சில சமயம் நாட்கணக்கில் மௌனமாக இருப்பர். ஆனால் இந்நிலையிலுள்ளோரின் அறிவும், ஞாபக சக்தியும் மிகவும் தெளிவாக இருக்கும். உன்னித்து நோக்கி, தன்னைச் சுற்றி நடக்கும் விஷயங்களை அறிந்து, மனதில் நிறுத்தி, பின்பு நோயிலிருந்து மீளும்போது அவைகளையெல்லாம் பிறர் மறந்திருந்தாலும்கூட மிகத் துல்லியமாக விளக்கிக் கூறும் ஆற்றல் அவர்களிடம் அப்படியே இருக்கும். எனவே இத்தகைய 'மௌனி' களிடம் பிறர் பேசும்போதும், பழகும்போதும் மிகவும் கவனமாக இருக்க வேண்டியது முக்கியமாகும்.

**எழுத்துக் குறை**

இவர்கள் எழுதும்போது திரும்பத் திரும்ப எழுதியதையே எழுதிக் கொண்டிருப்பார்கள். அவர்கள் எழுதிய விஷயத்தைப் பிறர் புரிந்து கொள்ள முடியாத அளவிற்குத் தொடர்பில்லாமலும், பொருளில்லாமலும் இருக்கும். வழக்கத்தில் இல்லாத புதுப்புது வார்த்தைகளையெல்லாம் உபயோகப்படுத்துவார்கள். விநோதமான முறைகளில் காகிதத்தின் ஓரங்களில் எழுத ஆரம்பித்து மையத்தில் முடிப்பார்கள். (Spiral Writing) இது தவிர மனம்போன போக்கில் பிறர் புரிந்து கொள்ள இயலாத முறையில் படங்கள் வரைதலும் உண்டு. யார் மேலாவது சந்தேகப்பட்டு உயர் அதிகாரிகளுக்கும், மந்திரிகளுக்கும் மனு போட்டுக் கொண்டிருப்பார்கள். எதையாவது படிக்க ஆரம்பித்தால் மணிக்கணக்கில் முதலில் ஆரம்பித்த பக்கத்தையே படித்துக் கொண்டிருப்பார்கள்.

**அறிவிலும், பண்பியல் தொகுப்பிலும் குறைகள்**
(Disturbances in Intelligence and Personality)

கவனம், சூழ்நிலையைப் புரிந்து கொள்ளும் ஆற்றல், மனித நுட்பம், கற்றுக் கொள்ளுதல், கவனம், மனத்தை ஒரு நிலையில் நிறுத்தல், போன்றவை இத்தலைப்பில் அடங்கும். இவை அனைத்துமோ, அல்லது சில பகுதிகளோ மூளைச் சீரழிவால் (Dimentia) ஏற்படுகின்றன. அறிவிலும், பண்பியல் தொகுப்பிலும் (Personality) மனநோயாளியிடம் மாறுதல் ஏற்படுவதுண்டு. ஒரு பொருளைப் பற்றி அறிந்து கொள்வதிலும், ஞாபகத்திற்குக் கொண்டு வருவதிலும், பழைய அனுபவங்களைக் கொண்டு ஒரு காரியத்தைத் திட்டமிட்டுச் செயலாற்ற முயல்வதிலும், மனநோயாளிக்கு மிகுந்த சிரமம் ஏற்படும். அன்றாட வாழ்க்கையில் கடைப்பிடிக்க வேண்டிய சுத்தம், சுகாதாரம், உணவுப் பழக்க வழக்கங்கள், உடை அணிதல், மற்றவர்களிடம் பழகும் விதம் போன்ற பல்வேறு காரியங்களிலும் இவர்களிடம் குறைகள் இருக்கும். இவ்வத்தியாயத்தில் அறிகுறிகளைப் பற்றி விளக்கும்போது சில அறிகுறிகளை மீண்டும் மீண்டும் கூறியிருப்பது அவற்றின் முக்கியத்துவத்தை வலியுறுத்தவே ஆகும். மேற்கூறிய அறிகுறிகளின் பல்வேறு தொகுப்புகள் மனநோயில் ஏற்பட வாய்ப்புண்டு. அவைகளிலும் எல்லாமே ஒரே நோயாளியிடம் இருக்க வேண்டுமென்று அவசியமில்லை. ஆனால் ஒவ்வொரு விதமான மனநோய்க்கும் அதற்குத் தகுந்த அறிகுறிகள் தென்படும். எனவே இதே அறிகுறிகள் குறிப்பிட்ட நோய் வகைகளைப் பற்றி விளக்கும் போதும் மீண்டும் கூறப்படுவதைத் தவிர்க்க இயலாது. ஓரிரு அறிகுறிகளே முதலில் தோன்றலாம். எனவே ஒரேயொரு அறிகுறியாக இருப்பினும் அதைக் குடும்பத்தினர் மிகவும் கவனமாக அறிந்து, உடனே மனநல மருத்துவரிடம் அழைத்துச் சென்று, தகுந்த ஆலோசனை பெற்றுச் சிகிச்சை அளிக்க முயலவேண்டும். இவ்வாறு செய்தால் நோய் முற்றிலும் குணம்பெற அதிக வாய்ப்பு உண்டு. இவ்வாறு இல்லாமல் மந்திரம், மாயம் என்றோ பேய் பிசாசு என்றோ நினைத்துக்கொண்டு வீணாகப் பணத்தையும் காலத்தையும் விரயம் செய்து, நோயையும் முற்றவைத்து நோயாளிக்கும் குடும்பத்தினருக்கும் பலவிதத்தில் கஷ்டங்களை உண்டாக்கிக் கொள்ளக்கூடாது. காலங்கடந்த சிகிச்சை எதிர்பார்க்கும் பலனை அளிப்பதில்லை.

**பல எழுத்தாளர்களில் இருந்து துல்லியமான வாக்குகளுடையனவும் வாசகங்களுடையனவும் கருத்துக்களுடையனவும் ஆன சேகரிப்பை குழந்தைகளினுடைய தலைக்குள் குத்தித் திணிப்பதல்ல சரியான கல்வி. அவர்களுடைய அறிந்து கொள்ளக்கூடிய திறமையை வெளியுலகிற்குக்கொண்டு வரவேண்டும். அப்படிச் செய்தால் ஒரு மரத்திலுள்ள மொட்டிலிருந்து இதழ்களும் பூக்களும் காய்களும் புறப்படுவதைப் போலஅவர்களுடைய மதில் இருந்தும் உயிரோட்டமுள்ள நீரூற்றுஉற்பத்தியாகும்**

***- (ஜோன் ஆமோஸ் கொமேனியஸ்) த கிரேட் டைடாக்டிக் 1649)***




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வி மாற்றம் பற்றிய சமூகவியல் மாதிரிகள்



கந்தையா சண்முகலிங்கம்

ஒரு சமூகத்தில் கல்விமாற்றம் ஏன் ஏற்படுகிறது அம்மாற்றம் எப்படி ஏற்படுகிறது என்பவை அடிப்படையான கேள்விகள். ஒரு நாட்டின் கல்வி வரலாற்றை எடுத்துப் பார்த்தால் சில கால கட்டங்களில் கல்வியில் பெரும் பாய்ச்சல் போன்ற முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. ஒரு பொதுத்தன்மை முழுநாட்டையும் எடுத்து நோக்கும்பொழுது சில பிராந்தியங்களில் கல்வி நிலையில் பேதங்கள் நிலவியிருக்கும். நாடு பொதுவான கல்வி முன்னேற்றத்தை எட்டிய வேளை சில பிராந்தியங்கள் பின்னடைந்தது ஏன்? என்ற கேள்வி எழுகிறது. உதாரணமாக மலையகம் கல்வியில் தேக்கமான நிலையிலிருந்த காலத்தில் நாட்டின் பொதுவான முன்னேற்றம் இருந்தது. 1980 களில் மலையகத்தில் ஒரு குறிப்பிடத்தக்க மாற்றம் ஏற்பட்டது. அதன் தொடர்ச்சியாக இன்று மாற்றம் நிகழ்கிறது அல்லவா? மாற்றம் ஏன் நிகழ்கிறது? எப்படி நிகழ்கிறது? என்பன இப்பின்னணியில் அடிப்படையான கேள்விகள் என்பதில் ஐயமில்லை. அஞ்சலா லிட்டில் (Angela W. L. LITTLE) என்னும் கல்வித்துறைப் பேராசிரியர் இலங்கை மலையகத்தின் கல்வி வரலாற்றை ஆராய்ந்து மிகச் சிறந்த நூல் ஒன்றை ஆங்கில மொழியில் எழுதியுள்ளார். உழைப்பால் கல்வியில் உயர்வு என்னும் தலைப்பில் இந்நூலினை இலங்கைச் சமூக விஞ்ஞானிகள் சங்கம் (SSA) தமிழில் பிரசுரித்துள்ளது. இம்மொழி பெயர்ப்பை பேராசிரியர் சோ. சந்திரசேகரம் செய்துள்ளார். ஆங்கில நூலின் தலைப்பு Labouring To Learn ஆகும். மலையகத்தின் கல்வி வரலாற்றை ஆராயும் அஞ்சலா லிட்டில் அம்மையார் கல்வி மாற்றம் ஏன் ஏற்படுகிறது? எப்படி ஏற்படுகிறது? என்ற பொதுப்பட்ட கோட்பாட்டுப் பிரச்சினையை முன்வைக்கிறார். கல்வி மாற்றம் பற்றிய கோட்பாடுகள் எவை? அவை மாற்றம் பற்றி என்ன சொல்கின்றன? இக்கோட்பாடுகளின் துணையுடன் நாம் ஒரு கோட்பாட்டு வரை சட்டத்தை (Theoretical Framework) வகுத்துக்கொள்ள முடியுமா? இவ்வாறான ஒரு வரை சட்டகத்தின் துணையுடன் மலையகத்தின் கல்வி வரலாற்றை ஆராயலாமா? என்பன போன்ற சிந்தனையைத் தூண்டும் கருத்துக்களை அஞ்சலா லிட்டில் நூலின் முதலாவது அத்தியாயத்தில் முன்வைக்கிறார். அவருடைய நூலின் முதலாவது அத்தியாயத்தில் கல்வி மாற்றம் பற்றிய மாதிரிகள் (Models of Educational Change) என்ற பகுதியில் (ஆங்கில நூல் பக்கம் 21 - 28 தமிழ் மொழி பெயர்ப்பு பக்கம் 31 - 13) கூறப்படும் கருத்துக்களை சுருக்கியும் தழுவியும் இக்கட்டுரை வரைந்துள்ளேன். அஞ்சலா லிட்டில் கல்வி மாற்றம் பற்றிய இருவகையான கோட்பாட்டு மாதிரிகள் உள்ளன என்று கூறுகிறார். அவை



i. பொருளாதார அபிவிருத்தி என்ற துறை சார்ந்தவர்கள் கூறிய கோட்பாட்டு மாதிரிகள்.

ii. சமூகவியலாளர்களின் கோட்பாடுகள்.

அபிவிருத்தியில் கோட்பாட்டு மாதிரிகள் கல்வி விருத்தியை எப்படி ஏற்படுத்தலாம் என்ற வழிமுறைகளை

தமிழாக்கம் : சோ. சந்திரசேகரம். இரண்டாவது பதிப்பு (2002), சமூக விஞ்ஞானிகள் சங்கம். கொழும்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


விடுத்துக் கூறுகின. அவற்றின் படி கல்வியை எப்படி முன்னேற்றலாம், விருத்தி செய்யலாம். அதன் மூலம் பொருளாதார வளர்ச்சியை எப்படி உண்டாக்கலாம் என்பவற்றில் சென்றது. பொருளியலாளர்கள் எதிர்காலம் பற்றியே சிந்திப்பவர்களாதலால் அவர்கள் மாற்றத்தை நோக்கி நாட்டை முன்னேற்றும் செல்லும் வழிவகைகளைக் கூற முற்பட்டனர். ஒரு பிரதேசத்தின் கல்வி வரலாற்றை எடுத்து அங்கு மாற்றங்கள் எப்படி நிகழ்ந்தன? ஏன் நிகழ்ந்தன என்பதற்கு பொருளாதார அபிவிருத்தி மாதிரிகள் பிரயோசனமற்றவை அல்லது அவற்றின் பயன் குறைவு என்று கூறலாம். சமூகவியல் மாதிரிகள் மாற்றம் எப்படி ஏற்பட்டது என்பதில் கூடிய அக்கறை கொள்கின்றன. இம்மாதிரிகளில் மாற்றம் எப்படி நிகழ்கிறது? ஏன் நிகழ்ந்தது என்பதற்குப் பதில் கிடைக்கிறது. ஆனால் மாற்றத்தை எப்படிக் கொண்டுவரலாம் என்ற விடயத்திற்கு அதிக அழுத்தம் கொடுப்பதில்லை. மாற்றம் என்பது முன்னேற்றம், வளர்ச்சி என்ற கருத்திலேயே நோக்கப்படும். இங்கு மாற்றம் தேக்கம் அல்லது கல்வி முன்னேற்றம் இன்மையும் நிகழலாம். கல்வியில் எதிர்மறையான வீழ்ச்சியும் ஏற்படலாம். மற்றும் பிறிதொரு புறமும் சமூகவியல் மாதிரிகள் நேர்முறை மற்றும் அல்லது முன்னேற்றம் பற்றிய கணிப்புக்கு செலுத்துவதில்லை. தேக்கம் அல்லது பின்னடைவை இம்மாதிரிகளின் துணையுடன் ஒப்பீடு செய்து பரிசீலிப்பதற்கும் இம்மாதிரிகள் உதவுகின்றன. கல்வி மாற்றம் பற்றிய சமூகவியல் மாதிரிகள் இருவகைப்பட்டன.

i. கல்வியைப் பொருளாதார, சமூக, அரசியல் மாற்றங்களின் விளைபொருளாகக் காணும் கோட்பாட்டு மாதிரிகள்.
ii. சமூகம் என்ற ஒட்டுமொத்த முறைமையில் (System) கல்வி சுயாதீனம் கொண்ட ஒரு கூறாக உள்ளது. கல்வியைப் பொருளாதார, சமூக, அரசியல் மாற்றங்களின் விளைபொருளாகப் பார்க்காமல், அதற்கென ஒரு சுயாதீனம் உண்டு என்று பார்க்கின்றதும் என்று கூறும் கோட்பாட்டு மாதிரிகள்.

இரண்டாவது மாதிரி முதலாவது மாதிரியில் இருந்து வேறுபடுவதை ஆர்ச்சர் விட்டுள் பின்வருமாறு விளக்குகிறார். இரண்டாவது மாதிரியில் கல்விச் செயல்முறை சுயாதீனம் (automomy) உடையதாக நோக்கப்படுகிறது. மாற்றத்திற்கான உந்துதல் கல்வி முறைமைக்குள்ளேயே இருந்தும் வரலாம். கல்வியில் ஏற்படும் மாற்றம் சமூகமாற்றம், பொருளாதார மற்றும் ஏனைய பிறதுறை மாற்றங்களையும் கொண்டு வரலாம். ஏனைய துறை மாற்றங்களுக்கான உந்துதல் கல்வி மாற்றத்தினால் உண்டாகலாம். (ஆர்ச்சர் நூல் பக். 22)

**மார்க்சீய மாதிரிகள்** (Marxist Models)

மேலே கூறிய இருவகையான சமூகவியல் மாதிரிகளின் முதல் வகையானதை மார்க்சீய மாதிரிகள் என்றும் கூறலாம். ஏனெனில் இம்மாதிரிகளில் கல்வி ஓர் விளைபொருள், அது சமூக அடித்தளத்தின் செல்வாக்கினால் நிர்ணயிக்கப்படுவது என்ற கருத்து உள்ளடங்கி உள்ளது. மார்க்சியக் கோட்பாட்டின் படி பொருண்மிய அடித்தளம் (Material Base), என்று



என்றும், பண்பாடு, அரசு, கருத்துக்கள், சமயம், கல்வி போன்ற விடயங்களை உள்ளடக்கிய மேற்தளம் (Super Structure) என்றும் இரு தளங்கள் உள்ளன. பொருண்மிய அடித்தளத்தில் உள்ளடங்கும் உற்பத்திமுறை, உற்பத்தி உறவுகள் என்னும் இரண்டு விடயங்களும் நிர்ணய சக்திகளாக உள்ளன. இவைதாம் மேற்தளமான அம்சங்களின் போக்கைத் நிர்ணயிக்கும் ஆற்றல் உடையவை. முதலாளித்துவம் என்ற உற்பத்திமுறை. அம்முறையின் உற்பத்தி உறவுகள் என்ற இரண்டாலும் கல்வி நிர்ணயிக்கப்படுகிறது. பவுல்ஸ் மற்றும் ஜின்டிஸ் (Bowls and Gintis) என்ற இருவர் அமெரிக்காவில் முதலாளித்துவத்திற்கும் கல்விக்கும் உள்ள தொடர்பை விளக்கும் மாதிரி ஒன்றை முன்வைத்தனர். இதனை பவுல்ஸ் அன்ட் ஜின்டிஸ் மாதிரி என்று கூறுவர். இம்மாதிரி மார்க்சீய மாதிரிகளுக்கு மிகச் சிறந்த உதாரணம் ஆகும் என்று அங்கலை விட்டுள் கூறுகிறார். பவுல்ஸ் மற்றும் ஜின்டிஸ் அமெரிக்கக் கல்வி வரலாற்றில் ஏற்பட்ட முக்கிய திருப்புமுனைகள் எவ்வாறு அமெரிக்காவின் முதலாளித்துவ உற்பத்திமுறை, முதலாளித்துவ சமூக உறவுகள் ஆகியவற்றோடு சம்பந்தப்படுகின்றன என்பதை விளக்கியுள்ளனர். அமெரிக்காவில் முதலாளித்துவ வளர்ச்சியின்போது சில தொழில்துறைகள் வேகமாக வளர்ந்தன. வேறு சில தொழில்கள் ஒப்பீட்டளவில் குறைந்த வளர்ச்சியைப் பெற்றன. குறைந்த வளர்ச்சியுடைய தொழில்களில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூலியின் மட்டம் குறைவாக இருந்தது. இத்தொழில்களில் இருந்த தொழிலாளர்கள் கூலி உயர்வாக உள்ள தொழில்களுக்கு இடம் பெயர்ந்தனர். அத்தோடு வெளிநாடுகளில் இருந்து தொழிலாளர்கள் அமெரிக்காவிற்கு வேலை தேடிச் சென்றனர். உற்பத்தி முறையின் மாற்றங்கள் உற்பத்தி உறவுகளை, குறிப்பாக, தொழிலாளர்கள் - முதலாளிகள் உறவைப் பாதித்தன. கூலி தொடர்பான முரண்பாடுகள் நெருக்கடிகளை ஏற்படுத்தி கூலி தொடர்பான நெருக்கடி கல்விமுறையைப் பாதித்தது. எந்தத் தொழில்களுக்கு உழைப்பாளர் நிரம்பல் அதிகம் உள்ளது, எத்தகைய கல்வியை தொழிலாளர்களுக்கு வழங்க வேண்டும் என்ற விடயங்கள் பொருளாதார சமூக உறவுகளினால் நேரடியாகத் தீர்மானிக்கப்பட்டன. அஞ்சலா லிட்டில், பவுல்ஸ் மற்றும் ஜின்டிஸ் கூற்றொன்றை மேற்கோளாகத் தருகிறார்.

> *'சார்பளவில் தேங்கி நிற்கும் பொருளாதாரத் துறைகளில் இருந்து அல்லது வெளிநாடுகளில் இருந்து வந்து சேருகின்ற புதிய தொழிலாளர் குழுவினரது வேதன ஊழிய முறையின் ஒன்றிணைவுடன் தொடர்பு பட்டதாகவே ஒவ்வொரு முக்கிய சீர்திருத்த காலமும் அமைந்திருந்தது. (Bowles and Gintis 1977 : 203) (தமிழ் மொழிபெயர்ப்பு நூலின் பக் 33 இல் உள்ளபடி)*

பவுல்ஸ் அன்ட் ஜின்ட்டிஸ் அமெரிக்கக் கல்வி முறையில் ஏற்பட்ட மூன்று முக்கிய திருப்பு முனைகளை அமெரிக்காவின் பொருண்மிய அடித்தளத்துடன் தொடர்புபடுத்திக் காட்டுகிறார்கள். அமெரிக்க கல்வி முறையில் ஏற்பட்ட மூன்று முக்கிய திருப்பங்களையும், அதற்கு ஆதாரமான பொருண்மிய அடித்தளத்தையும் பவுல்ஸ் மற்றும் ஜென்ட்டிஸ் பின்வருமாறு அடையாளப்படுத்துகிறார்கள்.

1. உள்நாட்டின் சிவில் யுத்தத்திற்கு முற்பட்ட காலப்பகுதி

இக்காலத்தில் முதலாளித்துவ வளர்ச்சி ஆரம்ப கட்டத்தில் இருந்தது. தொழிற்சாலை முறையின் தோற்றம், சமூகத்தில் ஏற்பட்ட பொருளாதார ஏற்றத் தாழ்வு, நிரந்தரமான கூலி, உழைப்பாளர் படையின் தோற்றம் ஆகியன இக்கட்டத்தில் நிகழ்ந்தன. தொழிலாளர் வர்க்கத்தினரிடையே தீவிரவாதம் தோன்றியது. இக்காலத்தில் பொதுப்பாடசாலைச் சீர்திருத்தம் (Common School reform) ஏற்பட்டது.

2. 20ஆம் நூற்றாண்டின் தொடக்கம்

இக்காலத்தில் முற்போக்குக் கல்வி இயக்கம் தோன்றியது. கம்பனி மூலதனத்திற்கும், தொழிலாளர் இயக்கத்திற்குமான மோதல் இக்காலத்தில் ஏற்பட்டது. கிராமப்புறத்தில் இருந்து வந்தவர்கள், வெளியில் இருந்து வந்த குடியேறிகளும் தொழிலாளர் படையில் உள்ளீர்க்கப்பட்டனர். இம் முரண்பாடுகளின் விளைவே கல்வித்துறையின் முற்போக்குக் கல்வி இயக்கம் (Progressive Education movement)

3. 1960 முதல் 1977 வரை

இக்காலத்தின் கல்வி மாற்றம் பின்வரும் மூன்று குழவினர் கூலி உழைப்பு வேதன முறையுடன் (Wage - labour - system) இணைக்கப்பட்டதன் விளைவாக அமைந்தது.

*அ) தென்மாநிலங்களில் இருந்து வந்த கறுப்பினத் தொழிலாளர்கள்.*
*ஆ) பெண்கள்*
*இ) சிறுவியாபாரிகள், சுயாதீனமான உயர் தொழிலாளர்கள் (Professionals) அலுவலக ஊழியர்கள்.*

மார்க்சீய மாதிரிகள் பயன் உள்ள விளக்கங்களாக அமைகின்றன. கல்வி முறைகளின் உள்ளார்ந்த இயல்பாக தேக்கநிலை என்ற பண்பு அமைகிறது. இதனால் கல்விமுறை பரந்த அளவில் உள்ள வர்க்க உறவுகளை நிலைபெறச் செய்துவிடுகின்றன. பெருந்தோட்டங்களின் கல்வி வரலாற்றை ஆராயும்பொழுது அங்கு தொடர்ச்சி தேக்கம் என்ற இரு பண்புகள் வெளிப்பட்டுத் தெரிகின்றன வென்றும் இதனை விளக்குவதற்கு மார்க்சீய மாதிரி பயன் உடையது என்றும் அஞ்சலா லிட்டில் குறிப்பிடுகின்றார்.

**கட்டமைப்பும் செயலிகளும்**

மார்க்சீய மாதிரிகள் பற்றிய விளக்கத்தை கூறிய பின்னர் கட்டமைப்பு (Structure) செயலி (Agent) என்ற இரு எண்ணக் கருக்களை அஞ்சலா லிட்டில் அறிமுகம் செய்கிறார். மார்க்சீய மாதிரிகளையும், சமூகவியல் மாதிரிகளின் இரண்டாம் வகையையும் தெளிவாகப் புரிந்துகொள்வதற்கு கட்டமைப்பு, செயலி என்ற இரு எண்ணக்கருக்களை நாம் விளங்கிக் கொள்ளுதல் வேண்டும். கட்டமைப்பு என்று கூறும்போது பகுதிகள் பலவற்றைக் கொண்ட நிறுவன ஒழுங்கமைப்பைக் குறிப்பிடுகின்றோம். கல்வி நிறுவன அமைப்பு, தொழில்களின் கட்டமைப்பு, சமூகவர்க்கங்களின் அடுக்கமைவு என்ற கட்டமைப்பு எனப் பல கட்டமைப்புகளை நாம் எடுத்துக் காட்டாகக் கூறலாம். கட்டமைப்புகளிற்குள் பகுதிகள் அல்லது அலகுகள் உள்ளன. இப்பகுதிகளுக்கிடையே இடைவினைகள் நடைபெறுகின்றன. மார்க்சீய மாதிரிகள் மாற்றத்தின் தீர்மான காரணிகளாக கட்டமைப்புக்கள் உள்ளன என்று கூறுகின்றன. செயலி என்னும் எண்ணக்கரு சமூகத்தில் நிகழும் செயல்களின் மூலமான தனிநபர்களையும், குழுக்களையும் சுட்டுவன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'ஏஜன்ட்' என்ற ஆங்கிலச் சொல் சுயமாக இயங்கும் ஆற்றல் உள்ள நபர்களைக் குறிக்கும் சொல். இதனை நாம் 'செயலி' என்று மொழிபெயர்த்துக் கொள்ளலாம். (மொழிபெயர்ப்பு நூலில் இச்சொல் 'முகவர்' எனக் குறிப்பிடப்படுகிறது). செயலிகளின் செயல்கள் தாம் மாற்றத்தின் உந்து சக்தியாக இருக்கின்றன என்று கூறும் சமூகவியல் கோட்பாடுகள் கட்டமைப்புகளை விட செயலிக்கு முக்கியத்துவம் கொடுக்கின்றன. கல்வித்துறை மாற்றத்தில் கட்டமைப்புகள் முக்கியமானவையா, அல்லது செயலிகளின் செயல்கள் முக்கியமானவை என்ற விவாதம் முடிவில்லாது தொடரும் ஒன்று. ஜரி மற்றும் ஜரி (Jary and Jary) எழுதிய நூலொன்றில் இருந்து மேற்கோள் காட்டும் அஞ்சலா லிட்டில், கட்டமைப்பு, செயலி பற்றிய ஒப்பீட்டு முக்கியத்துவத்தின் அடிப்படையில் மூன்று மாதிரிகள் உள்ளன என்று கூறுகிறார்.

1. கட்டமைப்புக்கு முக்கியத்துவம் கொடுப்பன :

ஒருவரது செயல் கட்டமைப்புகளால் தீர்மானிக்கப்படுகிறது. செயலி கட்டமைப்பில் வெவ்வேறு தனிநபர்கள் என்ற செயலிகளுக்கு சுய ஆற்றல் குறைவு. அவை கட்டமைப்புகளின் கட்டுப்பாட்டிற்கு உட்பட்டவை.

2. செயலுக்கு முக்கியத்துவம் கொடுப்பன :

செயலிகள் சுய ஆற்றல் மிக்கவர்கள். சமூக உலகத்தை உருவாக்குபவர், மறு உருவாக்குவதும் தன் ஆற்றல் மிக்க நபர்களே. இவ்வகை வாதம் கட்டமைப்பின் முக்கியத்துவத்தை நிராகரிப்பன.



3. கட்டமைப்பு - செயல் இரண்டும் முக்கியமானவை :

இக்கருத்துப்படி கட்டமைப்புகளின் படி செயலிகளின் செயல்கள் அமைகின்றன. பின்னர் செயலிகளும் தம் செயல்களால் கட்டமைப்பை உருவாக்கி விடுகின்றனர். கல்வியும் அபிவிருத்தியும் தொடர்பான நூல்கள் பெரும்பாலானவை கட்டமைப்பு முக்கியத்துவமிருக்கும் முதலாம் வகை மாதிரியில் அல்லது செயலியை முதன்மைப்படுத்தும் இரண்டாம் வகை மாதிரியில் அமைந்துள்ளன. மரபிய, நவமரபிய கல்வி அபிவிருத்தி மாதிரிகள் பொருளாதார, சமூக, அரசியல் கட்டமைப்புக்கள் எவ்வாறு கல்வியை தீர்மானிக்கின்றன என்பதனை விளக்குவனவாக உள்ளன. அரசு, முதலாளிகள், சிறுவர்கள் என்பன கட்டமைப்பின் வினைபொருள்கள் என்று இம்மாதிரிகள் கூறும். இதற்கு மாறாக செயலியின் வகிபங்கை முதன்மைப்படுத்தும் கோட்பாட்டு மாதிரிகள் செயலிகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து கட்டமைப்புகளின் பங்கினை அலட்சியம் செய்வனவாக இருக்கும். அஞ்சலா லிட்டில் மூன்று கோட்பாடுகளை இதற்கு உதாரணமாகக் காட்டுகிறார்.

i. மனித மூலதனம் (Human Capital) கோட்பாடு
ii. நவீனமாதல் கோட்பாடுகள் (Modernization theories)
iii. நவலிபரல் கோட்பாடுகள் (Neo - Liberal theories)

இக்கோட்பாடுகளைக் கூறும்போது அவற்றின் பொது இயல்புகளைப் பின்வருமாறு விளக்குகிறார். (இக்கோட்பாடுகள்) தனிநபர்களின் வகிபங்கிற்கு முதன்மை அளிக்கின்றன. அவனது / அவளது கல்வி, அவனது / அவளது முதலீட்டு முடிவுகள், அவனது / அவளது முதலீட்டு வருமான எதிர்பார்ப்புகள், அவனது / அவளது நவீன வாழ்க்கை முறைபற்றிய மனப்பாங்குகள் என்பனவே சமூக பொருளாதார மாற்றங்களைத் தீர்மானிக்கின்றன. இத்தகைய விளக்கங்கள் அபிவிருத்தியில் கட்டமைப்புக்கள் என்ற சக்திகளின் வகிபாகத்தைப் புறக்கணித்துள்ளன. (அஞ்சலா லிட்டில் பக். 24) 1980 களிலும் 1990 களிலும் சில சமூகப் பொருளியலாளர்களுக்கும், அமைப்பியல்வாதிகள் (Structuralists) என்னும் பொருளியல் சிந்தனையாளர்களுக்கும் இடையில் நிகழ்ந்த விவாதங்கள் கல்வித்துறையில் ஏற்பட்ட இந்த இரு வேறு சிந்தனைப் போக்குகளை வெளிப்படுத்துகின்றன. பொருளியல் துறைக்கு மட்டுமல்ல பிற எல்லாச் சமூக விஞ்ஞானங்களுக்கும் பொருத்தமான இந்த விவாதத்தின் இருமை நிலைமையை பின்வரும் சொற்களால் அஞ்சலா லிட்டில் அழகாக எடுத்துக் கூறுகிறார்.

i) செயலிகள் இல்லாத கட்டமைப்புகள் (Agent less Structures)
ii) கட்டமைப்புக்கள் இல்லாத செயலிகள் (Structure less Agencies)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டமைப்புக்கள் செயலிகள் இரண்டினையும் முக்கியத்துவப்படுத்தும் வேறுபாடான கோட்பாடுகளை சில ஆய்வாளர்கள் இன்று வலியுறுத்துவதையும் அவர் கூறுகிறார்.

*ரோயி (Toye) என்ற பொருளியல் அறிஞர் பின்வருமாறு கூறினார்.*

*மக்கள் கட்டமைப்புக்களால் நிர்ணயிக்கப்படுகின்றனர் என்ற அமைப்பியல் வாதம் வறுமைக்குக் காரணம் கூறும் வாதம்*



*சமூகத்தினதும் பொருளாதாரத்தினதும் ஒட்டுமொத்தமான மாற்றங்கள் தனிநபர் செயல்களால் தீர்மானிக்கப்படுவதை என்று கூறுகிறது. இரண்டும் குறைக்கும்வாதம் (Reductionism) இனை அடிப்படையாகக் கொண்டவை. (அஞ்சலா நூல் பக் 24)*

அஞ்சலா லிட்டில் தம் நூலில் கட்டமைப்பு, செயலி என்ற இரண்டிற்கும் சமமான அழுத்தம் கொடுக்கும் அணுகுமுறை உகந்ததாகும் என்கிறார். இங்கிலாந்தினதும், பிரான்ஸ் நாட்டினதும் கல்வி முறை பற்றி மார்க்கிரட் ஆர்ச்சர் (Margares Archer) என்பவர் The Social Origins of Educational Systems (1979) என்ற நூலை எழுதியிருப்பதாகக் கூறி அந்நூலில் தெரிவிக்கப்பட்ட முக்கிய கருத்துக்களை அந்நூலாசிரியர் விளக்குகின்றார். மைரன் வீனர் (Myron Weinner) இந்தியக் கல்வி முறை பற்றி எழுதிய இந்தியாவில் குழந்தையும் அரசும் (1991) (The Child and the State in India) என்ற நூல் ஆர்ச்சரின் கருத்துக்களை எதிரொலிக்கின்றது என்றும் கூறுகின்றார். மார்க்கிரட் ஆர்ச்சரின் நூல் பற்றிய விளக்கத்தை இக்கட்டுரையில் கூறுவதை தவிர்த்துள்ளோம். இலங்கையின் பெருந்தோட்டத்துறையின் கல்வி மாற்றங்களை ஆராய்ந்துள்ள பெரிய நூல்கள் இரண்டினைப் பற்றி அஞ்சலா லிட்டில் குறிப்பிடுகின்றார். அவையாவன:

i. பெக்போர்ட் (Beckford, G.L.) என்பவர் எழுதிய நிலைத்து நிற்கும் வறுமை: மூன்றாம் உலகின் பெருந்தோட்ட பொருளாதாரங்களில் குறை விருத்தி என்பது இந்நூலின் தலைப்பு (Persistent Poverty : Under Development in Plantation Economies of the Third World). இந்நூல் 1983 ஆண்டு வெளியிடப்பட்டது. மூன்றாம் உலகின் பெருந்தோட்ட பொருளாதாரங்கள் பற்றிய ஆய்வு இது.

ii. எஸ். பி. டி. டி. சில்வா (S.B.D. De Silva) என்பவர் இலங்கையில் எழுதிய 'குறை விருத்தியின் அரசியல் பொருளாதாரம்' (The Political Economy of under Development) என்ற நூல். இந்நூல் 1982 இல் வெளியாகியது. இவ்விரு நூல்களும் மார்க்சிய நோக்கில் எழுதப்பட்ட செயலியல் அபிவிருத்தி, குறைவிருத்தி பற்றிய நூல்கள். ஆர்ச்சர் எழுதிய நூல் கல்வியமைப்பு குறித்த நூல். பெக்போர்ட், எஸ். பி. டி. சில்வா எழுதிய நூல்கள் பொருளாதார அபிவிருத்தியும் குறைவிருத்தியும் பற்றியவை. பெருந்தோட்டங்களின் கல்வி விருத்தியின்மையை டி. சில்வா பெருந்தோட்ட முறையின் குறைவிருத்தியுடன் தொடர்புபடுத்துகிறார். பெக்போர்ட் பெருந்தோட்டங்களில் பொருளாதார சமூக அமைப்பை விளக்கிக் கொள்ளக் கூடியதாக மொத்த நிறுவனம் (total Institution) என்ற எண்ணக்கருவை முன்வைக்கிறார். பெருந்தோட்டம் என்பது ஒரு உற்பத்திக் கட்டமைப்பு மட்டுமல்ல, அது ஒருவகை சமூகக் கட்டமைப்பும் ஆகும். பெருந்தோட்ட கட்டமைப்பில் அதன் பொருளாதாரத்தின் தொடர்ச்சிக்கு கல்வி அவசியமில்லை. கல்வியின் தேக்க நிலைக்கு இதுவே காரணம் என்ற வாதத்தை பெக்போர்ட் முன்வைக்கிறார்.

ஆர்ச்சர், பெக்போர்ட், டி. சில்வா ஆகியோரின் கருத்துக்கள் சுருக்கமாக ஆராயப்பட வேண்டியவை.

ஆதாரம்

i. Labouring to Learn - Towards a Political economy of plantations, People and Education in Srilanka, Angela. W. Little Macmillan Press Ltd (1999).

ii. உழைப்பதால் கல்வி கற்பதற்கு: இலங்கையின் தோட்ட அரசியல் பொருளாதாரம், மக்கள் மற்றும் கல்வியை நோக்கியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொதுக்கல்வி பற்றிய உத்தேச புதிய கல்விச் சட்டம் ஓர் அறிமுகம்




கை. தனராஜ்
சிரேஷ்ட விரிவுரையாளர்
கல்விப் பீடம்,
இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

## அறிமுகம்

**1939**ஆம் ஆண்டின் 31ஆம் இலக்க கல்விச் சட்டமே இலங்கைக் கல்வி முறையினை வழிப்படுத்தும் முழுமையான கல்விச் சட்டமாகும். இதற்கு முன்னரும் பின்னரும் நிறைவேற்றப்பட்ட பல்வேறு கல்விசார் சட்டங்கள் விசேட தேவைகள் குறித்தவையாகவோ அல்லது திருத்தச் சட்டங்களாகவோ அமைந்தன. எனவே கல்விப் புலத்தில் தேசிய ரீதியாகவும் சர்வதேச ரீதியாகவும் ஏற்பட்டுள்ள புதிய செல்நெறியினை உள்வாங்கி இலங்கையில் கல்வி முறையை நாட்டின் சமூக, பொருளாதார தேவைகளுக்கேற்ப திசைப்படுத்துவதற்காக ஒரு முழுமையான புதிய கல்விச் சட்டத்தின் தேவைப்பாடு இன்று முனைப்பாக உள்ளது.

இதன் அடிப்படையில் ஒரு புதிய கல்விச் சட்டத்தை உருவாக்கும் நோக்குடன் தேசிய கல்வி நிறுவனத்தின் முன்னாள் பணிப்பாளர் நாயகமும் தேசிய கல்வி ஆணைக்குழுவின் துணைத்தலைவருமான கலாநிதி ஜீ.பி. குணவர்த்தன அவர்களின் தலைமையில் பதினைந்து பேர் அடங்கிய குழு கல்வி அமைச்சினால் நியமிக்கப்பட்டது. இக்குழுவின் அறிக்கை 2009ஆம் ஆண்டு வெளிவந்தது. இடையில் இக்குழுவினர் பாடசாலை ஆசிரியர்கள், அதிபர்கள், பெற்றோர், கல்வியாளர், தொழிற் சங்கங்கள், அரசியல் கட்சிகள் முதலான பல்வேறு உரித்துடையோர் - களுடன் கல்விப் பிரச்சினைகள் பற்றிய பரந்துபட்ட கலந்துரை - யாடலை நடாத்தியது. பாராளுமன்ற தெரிவுக் குழு நிலையில் கலந்துரையாடல்கள் நிறைவு பெற்றதைத் தொடர்ந்து தற்போது புதிய கல்விச் சட்டத்தின் இறுதி வரைபு பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்காக தயார் நிலையில் இருப்பதாக அறியக்கூடியதாக உள்ளது. அடுத்த சில தசாப்தங்களுக்கு தேசிய கல்வி முறையும் இச்சட்டத்தின் வழிநடத்தலுக்கும் கட்டுப்பாட்டுக்கும் உள்ளாகப் போவதால் இச்சட்டம் பற்றிய விளக்கம் மிகவும் அவசியமானது. இச்சட்ட வரைபு பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் போது இன்றைய நிலையில் மிகவும் நிராகரிக்கப்பட்ட நிலையில் இருக்கும் தமிழ்க் கல்வி முறையை கொஞ்சமேனும் மேம்படுத்துவதற்கான ஏற்பாடுகள் மேற்படி சட்டத்தில் உள்வாங்கப்படுவது முக்கியமானது. இதற்கு இச்சட்டம் பற்றிய விழிப்புணர்வு அவசியமானது. இதனைக் கருத்திற் கொண்டே மேற்படி உத்தேச சட்டம் பற்றிய அறிமுகம் இக்கட்டுரையில் முன்வைக்கப்பட்டுள்ளது.




## இலங்கையின் கல்விச் சட்டங்கள்

இலங்கையில் முறைசார் கல்விக்கான அடித்தளம் காலனித்துவ காலத்திலேயே அமைக்கப்பட்டது. 1869இல் அமைக்கப்பட்ட பொதுப் போதனா திணைக்களமே பின்னர் கல்வித் திணைக்களமாகவும் கல்வி அமைச்சாகவும் பரிணாமம் பெற்றது. காலனித்துவ கால கல்வி முறைமை இலங்கைப் பிரஜைகளின் கல்வி மேம்பாட்டை கருத்திற் கொண்டதாக இருக்கவில்லை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயர்தட்டு மக்களுக்கு ஆங்கில மொழிக் கல்வியும் ஏனையோருக்கு சுதேச மொழிக் கல்வியுமாக இருந்தமையால் கல்வி முறையில் ஓர் இரட்டைத் தன்மை நிலவியது. கிராமிய, பெருந்தோட்ட சிறார்களின் கல்விநிலை மிகவும் பரிதாபமான நிலையில் இருந்தது. இந்நிலையில் 1901 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட குடிசனமதிப்பீட்டு அறிக்கை நாட்டின் பெரும்பாலான சிறார்கள் அடிப்படைக் கல்வியைக் கூட பெற முடியாமலிருப்பதைச் சுட்டிக் காட்டியது. இது பிரித்தானியப் பாராளுமன்றத்திலும் எதிரொலித்ததன் காரணமாக இலங்கையில் கல்விச் சட்டங்களின் அவசியம் உணரப்பட்டது. 1902 மற்றும் 1907 ஆகிய ஆண்டுகளில் இரு சட்டங்கள் இயற்றப்பட்டபோதும் அவை முழுமையானவையாக இல்லாத காரணத்தினால் 1939ஆம் ஆண்டு 31ஆம் இலக்க கல்விச் சட்டம் நிறைவேற்றப்பட்டது. 5 - 14 வயதுக்குட்பட்ட சகல சிறார்களின் கல்வியை கட்டாயமாக்கிய இச் சட்டம் இலங்கையின் கல்வி வரலாற்றில் மிகமுக்கியமானது. இச்சட்டம் 1945, 1947, 1951, 1973 ஆகிய ஆண்டுகளில் திருத்தப்பட்டது.



இச்சட்டத்தை தவிர வெவ்வேறு தேவைகளுக்காகப் பின்வரும் சட்டங்கள் நிறைவேற்றப்பட்டன.

- 1960 ஆம் ஆண்டின் 5ஆம் இலக்க உதவி நன்கொடை பெறும் பாடசாலைகள் மற்றும் ஆசிரியர் கலாசாலைகள் சட்டம்.
- 1961 ஆம் ஆண்டின் 8 இலக்க மேற்படி சட்டத்திற்கான மேலதிக ஏற்பாடுகள் சட்டம்.
- 1968 ஆம் ஆண்டின் 64ஆம் இலக்க பிரிவேனைகள் சட்டம்
- 1985 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க தேசிய கல்வி நிறுவன சட்டம்
- 1986 ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க தேசிய கல்வியியல் கல்லூரிகள் சட்டம்.
- 1991 ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க தேசிய கல்வி ஆணைக்குழு சட்டம்

மேற்படி சட்டங்கள் தவிர 1987ஆம் நிறைவேற்றப்பட்ட அரசியல் யாப்புக்கான 13ஆவது திருத்தச் சட்டமும் மிகவும் முக்கியமானது. இதன் படி கல்வியானது மாகாணங்களுக்கு உரித்தாக்கப்பட்ட விடயமாயிற்று.

இப்பின்னணியில் நோக்கும் போது உத்தேச புதிய கல்விச் சட்டத்தின் முன் இன்றைய தேவை புலப்படுகிறது. கடந்த ஏழு தசாப்தங்களாக கல்வியின் உள்ளடக்கம் கற்றல் - கற்பித்தல் செயன்முறை முதலானவற்றில் தேசிய ரீதியாகவும் சர்வதேச ரீதியாகவும் புதிய செல்நெறிகள் தோன்றியுள்ளன. பல்வேறு கல்விசார் மாற்றங்கள் பலதுறைகளில் நடைமுறைப்படுத்தப்பட்டுவருகின்றன. இவையனைத்தையும் கருத்திற் கொண்டுதான் உத்தேச புதிய கல்விச் சட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.

இனி இச்சட்டத்தில் உள்ளடக்கப்படுவதற்காக முன்வைக்கப்பட்டுள்ள விடயங்களை நோக்குவோம்.

### கல்வி இலக்குகளும் வழிகாட்டல் தத்துவங்களும் (Educational Goals and Guiding Principles)

எவ்வொரு தேசிய கல்வி முறையும் தனக்கென இலக்குகளைக் கொண்டிருக்க வேண்டும். பல நாடுகள் கல்வி இலக்குகள் என்றில்லாது பொதுவான தேசிய இலக்கினை முன்வைக்கின்றன. இலங்கையைப் பொறுத்த மட்டில் தேசிய இலக்குகள் 1992ஆம் ஆண்டின் தேசிய கல்வி ஆணைக்குழுவின் முதலாவது அறிக்கையில் இடம்பெற்றிருந்தன. இந்த அறிக்கையில் இடம்பெற்றிருந்த ஒன்பது தேசிய இலக்குகள் மற்றும் ஐந்து அடிப்படைத் தேர்ச்சிகளும் பின்னர் 2005ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட அறிக்கையில் எட்டு தேசிய இலக்குகளாகவும் ஏழு தேர்ச்சிகளாகவும் மாற்றம் பெற்றன.

உத்தேச புதிய கல்விச் சட்டத்திற்கான முன்மொழிவுகளில் எட்டு தேசிய இலக்குகள் முன்வைக்கப்படுகின்றன. இவை தேசிய ஐக்கியம், கலாசார பல்வகைமை, சமூக நீதி, மானிட விழுமியங்கள், பொறுப்புகள், கடமைகள், தனியாள் ஆளுமை மேம்பாடு, மாற்றங்களுக்குத் துலங்குதல் முதலானவற்றை உள்ளடக்கியுள்ளன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்படி இலக்குகளுக்குப் புறம்பாக இலக்குகளை அடைவதற்கு வழிகாட்டக்கூடிய மூலதத்துவங்களும் உள்ளடக்கப்பட்டுள்ளன. மேற்படி வழிகாட்டல் மூலதத்துவங்கள் தனிமனித உரிமைகளும் கடமைகளும், இலவச, கட்டாயக்கல்வி, பயிற்றுமொழி, சமயக்கல்வி, மனிதவள அபிவிருத்தி, கல்விசார் பணியாளரின் மேம்பாடு, கல்வியில் சமூகத்தின் வினைப்பயன்பாடு, மாற்றுத்திறன் கொண்ட பிள்ளைகள், தனியார் துறையின் வகிபங்கு, மதிப்பீடு முதலான பல்வேறு அம்சங்கள் பற்றிய வழிகாட்டல்களை வழங்குகின்றன.

**கல்வி முறைமை: கட்டமைப்பும் தொழிற்பாடும்**

மத்திய கல்வி அமைச்சு, மாகாண கல்விசார் அதிகாரக் கடட்டமைப்புகள், பாடசாலை முறைமை, கட்டாயக் கல்வி, முன்பள்ளிக் கல்வி, உள்ளடக்கல் கல்வி, முறைசாராக் கல்வி தொடர்பான விடயங்கள் இந்த அத்தியாயத்தில் உள்ளடக்கப்படுகின்றன. பின்வரும் அம்சங்கள் கவனத்தில் கொள்ளத்தக்கவை.

- தேசிய கல்வி முறைமையின் சகல அம்சங்கள் பற்றிய கொள்கை உருவாக்கம் தேசிய கல்வி ஆணைக்குழுவின் பொறுப்பாக இருத்தல் வேண்டும்.
- கல்வி அமைச்சு, தேசிய கல்வி நிறுவகம் முதலியவற்றின் பொறுப்புகள் வரையறுக்கப்பட்டு ஒரு நிறுவனம் இன்னுமொரு நிறுவனத்தின் பங்கின் மேற்கொள்ளும் இரட்டைத் தன்மை தவிர்க்கப்பட வேண்டும்.
- பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், கல்விசார் வெளியீடுகள் ஆணையாளர் நாயகம் ஆகியோருக்கு தமது பணிகளுக்கு உதவியாக ஆலோசனைச் சபைகள் நிறுவப்பட வேண்டும்.
- மாகாணக் கல்வி அமைச்சும், கல்வித் திணைக்களமும் ஒன்றிணைக்கப்பட வேண்டும்.
- பாடசாலை மட்ட முகாமைத்துவம் நடைமுறைப்படுத்தப் பட வேண்டும்.
- பாடசாலைகளை பொருத்தமற்ற வகையில் வகுதிப்படுத்துவதைத் தவிர்த்து சகல பாடசாலைகளும் ஆரம்பப் பாடசாலைகள் (தரம்1- 5) அல்லது இடைநிலைப்பாடசாலைகள் (6-11அல்லது13) என வகுதிப்படுத்தப்பட வேண்டும்.
- 2 கிலோ மீற்றர் தூரத்தில் ஓர் ஆரம்பப்பாடசாலையும் 5 கிலோ மீற்றர் தூரத்தில் ஓர் இடைநிலைப் பாடசாலையும் இருப்பதை அரசு உறுதி செய்ய வேண்டும்.
- கட்டாயக்கல்வி 5 - 16 வயது வரை வழங்கப்படவேண்டும்.
- முன்பள்ளிக் கல்வி தொடர்பான ஒரு பூரணமான கொள்கையை தேசிய கல்வி ஆணைக்குழு உருவாக்குதல் வேண்டும்.

**கல்வி முறைமை - உள்ளடக்கமும் செயன்முறையும்**

கலைத்திட்டம், கற்றல் - கற்பித்தல் செயன்முறை, பயிற்றுமொழி, மதிப்பீடு, பாடநூல்கள், வழிகாட்டலும் ஆற்றுப்படுத்தலும், விழுமியக்கல்வி, கல்வித் தொழில்நுட்பவியல், தனியார் போதனை, ஊடகமும் கல்வியும் முதலான விடயங்கள் இந்தத் தலைப்பின் கீழ் உள்ளன. இவ்விடயங்களில் பின்வருவன முக்கியமானவை.

- கலைத்திட்ட அபிவிருத்தி, ஆரம்பக் கல்வி, தனிப்பட்ட இடைநிலைக்கல்வி, சிரேஷ்ட இடைநிலைக்கல்வி என்னும் மட்டங்களாகக் கருத்தில் கொள்ள வேண்டும்.
- கலைத்திட்டமானது கிரமமாக மீளாய்வுக்கு உட்படுத்தப்பட வேண்டும்.
- கலைத்திட்டமானது வேலை உலகுக்கு மாணவர்களைத் திசைமுகப்படுத்தக் கூடிய ஏற்பாடுகளைக் கொண்டிருக்க வேண்டும்.
- தொடரும் மதிப்பீடுகள் இறுதிப்பரீட்சை மதிப்பீடுகளுடன் இணைத்துக் கொள்ளப்பட வேண்டும்.
- ஆரம்பக் கல்வியில் தாய் மொழியே பயிற்றுமொழியாக இருத்தல் வேண்டும்.
- இடைநிலைக்கல்வியில் தாய்மொழி, இருமொழி அல்லது ஆங்கிலம் பயிற்றுமொழியாக இருத்தல் வேண்டும்.
- 3 - 11 ஆம் தரங்களுக்கான ஆங்கிலம் கட்டாய பாடமாகத் தொடர வேண்டும்.
- பாடநூல் எழுதுவது தொடர்பாக ஒரு டிப்ளோமா கற்கைநெறி உருவாக்கப்பட வேண்டும்.
- கல்வியில் ICT, கல்விக்காக ICT என்று அறியப்படும் இரு வேறுபட்ட வழிகளில் கல்வியில் தகவல்தொடர்பாடல் முறையியலும் இணைக்கப்பட வேண்டும்.
- சகல பாடசாலைகளிலும் கணினி இணைப்புகள் நிறுவப்படவேண்டும்.
- தனியார் போதனை சட்டரீதியாக ஒழுங்குபடுத்தப்பட வேண்டும்.

**கல்வி முகாமைத்துவமும் தலைமைத்துவமும்**

கல்வி முறைமையின் முகாமைத்துவம், பாடசாலைகளின் முகாமைத்துவம், கல்வித் திட்டமிடல், கல்வி முகாமைத்துவத் தகவல்கள் முறைமை (EMIS) பாடசாலை மேற்பார்வை, கல்வி ஆய்வுகள், மாணவர்களின் கூட்டொழுங்கு முதலிய விடயங்கள் மேற்படி தலைப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன. இவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்பான மிக முக்கிய விடயங்கள் கீழே தரப்படுகின்றன.

- மாகாணக் கல்வி கட்டமைப்பு மாகாணக் கல்வி அமைச்சு(கல்வித் திணைக்களம் உட்பட), வலயம், கோட்டம் மற்றும் பாடசாலை என நான்கு அடுக்குகளைக் கொண்டிருக்கும்.
- சகல கல்வி அலுவலகர்களுக்கும் செயலாற்றுகை இலக்குகள் நிர்ணயிக்கப்படும்.
- பாடசாலை அபிவிருத்திக் குழு, பாடசாலை முகாமைக் குழு ஆகியவை ஒவ்வொரு பாடசாலையிலும் அமைக்கப்படும்.
- பாடசாலைத் திட்டமிடலில் சகல உரித்தாளர்களும் பங்குபற்றக் கூடியதாக அமையும்.
- கல்வி அபிவிருத்திக்கான திட்டமிடல் துறை தழுவியதாக (SECTORWIDE) இருக்க வேண்டும்.
- சகல மட்டங்களிலும் திட்டமிடல் கல்வி முகாமைத்துவ தகவல் முறைமை (EMIS), நிதிசார் முகாமைத்துவ தகவல் முறைமை (FMIS) புவியியல் சார் தகவல் முறைமை (GIS) மற்றும் மனிதவள தகவல் முறைமை (HRIS) ஆகியவற்றை உள்ளடக்கியதாக இருக்க வேண்டும்.
- கல்வி மேற்பார்வையானது ஆசிரியரின் வாண்மைத்துவ இயலளவை மேம்படுத்தக் கூடியதாக இருக்க வேண்டும்.
- தேசிய கல்வி ஆய்வுப் பேரவை (NERC) ஸ்தாபிக்கப்படும்.
- ஆசிரியர்கள் செயல்வழி ஆய்வினை மேற்கொள்ள ஊக்கப்படுத்தப்படவேண்டும்.
- செயலாற்றுகை மற்றும் இணைப்பாக்கக் குழுவை (PRCC) கல்வி அமைச்சு ஸ்தாபிக்க வேண்டும்.
- மாணவருக்கு வழங்கப்படும் தண்டனை தவறுகளை ஏற்படுவதை தடுக்கக் கூடியனவாகவும் உடல், உள, மனவெழுச்சிக்கு ஊறு விளைவிக்கக் கூடாதவைகளாகவும் இருக்க வேண்டும்.

**கல்வி ஆளணியினர் - ஆசிரியர்கள், அதிபர்கள் மற்றும் கல்வி அதிகாரிகள்.**

ஆசிரியர் கல்வி, ஆசிரியர் அபிவிருத்தி, ஆசிரியர்களுக்கான ஒழுக்கக் கோவை ஆசிரியர்களின் மற்றும் ஏனைய கல்விசார் பணியாளர்களின் வாண்மை விருத்தி, கல்வித் துறை சேவைகள் முதலானவை பற்றி இத்தலைப்பின் கீழ் பல முன்மொழிவுகள் விதந்துரைக்கப்பட்டுள்ளன. இவற்றில் மிக முக்கியமான முன்மொழிவுகள் கீழே தரப்படுகின்றன.

- கல்வி அமைச்சில் ஆசிரியர் கல்விச் சபை ஸ்தாபிக்கப்பட வேண்டும். இச்சபையானது ஆசிரியர் கல்வி தொடர்பான சகல நிறுவனங்களையும் இணைப்பாக்கம் செய்யும்.
- சகல ஆசிரியர் கல்வி நிகழ்ச்சித் திட்டங்களும் ஆசிரியர் அபிவிருத்தி என்னும் கட்டுருவாக்க அணுகுமுறையைப் பின்பற்ற வேண்டும்.
- ஆசிரியர் சேவையின் உறுப்பினர்கள் அனைவரும் பட்டதாரிகளாக இருக்க வேண்டும். இதுவரை பட்டம் பெறாத அனைவரும் பட்டத்தைப் பெற ஊக்குவிக்கப்பட வேண்டும்.
- ஆசிரியர்கள் மற்றும் கல்வியாளர்கள் அனைவருக்குமான ஒழுக்கக் கோவை (Code of Ethics) உருவாக்கப்பட்ட நடைமுறைப் படுத்தப்பட வேண்டும்.
- இலங்கை அதிபர்கள் சேவை, இலங்கை ஆசிரிய கல்வியாளர்கள் சேவை, இலங்கை கல்வி நிர்வாக சேவை உறுப்பினர்கள் யாவருக்கும் உரிய பயிற்சிகள் கிரமமாக வழங்கப்படவேண்டும்.
- தொழில் தகைமை பெறாத எவரும் ஆசிரியர் பதவியை பெறக்கூடாது. அத்துடன் ஆசிரியர் அனுமதிப்பத்திர முறைமையும் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.
- மேற்படி அனுமதிப்பத்திரம் வழங்கக் கூடிய வகையில் பொதுக்கல்விப் பேரவை (General Education Council) அமைக்கப்பட வேண்டும்.
- ஆசிரியர்களின் இடமாற்றம், பதவி உயர்வு முதலிய விடயங்களில் எத்தகைய அரசியல் கலப்பும் இடம்பெறக்கூடாது.
- அதிபர்களாக நியமிக்கப்படும் சகலரும் கல்வி முகாமைத்துவத்தில் டிப்ளோமா தகுதியையேனும் கொண்டிருக்க வேண்டும்.
- இலங்கை கல்வி நிர்வாக சேவையை மேம்படுத்தக் கூடியதாக ஒரு முழுமையான சட்டகம் விருத்தி செய்யப்பட வேண்டும்.

**கல்வித்தராதரங்கள் மற்றும் தர உறுதிப்பாடு**

இலங்கையின் கல்வி முறைமையில் மிகவும் முக்கிய பிரச்சினையான தரம், தரஉறுதிப்பாடு (Quality Assurance) ஆகிய விடயங்கள் பற்றிய முன்மொழிவுகள் இந்த அத்தியாயத்தில் தரப்பட்டுள்ளன. இவற்றில் முக்கியமானவை பின்வருமாறு

- கல்விச் செயன்முறையின் சகல கூறுகளிலும் தர உறுதிப்பாடு பேணப்படும்.
- பாடசாலைக் கட்டடம், வகுப்பறை அமைப்பு, உபகரணங்கள், நூல்கள் மற்றும் சகல கற்பித்தல் சாதனங்களிலும் தர உறுதிப்பாடு பேணப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- கல்வி முறைமையின் சகல அம்சங்களிலும் தர உறுதிப்பாட்டைப் பேணக்கூடியதாக தராதரங்கள் மற்றும் தரஉறுதிப்பாட்டைப் பேணக்கூடியதான (SQAC) ஸ்தாபிக்கப்பட வேண்டும்.

**இலங்கையின் கல்விக்கான வள ஏற்பாடும் நிதியீட்டமும்**

மேற்படி அமைப்பில் பாடசாலை வருமான மூலகங்கள், வளங்கள் பகிர்வில் நியாயத்துவம், பொதுச் செலவுகளின் திறந்த தன்மை மற்றும் நிதி உள்ளீடுகளின் இணைப்பாக்கம் முதலியவை பற்றிய முன்மொழிவுகள் தரப்பட்டுள்ளன.

**முடிவுரை**

இலங்கையின் கல்வி முறையானது வரலாற்று ரீதியாக பல அளவுரீதியான ஏற்றங்களைக் கண்டுள்ளது. அதே நேரத்தில் பண்புரீதியாக பல வரையறைகளையும் கொண்டுள்ளது. 21ஆம் நூற்றாண்டின் சமூக, பொருளாதார, அரசியல் ரீதியான அறைகூவல்களையும் வெற்றிகரமாக உள்வாங்கி இலங்கையின் கல்வி முறைமை வீரியமும் உன்னதமும் கொண்டு உயர்வடைய வேண்டும் எனில் அதற்கான வினைத்திறன் மிக்க சட்ட ஏற்பா மிகவும் அவசியமானதாகும். பல தசாப்தங்களாக இந்த இடைவெளி நீண்டு வந்திருப்பதனால் இலுங்கையின் கல்வி முறைமையின் வினைத்திறன் மற்றும் விளைதிறன் பற்றி பல்வேறு சந்தேகங்களும் கேள்விகளும் தொடர்ந்து எழுப்பப்பட்டு வருகின்றன. மேற்படி சந்தேகங்களைப் போக்கி கேள்விகளுக்குப் பொருத்தமாக விடை கூறி இலங்கையின் கல்வி முறைமையினை நவீனமாக்கும் பாரிய பொறுப்பினை மேற்படி பொதுக்கல்விக்கான உத்தேச புதிய கல்வித் திட்டம் கொண்டுள்ளது. அரசியல் ரீதியாக எழக்கூடிய பல்வேறு தடைகளையும் எதிர்த்து நின்று பாராளுமன்றத்தில் சட்டம் நிறைவேற்றப்படும் நாள் எமது கல்வி முறைமையில் கரிசனை கொண்டுள்ள சகலருக்கும் மகிழ்ச்சியளிக்கும் நாளாகும் என்பதில் ஐயமில்லை.

**உசாத்துணைகள்**


01. இலங்கையில் பொதுக்கல்விக்கான புதிய கல்விச் சட்டம் அறிக்கை 2009 (பொதுக்கல்விக்கான புதிய சட்டத்தை உருவாக்குவதற்கான தேசிய குழு)

02. தேசிய கல்வி ஆணைக்குழுவின் முதலாவது அறிக்கை 1992. (தேசிய கல்வி ஆணைக்குழு கொழும்பு)

03. இலங்கையில் பொதுக்கல்வி பற்றிய தேசிய கொள்கைச் சட்டகம் ஒன்றிற்கான ஆலோசனைகள் 2003. கொழும்பு.


## கல்வியில் வழிகாட்டல்

- கல்வியில் வழிகாட்டல் மாணாக்கனுக்கு அளிக்கப்படும் உதவிகளுள் பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.
- தங்களது நிறைகுறைகளை மாணாக்கர் ஒவ்வொருவரும் உணர்ந்து, நற்பண்புகளை முழுமையாக வளர்த்துக் கொள்ளவும் குறைபாடுகளைத் தீர்த்துக் கொள்ளவும் அவர்களுக்கு உதவி, தங்களது கல்வியின் சிறப்பான பயனைப் பெற கல்வியில் வழிகாட்டுதல் அவர்களுக்கு உதவுகிறது. கற்றலில் அவர்களுக்கு ஏற்படக்கூடிய இடர்பாடுகளை நீக்க உதவுவது, பல்வேறு பள்ளிப் பாடங்களில் தங்களது திறமை, கவர்ச்சி ஆகியவற்றிற்கேற்ப பாடங்களைத் தேர்ந்தெடுத்து தேர்ச்சி பெற அவர்களுக்கு உதவுவது ஆகியன கல்வியில் வழிகாட்டலின் நோக்கங்களாகும்.
- முன்பு ஒரு சில பிரச்சினை நடத்தையுள்ள மாணாக்கர்களுக்கு மட்டுமே கல்வியில் வழிகாட்டல் தேவை என்ற கருத்து நிலவியது. இன்று இது எல்லா மாணவர்களுக்கும் அவசியமாகும் என்ற கருத்து ஏற்கப்பட்டுள்ளது.
- எதிர்காலத்திற்கான தனது கல்வியினை ஒரு மாணாக்கன் திட்டமிடுதலுக்குக் கல்வியில் வழிகாட்டுதல் கட்டாயம் தேவைப்படுவதாகும்.
- மற்றும் ஒரு பாடசாலையை விட்டு வேறொரு பாடசாலையில் அல்லது வேறு ஒரு பாடப் பிரிவில் சேர விரும்பும் மாணாக்கர்களுக்குப் புதிய பாடசாலை புதிய பாடப்பிரிவு, ஆகியவற்றின் தன்மை, தேவைகள் ஆகியன பற்றிய கருத்துகள், ஆலோசனைகள் ஆகியவற்றைத் தரவும் கல்வியில் வழிகாட்டல் தேவை. கல்வியில் வழிகாட்டலுக்கு மாணாக்கனைப் பற்றிய முழுமையான விபரங்களை ஆசிரியரோ வழிகாட்டுபவரோ பெற்றிருக்க வேண்டும். திறம்படக் கற்றலுக்கான பயிற்சியை மாணாக்கனுக்கு அளிக்கக் கூடிய திறன் மிகுந்தவராகவும் ஆசிரியர் விளங்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வியில் கணினிப் பயன்பாட்டின் எதிர்காலம் அதன் அவசியம் பற்றிய தெளிவுறல்

**(Future of the Educational Computing Understanding its Significance)**



மா. பாலசிங்கம்
B. A Hons, Dip. in Edu.
& PGDE in IT for Edu.

அறிமுகம்:

**1980** களில் இருந்து 1990களுக்கு இடையில் ஒரு முக்கியமான சமூக மற்றும் வேலை நாடுகளில் இடம் பெற்றது. அதாவது கைத்தொழில் யுகத்தில் (Industrial Age) இருந்து தகவல்யுகம் (Information Age) வரையுமான இடமாற்றம் இடம் பெற்றிருந்தது. இதன் காரணமாக நாம் கிடைத்ததை காட்டிலும் மிகவும் சமூக பொருளாதார முறைமையை வேகமாக மாற்றியமைத்தன. கணினியின் கண்டுபிடிப்பும் தகவல் தொழில்நுட்பக் கருவிகளின் பயன்பாடும் மக்களின் வாழ்க்கை முறைமையில் மிகவும் வேகமாகவும், வித்தியாசமான முறையிலும் மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளன. மேலும் கணினித் தொழில்நுட்பக் கண்டுபிடிப்பினைத் தொடர்ந்து மக்கள் தொடர்ந்து முயற்சியுடன் சிறப்பான வெளிப்பீட்டைப் பெற முயற்சி செய்து கொண்டிருக்கின்றார்கள்.

கல்வி, தொலைத்தொடர்பாடல், சுகாதாரம், போக்குவரத்து இராணுவச் செயற்பாடுகள் என்றவாறு இன்று வாழ்வின் எல்லாத் துறைகளிலும் கணினித் தொழில்நுட்பம் நன்கு வேரூன்றி உள்ளதுடன் அவற்றினை இயக்கும் தொழில்நுட்பமாகவும் இது பரிணமித்து வருகின்றது. மேலும் இக்கணினித் தொழில்நுட்ப வளர்ச்சி காரணமாக உலகம் ஒரு பூகோளக் கிராமமாகச் சுருங்கிவிட்டது. அதுமட்டுமன்றி உறவுகளைப் பேணவும், தொடர்புகளை ஏற்படுத்தவும் மெய்நிகர் பாலங்களையும் (Virtual Bridge) கணினித் தொழில்நுட்பம் உருவாக்கியுள்ளது. இன்றைக்கு பத்து வருடங்களின் முன் உலகில் எங்காவது உள்ள ஒருவரை நாம் முகம் பார்த்து கதைப்போம் என எதிர்பார்த்திருந்தோமா? Video Conference முலம் நாம் இன்று பல மைல்களுக்கப்பால் வசிக்கும் ஒருவருடன் நேரடியாக முன்னால் இருந்து உரையாடுவது போன்று தொடர்பு கொள்ள முடிகிறது.

**இன்று கல்வியில் கணினிப் பயன்பாடு**

இவ்வளர்ச்சிப் போக்கில் கல்வித் துறையில் மாணவர்களின் கல்வித் தேவைகளின் எதிர்பார்ப்புகளும்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னர் இருந்ததைக் காட்டிலும் மிகவும் வித்தியாசமாக மாற்றமடைந்தன. இதன் விளைவாக ஆசிரியர்களின் வகிபாகம், பொறுப்புகள் என்பன தெளிவாக மாற்றமடைய வேண்டியதாயிற்று. தற்போதைய மாணவர்கள் இலக்க சமூக மொன்றுக்குள் (Digital Society) பிறந்துள்ளமையால் இலக்கப் பாரம்பரியத்தினர் (Digital Natives) என அழைக்கப்படுகின்றனர். இவர்கள் தமது இளம் பராயத்திலேயே பல்வேறு விதமான தொழில்நுட்ப முறைகளையும், உபகரணங்களையும், கையாள்வதில் வல்லவர்களாக உள்ளனர். முன்னைய தலைமுறையில் உள்ள சிறார்களைக் காட்டிலும் தற்போதய சிறார்களின் மூளையானது வேறு விதமாகச் செயற்படுகின்றது. அதாவது தமது சிறுவயதிலேயே பல்வேறு விதமான தொழில்நுட்ப உபகரணங்களான செல்போன், மடிக்கணினிகள் போன்ற கருவிகளை இலகுவாகக் கையாளுந்திறனை எளிதில் பெற்று விடுகின்றனர். ஆனால் தற்போதைய ஆசிரியர்கள் இலக்கப் பாரம்பரிய மொன்றுக்குள் குடிபெயர்ந்தவர்களாக (Digital Immigrants) உள்ளனர். இதன் விளைவாக மாணவர்கள் தமது தேவைகளை நிறைவுசெய்வதற்கான மிகப் பெரிய தொழில் நுட்பத் தேவையொன்றுக்கான அவசியம் ஏற்பட்டுள்து. இந்நிலையில் தற்போதைய ஆசிரியர்கள் புதிய தொழில்நுட்ப முறைகளை உள்வாங்கி மாணவர்களுக்கு சேவை செய்ய மிகவும் கஷ்டப்படுகின்றார்கள். இதனால் 21ஆம் நூற்றாண்டின் ஆசிரியர்களை பாரிய தொழில்நுட்பப்புரட்சி ஒன்றுக்குள் உள்வாங்க வேண்டிய கட்டாயதேவை உள்ளது. புதிய நிலைமையில் வகுப்பறையில் பிரவேசிக்கும் ஆசிரியர் ஒருவர் புதிய திறன்களைப் பெற்றிருத்தல் வேண்டும். ஏனெனில் புதிய நுட்பங்களை பயன்படுத்தும் திறன்களை ஆசிரியர்கள் தான் மாணவர்களுக்கு நிச்சயம் வழங்குதல் வேண்டும்.


கல்வித் தொழில்நுட்பமானது இன்று பல்வேறு பரிமாணங்களில் கையாளப்படுகின்றது. அத்துடன் கணினி ஒரு முக்கியமான கற்பித்தல் உபகரணமாக மாறியுள்ளதனையும் யாராலும் மறுக்கமுடியாது. அதாவது கலைத்திட்டத்தின் உள்ளடக்கத்தினை நிர்ணயிப்பதிலும், கற்றல் முறைகளை ஒழுங்குபடுத்தலிலும் கணினிகள் முக்கியமான திருப்பத்தினை ஏற்படுத்தியுள்ளன. ரெய்லர், சோனக் (Taylor, and Chonak - 1985) என்பாரின் கருத்துப்படி கல்விமுறைமையில் இன்று கணினிகள் முக்கியமான மூன்று பாத்திரங்களை வகிப்பதாகக் கூறப்படுகின்றது. ஒரு போதனையாளன் (As a Tutor), ஒருகருவி (Tool), ஒரு போதனைப் பயனாளி (Tutee) என்ற முக்கிய பாத்திரங்களில் கணினிகள் இன்று கையாளப்படுவதாகக் குறிப்பிடப்படுகின்றது. இருந்த போதும் வளர்ச்சியடைந்துகொண்டு செல்லும் தொழிநுட்பப்போக்குக் காரணமாக கணினிகளின் வகிபாகம் மேலும் விரிவடையும் என கல்வியியலாளர்கள் எதிர்பார்க்கின்றனர்.

அமெரிக்கா, ஜப்பான், அவுஸ்திரேலியா, பிரிட்டன் போன்ற நாடுகளில் கணினியை அடிப்படையாகக் கொண்ட புதியநுட்ப முறையில் அமைந்த கல்விமுறைமை நன்கு விருத்தியடைந்துள்ளது. அமெரிக்காவைப் பொறுத்தளவில் 1991ஆம் ஆண்டளவில் ஒவ்வொரு பாடசாலையிலும் ஒவ்வொரு 18 மாணவர்களுக்கு ஒரு கணினி என்ற அடிப்படையில் கணினிகள் கல்வி முறைமைக்குள் இருந்ததாகக் கணக்கிடப்பட்டுள்ளது. இது 2000ஆம் ஆண்டில் 5 மாணவனுக்கு ஒரு கணினி என்ற அடிப்படையிலும் 2009ஆம் ஆண்டில் ஒவ்வொரு மாணவனுக்கு ஒரு கணினி என்ற அடிப்படையில் கணினிகள் கற்றலில் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இதேவேளை இணைய தொடர்பாடல் வசதிகளுடன் கூடிய செயற்பாட்டறைகள் 1994ஆம் ஆண்டில் 3% இல் இருந்து 2005ஆம் ஆண்டில் 94% ஆக வளர்ச்சியடைந்துள்ளது. அத்துடன் இந்நாடுகளில் ஆசிரியர்கள், பாடப் புத்தகங்கள் என்பன முதன்மை மூலங்களாகவும் (Primary Source) இணையத்தளங்கள் இரண்டாம்நிலை மூலங்களாகவும் (Secondary Source) கற்றலில் பயன்படுத்தப்படுகின்றன. இந்நிலையில் பாடப்புத்தகங்கள் நீண்டகாலத்திற்கு இந்த முதன்மை நிலையினை வகிக்கப் போவதில்லையென்றும் அந்த நிலையினை இணையத்தளங்கள் வகிக்கும் எனவும் அமெரிக்கா போன்ற நாடுகளின் கல்வியியலாளர்கள் கருதுகின்றனர். 2005ஆம் ஆண்டளவில் கம்பியில்லாத் தொழில்நுட்பம் (Wireless Technology) பாவனைக்கு வந்தமையும் அது மிகவும் செலவு குறைந்தநிலையில் நன்கு பாவனைக்கு வந்தமையும் இந்தப்புதிய தொழில் நுட்ப யுகத்திற்குள் இந்நாடுகளின் பாடசாலைகள் புகுவதற்கான வழியை இலகு படுத்தின.

உலகளாவிய ரீதியில் 1950களில் பாடசாலைகள் கணினித் தொழில்நுட்பத்திற்காகத் திறந்துவிடப்பட்டன. ஆனால் எமது பாடசாலைகளில் இன்னமும் அத் தொழில்நுட்பம் வகுப்பறைகளுக்குள் உட்புகவில்லை. மேலை நாடுகளில் வகுப்பறைக் கற்றலின் தரம் மிகவும் உயர்ந்த நிலையில் காணப்படுகின்றது. கணினிகள், பல்லூடகத் திரைகள், தொலைக்காட்சிப் பெட்டிகள் போன்ற தொழில்நுட்பச் சாதனங்களும் அவற்றினை இயக்கும் திறன்களைக் கொண்டுள்ள ஆசிரிய ஆளணி வளமும் அந்நாடுகளின் வகுப்பறைக் கற்றலின் தரத்தினை உயர்ந்த நிலையில் பேண உதவிய காரணிகள் ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஒவ்வொரு மாணவனும் வேறுபட்ட முறையில் தகவல்களை ஒன்று திரட்டும் (Information Gathering) இயல்பினைக் கொண்டிருப்பதுடன் அவர்களின் தேவைகள், விருப்பு வெறுப்புகள், கற்றல் முறைகள் வேறுபாடுடையவையாகவும் காணப்படுகின்றன. சில மாணவர்கள் காட்சிப்புலன்கள் மூலம் (Visual Learners) கற்பர். சிலர் செவிப்புலன் மூலமும் (Auditory Learners), இன்னும் சிலர் இயக்க விதிகள் (Kinesmatic) மூலமும் கற்றலை மேற்கொள்வர். இன்னும் சில மாணவர்கள் வேகமாகக் கற்கும் திறனுடைய மாணவர்களாக இருப்பர். சிலர் அதிக நேரம் எடுத்துக் கற்றலை மேற்கொள்பவர்களாக (Slow Learners) இருப்பார்கள். சில மாணவர்கள் பாட வகுப்பறைகள் தம்மைப் பாதுகாக்கின்ற சூழலில் இல்லை என உணர்கின்றார்கள். ஆகவே மாணவர்களின் தேவைகள், விருப்பங்கள் என்பன அறியப்பட்டு வேறுபடுத்தப்பட்ட கற்றலுக்கான ஊக்குவிப்பும் (Motivation to learn) மாணவர்களுக்கு, மனவெழுச்சி கட்டமைப்பு வேறுபடுத்தல் வேண்டும். மேலும் இன்றைய உலகில் தேர்ச்சிகள், வாய்ப்புகள், திறன்கள் என்பன வேறுபட்டளவில் அதிகரித்துள்ள நிலையில் பொதுக்கல்வி முறையானது புதிய முறையில் கல்வியை வழங்குகின்றது.

வளர்ச்சியடைந்துகொண்டுவரும் நாடுகளின் கல்வி முறையில் இடம்பெற்றுவரும் மாற்றங்களுடன் இணைந்து செல்வதற்கான சூழ்நிலையை நாம் ஏற்படுத்திக் கொள்ளாது விட்டால் தொடர்ந்தும் குறைவிருத்தி நிலையிலேயே இருக்கவேண்டி ஏற்படும். ஆகவே, மாறிவரும் பூகோள நிலைமையின் கீழ் எமது கல்வியின் தரத்தினை உயர்த்தவேண்டுமாயின் கல்விக்கான உள்ளீடுகளிலும் கவனஞ்செலுத்தவேண்டும்.

**கல்வியில் கணினிப்பயன்பாட்டின் எதிர்காலம்**

தற்போதைய பொதுக்கல்வி முறையானது கல்வியில் இடைவிலகுவோர் வீதத்தை அல்லது இடையில் கைவிடப்படுவோரின் வீதத்தினை மிகவும் உயர்ந்த நிலையில் வைத்திருக்கக் காரணமாக உள்ளது. ஏனெனில் எமது வகுப்பறைகளின் அளவுகள் மிகவும் பெரியன. நாம் கல்வியில் ஆசிரியரின் பாரிய பற்றாக்குறையை எதிர்கொள்கின்றோம். அத்துடன் நிதிநெருக்கடி, கல்வி சார் மத்தியமயப்படுத்தலான கட்டுப்பாடுகள் (Over Regulations), போதிய பயிற்சியின்மை, உட்கட்டமைப்பு வசதிகளின் விருத்தியின்மை எனப் பல்வேறு பிரச்சினைகளை இன்றுள்ள கல்விமுறை எதிர் நோக்குவதாகக் குறிப்பிடலாம். எவ்வாறாயினும் இங்கு குறிப்பிடும் பிரச்சினைகள் அனைத்தும் வெற்றிகரமாகத் தீர்க்கப்படுமாயின் அனைத்து மாணவர்களும் மிகவும் வெற்றிகரமான முறையில் கற்றலை மேற்கொள்வார்களா? என்றால் துரதிஷ்டவசமாக அதற்கான விடை "இல்லை" என்றே பதிலாக அமையும். ஏனெனில் அனைத்து மாணவர்களையும் ஒரு குறிப்பிட்ட வகுப்பறையில் ஒரே மாதிரியான கற்றல் சூழலில் இருந்து ஒரே மாதிரியான கற்பித்தல் அணுகுமுறை மூலம் வெற்றிகரமான கற்றலை மேற்கொள்ள முடியாது என்று மேலைநாடுகளின் பல்வேறு கல்வியியல் ஆய்வுகள் உறுதிசெய்துள்ளன. அதாவது

இந்த வகையில் தற்போதைய ஆசிரியர் மையக் கல்விக் கொள்கை (Teacher Centered, One – size – fits – all paradigm of education) அனைத்து மாணவர்களின் தேவைகளையும் நிறைவேற்றப் போதுமானதல்ல. இந்நிலையில் இனிவரும் காலங்களில் வகுப்பறையில் ஆசிரியரின் வகிபாகமும் பெருமளவு மாறத்தான் வேண்டும். இனியும் அவர் அறிவின் உறைவிடமாக இருந்து அதனை மாணவர்களுக்குப் போதிப்பவராக இருக்க முடியாது. கற்றலுக்கு வழிசெய்துகொடுக்கும் ஒருவர் (Facilitator) ஆகவே அவர் இருத்தல் வேண்டும். மாணவர்கள் தாமாகவே விடயங்களைப் பெற்றுக் கொள்வர். ஆனால் அத்தொழில்நுட்பத்தினைப் பயன்படுத்தும் விதத்தினை நிச்சயமாக ஆசிரியர் தான் மாணவர்களுக்குக் காட்ட வேண்டும். அதற்கான பயிற்சியை அவர் கட்டாயம் பெற்றிருக்க வேண்டும். ஆகவே தகவல்தொழில்நுட்பப் புரட்சி இன்றைய கல்வி முறையில் முக்கியமானதொரு அம்சமாகக் கொள்ளப்பட வேண்டியதாகும். இவ்வாறு இன்றைய ஆசிரியர்களதும், மாணவர்களதும், கல்வித் தேவைகளைப் பூர்த்திசெய்து கொள்ளக்கூடியதான தொழில்நுட்பப் போக்கு ஒன்று வளர்ச்சியடைந்த அமெரிக்கா போன்ற நாடுகளின் கல்விச் சமூகத்தில் காணப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. கல்வியை தரப்படுத்தல் மற்றும் (Standardization) முறையில் இருந்து தனிப்படுத்தல், வழக்கமாக்குதல் (Personalization and Customization) முறைக்குள் உள்வாங்கும் நிலையை நன்று காணப்படுகின்றது. அதாவது இணையத்தினை அடிப்படையாகக் கொண்ட தொழில்நுட்பத்தில் (Web based technology) இதனைப் பகுக்கப்படுகின்றது. web.1.0. ஆனது தகவல்களைப் பெறுவதற்கும் மாணவர்களால் பரவலாகப் பயன்படுத்தப்பட்டது. அதனைத் தொடர்ந்து web.2.0 தொழில்நுட்பத்தில் கூட்டாகச் செயற்படல் மற்றும் இடைவினைத் தொடர்பு கொள்ளல் (Collaboration and Interaction) அம்சங்கள் பலவும் சேர்க்கப்பட்டன. தற்போது web. 3.0 தொழில்நுட்பம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இது வழக்கமாக்குதல் (Customization) சிறப்பம்சங்களைக் கொண்டது. உதாரணம் : igoogle

2. தற்போது நேரத்தினை மையமாகக் கொண்ட அடைவுமட்ட முறையே (Time based student progress) காணப்படுகிறது. ஆனால் அடைவு மட்டத்தினை அடிப்படையாகக் கொண்ட விருத்தி முறையானது (Attainment based progress) சிறந்ததொரு முறையாகும். செயற்கையான நேரக் கட்டுப்பாடு (Artificial time constraint – Mott and Wiley - 2009) கைத்தொழில் யுகத்தில் இருந்த முறைகள் என்றும் இன்றைய தகவல் யுகத்தில் இது ஏற்புடையது அல்ல என்றும் இவர்கள் குறிப்பிடுகின்றனர். ஏனெனில், மாணவர்கள் வேறுபட்ட வீதங்களில் கற்றலை மேற்கொள்வதனால் நிலையான நேரத்தினைக் கொண்ட கால அட்டவணைகளுக்குப் பதிலாக நெகிழ்வுள்ள கால அட்டவணைகள் மாணவர் கற்றலுக்காக வழங்கப்படுகின்றன. அடைவு மட்டத்தினை அடிப்படையாகக் கொண்ட விருத்தி முறையானது மாணவர்கள் கற்றலை வழக்கமாக்கிக் கொண்டு தமது சொந்தத் தேவைகளை வேகமாக மேற்கொள்ள அது அனுமதிக்கின்றது.

3. கல்வி வளங்களைப் பொறுத்தவரையில் மாணவர் இலவசமாகப் பெறக்கூடிய கல்வி மென்பொருட்கள் பல காணப்படுகின்றன. தனியுரிமையாகப் பெறக்கூடிய (Proprietary Sources) வளங்களிலிருந்தும் பதில் செலவின்றிப் பெறக் கூடிய திறந்த (Open Source) மென்பொருட்கள் கிடைப்பதற்கேதுவாக உள்ளன. உதாரணமாக Google இணையப் பிரயோக நிலையமானது (Web application) கல்வியியல் - வளங்களிலிருந்தும் சமூகங்களுக்கும் பல open source



மென்பொருள்களை இலவசமாக வழங்குகின்றது. மேலும் மாணவர்கள் ஆசிரிய உதவியின்றி அல்லது அதிக நிபுணத்துவம் இன்றி வகுப்பறை இணையத் தளங்களை இலவசமாக உருவாக்கலாம். அத்துடன் மாணவர்கள் ஆசிரியர்களின் தேவைகளைப் பொருத்தமான விடயங்களைப் பெறும் கொள்ளக் கூடிய வழிமுறைகளையும் அளிக்கின்றது.

4. பல செயற்பாடுகளை ஒன்றிணைக்கும் தொழில்நுட்பங்கள் கண்டுபிடிக்கப்பட்டிருத்தல் இன்னொரு முக்கிய அம்சமாகும். உதாரணமாக அப்பிள் (Apple) நிறுவனம் உலகளாவிய ரீதியில் புகழ்பெற்ற தொழில்நுட்பநிறுவனமாகும். முதலில் iPods எனப்படும் கருவிகளை ஒலிப்பதிவைக் கேட்கக் கூடியதாகக் கண்டுபிடித்தது. பின்னர் வேறுபட்ட பல தொழிற்பாடுகளை ஆற்றக் கூடிய iPods கண்டுபிடிக்கப்பட்டன. இசையை இரசித்தல், திரைப்படங்களைப் பார்த்தல், விளையாட்டுக்கள் விளையாடல் மற்றும் வேறு பலபிரயோகங்களை மேற்கொள்ளல், இணையத்தளங்களைப் பயன்படுத்தல் என்றவாறு பல்வேறு செயற்பாடுகளை ஆற்றக்கூடிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

iPods களை கண்டுபிடித்தது. அதற்கு மேலாக இன்று தொடுகை உணர்வுடன் (Touch feature) 3G technology கொண்ட iPods புழக்கத்தில் உள்ளன. இதன் காரணமாக மூன்று வேறுபட்ட கருவிகளைப் பயன்படுத்துவதற்குப் பதிலாக ஒரு கருவியில் கூடுதலான செயற்பாடுகளை வினைத்திறனுடன் மேற்கொள்ளமுடிகிறது.

ஆகவே, ஒரு கல்வித் தொழில்நுட்பமானது இந்தத் தகவல் யுகத்தினது மாணவர்களினதும் ஆசிரியர்களினதும் தேவைகளை நிறைவேற்றுவதற்கு தொழில்நுட்ப முறைகளையும் பயன்பாடுகளையும் பாடசாலை முறைமைக்குள் உள்வாங்க வேண்டும். இவ்வாறு வளர்ச்சியடைந்த நாடுகளில் இன்று நடைமுறைப்படுத்தப்படும் வெற்றிகரமான கற்றல் முகாமைத்துவ முறைமையான Personalized Integrating Educational System – PIES என்பது இன்றைய மாணவர்களின் கல்வித் தேவைகளுக்கேற்ற வகையில் வடிவமைக்கப் பட்டுள்ளது. PIES முறைமையானது, ஏற்கனவே வடிவமைக்கப்பட்ட (Built-in-Function) பல செயற்பாடுகளைக் கொண்ட, திறந்த (Open), ஒன்றிணைக்கப்பட்ட (Integrated) அம்சங்களைக்கொண்டு இன்றைய மாணவர்கள், ஆசிரியர்கள், கல்வி நிர்வாகிகள் ஆகியோர் மேம்பட்ட முறையில் கற்றலை மேற்கொள்ளத்தக்கவாறு வடிவமைக்கப்பட்ட ஒரு முறையாகும். (PIES பற்றி இங்கு முழுமையாக நோக்கப்படவில்லை.) இந்த முறைமையில் கற்றலை மேற்கொள்வோர் இலகுவில் வேறுபட்ட முறைகளில் கற்றலை மேற்கொள்வதற்கேற்ற வகையில் வடிவமைக்கப்பட்ட நான்கு முக்கியமான தொழிற்பாடுகளை ஐக்கிய அமெரிக்காவின் இன்டியானா பல்கலைக்கழகப் பேராசிரியர்களான Charles M. Raigeluth, Watson, Dutta, Chen, and Powell (2008) ஆகியோர் குறிப்பிட்டுள்ளனர்.

1. பதிவுகளைப் பராமரித்தல் (Record Keeping Function) இது கற்பதற்கு வேண்டிய விடயங்கள் என்ன? ஏற்கனவே மாணவன் என்ன விடயங்களைக் கற்றுள்ளான்? ஒவ்வொரு மாணவனின் கற்றலிலும் என்னென்ன காரணிகள் செல்வாக்குச் செலுத்துகின்றன? போன்ற விடயங்களைக் கொண்டிருக்கும்.

2. திட்டமிடல் (Planning Function) :
பதிவுகளைப் பராமரிக்கும் செயற்பாட்டிலிருந்து பெறப்பட்ட தகவல்களின் அடிப்படையில் தனிப்பட்ட மாணவர்களினது அடைவு மட்டத்தினையும் தனிப்பட்ட இலக்குகளையும் அடிப்படையாகக்கொண்டு ஒவ்வொரு மாணவர்களுக்கும் தனிப்பட்ட ரீதியில் கற்றல் திட்டங்களை வடிவமைக்கும் கருவியாகத் தொழிற்படுகின்றது.

3. போதனை முறை (Instruction Function):
செயற்றிட்டங்கள் போன்று வடிவமைக்கப்பட்ட கருவிகள் மூலம் மாணவர்கள் வேகமாகக் கற்றலை மேற்கொள்ளக்கூடிய வசதிகளை இத் தொழிற்பாடு வழங்குகின்றது.

4. மதிப்பீடு (The Assessment Function) :
இது முற்றிலும் முன்னைய தொழிற்பாட்டுடன் இணைக்கப்பட்டதாகக் காணப்படுகின்றது. இது மாணவர்களின் செயற்பாடுகளின் விளைவுகளை மதிப்பிடும் பணியாகவும் தேவையான பின்னூட்டலை வழங்கும் செயற்பாடாகவும் காணப்படுவதுடன் ஆசிரியர்கள் மாணவர்களுக்கான மதிப்பீடுகளை மேற்கொள்வதற்கான வடிவமைப்பிலும் அபிவிருத்தி செய்தலிலும் ஆதரவு வழங்குகின்றது.

**முடிவுரை**

இறுதியாக கல்வியில் கணினியின் பயன்பாடுபற்றி முழுமையாக எதிர்வுகூறலை மேற்கொள்வது கடினமெனினும், இன்று அடுத்த காலப்பகுதியின் கணினிப் பயன்பாடு தொடர்பான பல அபிவிருத்தி நிலைமைகளை நாம் கண்கூடாகக் காணமுடிகின்றது. இந்த அபிவிருத்தி நிலைமைகள் கல்வியில் கணினிப் பயன்பாட்டின் ஒரு காத்திரமான நிலைமைக்கு பங்களிப்பு வழங்கவேண்டும். மேலும் கல்வித் தொழில்நுட்பம் மீதான தேவைகளில் ஏற்பட்டுள்ள மாற்றங்களும், தகவல் யுகத்தில் மாணவர்களின் இயல்புகளும் இன்று அதிகரித்த கணினிப் பயன்பாட்டினை இத் தகவல் யுகத்தில் வேண்டி நிற்கின்றன. மேலும் இன்று உலகளாவிய ரீதியில் அறிவுப் பொருளாதாரம் (Knowledge Economy)பற்றியும் நாடுகளுக்கிடையே அல்லது ஒரு நாட்டின் குழுக்கள் பிரதேசங்களுக்கிடையில் அறிவு இடைவெளி (Knowledge Gap) அதிகரித்துச் செல்வதாகவும் குறிப்பிடப்படுகின்றது. இந்த இடைவெளியை அளவிடக்கூடிய பல்வேறு குறிகாட்டிகள் இன்று குறிப்பிடப்படுகின்றன. அவற்றுள் அதிகரித்த தகவல் தொழில்நுட்பக் கட்டுமாணங்கள், தனிப்பட்ட கணினிப் பயன்பாடு, இணையத்தின் பயன்பாடு என்பனவும் (இவற்றினைவிட வேறு முக்கிய காரணிகளும் உள்ளன) முக்கிய குறிகாட்டிகளாக இன்று விதந்துரைக்கப்பட்டுள்ளன. ஆகவே, நடைமுறையிலுள்ள போக்குகள் கல்வியில் கணினிகள் கொண்டுள்ள பார்வையை மாற்றவேண்டிய தேவையை கட்டாயம் வேண்டி நிற்கின்றன. ஆசிரிய மையக் கல்விக்கு (Teacher centered Education) அதனை ஒரு கருவியாகப் பயன்படுத்துவதனை விடுத்து கற்போனை மையமாகக் கொண்ட சூழலுக்கு (Leaner-centered environment) ஒரு பிரதான கருவியாகப் பயன்படுத்த வேண்டும். இந்த வகையில் நோக்கும்போது இந்தத் தகவல் யுகத்தில் PIES போன்ற கணினியை மையமாகக் கொண்ட கற்பித்தல் முறைகளுக்கு பாரிய தேவை ஒன்று விரைவில் ஏற்படும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை

# விடைக்கெனத் தேர்ந்த வினா



நெடுந்தீவு மகேசு

அன்று பாடசாலையில் ஆண்டிறுதிப் பரீட்சை நடைபெற்று முடிவுற்றிருந்தது. மாணவர் மகிழ்ச்சியுடனும் மன அமைதியுடனும் காணப்பட்டனர். அந்த நேரம் பார்த்துத் திருச்செல்வம் மாஸ்டர் பௌதிகவியல் ஆய்வுகூடத்தில் சில மாணவர்களை ஒன்று கூட்டி ஆட்டமும் பாட்டுமாக ஒரு ஆரவாரம். அறைக்கு வெளியே அது ஒரு இனிய இசைச்சத்தமாகப் பலரின் கவனத்தையும் ஈர்த்தது. சுபாகரன் அந்த அறைக்கு வெளியே நின்றிருந்தான். திருச்செல்வம் மாஸ்டரின் கற்றல் கற்பித்தல் முறை, மாணவர் மீது அவர் காட்டிய அன்பு, அரவணைப்பு, அக்கறை எல்லாம் அவரின்மீது அவனுக்கு நிறையவே மதிப்பை ஏற்படுத்தியிருந்தது. சுபாகரன் அறையில் எவ்வாறு தன்னை வெளிப்படுத்துகிறான் என அறிய போல்ஜான் பாட்டு ஆட்டம் நடக்கும் விளையாட்டு அறையில் நாட்கள் அவனுக்குப் பழக்கமாக இருந்தது. மயிலைப் போல் ஆடுவான். குயிலைப் போலப் பாடுவான். எல்லாவற்றிலும் அவனது ஆற்றலை வெளிப்படுத்த இருந்த பயிற்சிகள் அறைக்குள்ளே போய்ச் சேர்ந்தது. இசையாட்ட மகிழ்வை அனுபவித்தபடி சுபாகரனும் பொதுவாகச் சென்று இணைந்து கொண்டான். "சின்னஞ்சிறு கண்கள் சின்ன மகளைப்போல் தொடங்கி டிங்கிரி டிங்காலே மீனாட்சி டிங்கிரி டிங்காலே" வரை பாடல்கள் இசைக்கப்பட்டன. மேசைகள் தாளங்களாகிக் கை தட்டல்களும் நிறைந்தன. ஒரு பாடலைப் பாடும் ஆட்டமும் தொடர ஏனைய மாணவருடன் சேர்ந்து சுபாகரன் உற்சாகமாகப் பாடினான். ஆடினான். திருச்செல்வம் மாஸ்டரும் மாணவர்களை மகிழ்வித்ததில் ஒரு மனத்திருப்தி. அவரும் தனது மகிழ்ச்சியை வெளிப்படுத்தக் கைகளைத் தட்டி மாணவர்களை உற்சாகப் படுத்தினார். பல நிமிட நேரங்கள் மாணவருடன் சேர்ந்து செலவிட்ட திருச்செல்வம் மாஸ்டர் அங்கிருந்து போகச் சில நிமிட நேரங்களே ஆகியிருந்தன. திடீரென அங்கே வந்த அதிபர் பாலசிங்கம் "இங்கே என்ன நடக்கிறது" என்று கர்ச்சித்தார். அவரது கர்ச்சனை அந்த அறையை அதிர வைத்தது. அதிபரின் குரல் கேட்ட கணத்திலேயே ஆட்டமும் பாட்டும் அடங்கியது. இரைந்து பெய்த மாரி மழை ஓய்ந்தது போன்றது ஒரு கணம் அமைதி! அப்படி நின்ற மாணவர் பலரும் அறையினை விட்டு விரைவாக வெளியேறினர். ஆனால் சுபாகரனும் எஞ்சி நின்ற ஒரு சிலரும் வேறுவழி வெளியேற முயன்றபோது "ஒருவரும் போகக் கூடாது. யார் இங்கே சத்தம் போட்டது?" என்ற அதிபரின் அதட்டல் அறையில் இருந்தவர்களை மௌனத்தால் நிறைத்தது. திருச்செல்வம் மாஸ்டரைக் காணவில்லை. அதிபரின் கண்களில் கோபக்கனல் தெறித்தது. தலை குனிந்தபடி நின்ற மாணவர்களின் கைகளைப் பார்த்த அவர் "யார் சத்தம் போட்டது?" எனக் கேட்டுப் பலமுறை அதட்டினார். அவரின் கையிலே பிரம்பு இருந்தது. சத்தம் போட்டவன் விடைபெற முடியாமல் தவிப்பவர் கையிலிருந்து தப்புவதற்காகச் சத்தம் போட்டவர்களின் பெயர்களைக் கூறக் காட்டிக் கொடுக்கவும் மனம் இடந்தரவில்லை. ஆனாலும் விட்டுப் போகாமல் எஞ்சி நின்றவர்களுள் முன்னால் நின்ற சுபாகரனை நோக்கி அவரது கை நீண்டது.

சுற்றுவளைப்பு வியூகத்துச் சுபாகரனின் கையைப் பற்றிக் கொண்ட அதிபர் ஆவேசமாய் "சத்தம் போட்டது ஆர்? சத்தம் போட்டது யார்?" என்று கேட்டுப் பலமுறை அதட்டினார். மூச்சொன்று, அடிக்கொன்று உண்மையைச் சொல்லடா? உண்மையைச் சொல்லடா! என்று உரத்துக் கேட்கும் கேள்வியைக் கொண்டு விழும் பிரம்படியை அவனால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. உண்மை வெளிவரவில்லை என்ற முடிவு அதிபரின் மனத்தில் கல்லில் வடிக்கப்பட்டாயிற்று. அவன் சத்தம் போட்டேன் என்று சொல்லும் வரையில் பிரம்படிகள் ஓய்வதாயில்லை. சுபாகரனிடத்திலிருந்து அதிபர் எதிர்பார்த்த கேள்விக்கு உண்மையைச் சொல்லிவிட்டான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தண்டனை உடனேயே நிறுத்தப்படும். ஆனால் சுபாகரனோ அதிபர் எதிர்பார்க்கும் உண்மையை ஒப்புக் கொள்ளத் தயாராக இல்லை. பிரம்படியால் பிறந்த வேதனை அவனை வாட்டியது. அதிபர் எதிர்பார்க்கும் உண்மையோ அவனுடைய எண்ணத்தில் பொய்யாகவே விசுவரூபம் எடுத்திருந்தது திருச்செல்வம் மாஸ்ரர் மாணவர்களை உற்சாகப் படுத்தினார். அவர்களின் ஆடல் பாடல்களை வெளிக் கொணர்ந்து இசைத்திறன் மலர்ந்த மகிழ்ச்சி நிறைந்த நிகழ்ச்சியாக்கினார். அது எவ்வாறு வெறுமனே சத்தம் போட்டார்கள் என்பதான அர்த்தமற்ற பொய்யாக்கப்படுகிறது. "என்ன சேர் நீங்கள் என்னைப் பொய்யா சேர் சொல்லச் சொல்லுறீங்க?" சுபாகரனின் வார்த்தைகள் உறுதியாக வெளிப்பட்டன. ஓங்கி அடிக்க உயர்ந்த பிரம்பு திடீரெனத் தாழ்ந்தது. அதிபரின் சிந்தனையில் ஒரு கீறல். உண்மை எது? மனதில் சந்தர்ப்ப வசத்தால் அழுத்திப் பதிக்கப்பட்ட உண்மைகள் பல வேளைகளில் பொய்களாக இருப்பது என்னவோ உண்மைதான். திருச்செல்வம் மாஸ்ரரால் தொடக்கி விடப்பட்டு உற்சாமூட்டப்பட்ட மாணவர்களோ, தமது இசையையும் இசை கலந்த ஆட்டங்களையும் எதுவும் அர்த்தமற்ற சத்தமாகக் கொள்ளவில்லை. அது இனிமையானது. மகிழ்ச்சி தருவது. ஒரு ஆசிரியரின் வழிகாட்டலில் முன் வைக்கப்பட்டது.

"புவியியல் அறையில் ஒரே சத்தமாய்க் கிடக்கு". இதுதான் அதிபரின் காதுகளுக்குச் சென்றடைந்த செய்தி. திருச்செல்வம் மாஸ்ரர் மீதிருந்த காழ்ப்புணர்வின் வெளிப்பாடே அது. அதைக் கேட்டதும் ஆய்ந்தறியாமல் வந்து ஆர்ப்பாட்டமிட்ட அதிபருக்கு இப்பொழுதுதான் உண்மை தெரிந்தது.

சுபாகரனைக் காணும் தோறும் அதிபர் தனது தவறை நினைவுபடுத்திக் கொள்வார். தவறான விடைகளை வைத்துக் கொண்டு தவறான விடைகளைப் பெறுவதற்காகவே வினாக்களைத் தயாரிக்கவோ கேட்கவோ கூடாது என்ற முடிவு அவருக்கு இனித்தது. "உண்மையைச் சொல்! உண்மையைச் சொல்?" என்று உரப்பிக் கேட்ட வினாவுக்கு அதிபர் தன்னுடனே வைத்திருந்து எதிர்பார்த்த விடை தவறானது என்பதையும் அந்த விடை உண்மையல்ல அது பொய்யென்பதையும் உறுதியாக உணர்த்திய சுபாகரன், என்றுமே அதிபரின் மனதில் ஒரு வினாக்குறியாகவே தோன்றினான்.

## திருக்குறளும் கல்விக்கொள்கையும்

**"பொச்சாப்புக் கொல்லும் புகழை அறிவினை**
**நிச்ச நிரப்புக்கொன் றாங்கு"**

குடும்பத்தின் வறுமையும் குழந்தையின் வளர்ச்சியைப் பாதித்து, சரியான ஆளுமை வளர்ச்சிக்கு தடையாக உள்ளது. பசிப்பிணியால் வாடும் குழந்தை பிறருடன் நன்கு பழகாது. பழகவே தயங்கும். கிழிந்த காற்சட்டை, மேற்சட்டை, அழுக்குடன் கூடிய ஆடைகள், கிழிந்த நூல்கள், கிழிந்த சப்பாத்துக்கள் ஆகியவற்றுடன் பாடசாலைக்கு வரும் குழந்தைகளை நாம் நாடெங்கிலும் காண்கிறோம். தம் பெற்றோருக்குத் துணையாக வீட்டிலோ தோட்டத்திலோ வயலிலோ அலுவல்களை முடித்துவிட்டு அவசர அவசரமாக நேரந்தவறி வருபவர்களின் எண்ணிக்கை சிறிதன்று. கிராமங்களில் உள்ள பாடசாலைகளில் இது சர்வசாதாரணம். இவர்கள் வீட்டில் படிக்க விளக்கு இராது. காற்றோட்ட வசதி இராது. போதுமான உணவிற்கும் வழி இருக்காது, இருந்தாலும் அது தகுந்ததாக இருக்காது. நூல்கள் வாங்கவும் பொருளாதார நிலை இடங்கொடுப்பதில்லை. இக்கொடுமைகளைக் கருதி அரசு தனது கல்விக் கொள்கையில் எல்லோருக்குமான கல்வியை வழங்க இலவசக் கல்வி, இலவச நூல், இலவசக் கற்பலகை, பகல் உணவு போன்ற திட்டங்களை ஏற்படுத்தியுள்ளது.


**ஆசிரியர் என்பவர் செயல்திறன் ஆய்வின் வரலாற்று வளர்ச்சி – டெய்லர்** *(Taylor)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேர்காணல்

# விருதினை வேண்டாப் பணி...



## உழைக்கும் ஒவ்வொரு ஆசிரியரையும் பற்றியது

ஆசிரியத்துவம் என்பது [illegible] நிறைந்த பொறுப்பு [illegible] ஆசிரியத்துவம் [illegible]

[illegible] ஆசிரியர் [illegible] பணியை நாம் இங்கு [illegible]

[illegible] ஆசிரியர் பணி [illegible] திருமதி பிரேமா காசி விஸ்வநாதன் ஆசிரியை. இவர் கொழும்பு நல்லாயன் மகளிர் கல்லூரியில் ஆரம்பக்கல்வி ஆசிரியராக பணிபுரிகின்றார். [illegible]

[illegible]

[illegible] ஆசிரியப் பணியில் [illegible] பற்றி [illegible]....

**கேள்வி:- உங்களைப் பற்றிக் கூறுங்கள்?**

பதில்:- நான் ஆரம்பக் கல்வியை [illegible] கல்லூரியிலும், இடைநிலைக்கல்வியை [illegible] பின்பு ஆசிரியர் பணிக்கு [illegible] எனது பணியைத் தொடங்கினேன். [illegible] ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையிலும் [illegible] எனது பணியைத் தொடர்ந்து செய்து கொண்டிருக்கின்றேன்.

**கேள்வி:- நீங்கள் இத்தொழிலைத் தேர்ந்தெடுத்தமைக்கான காரணம் என்ன?**

பதில்:- [illegible]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஆசிரியன் ஏழைக்கு எழுத்தறிவித்தல்" என்றான் பாரதி. அந்தவகையில் இன்றுவரையும் கல்வி மூலம் நிலைமையைப் பெற்றுக் கொள்ளலாம். அது சிறந்த சேவையும் கொண்டதாகும். மற்றவர்களின் உயர்வு கண்டு மகிழ்பவர்களாக இருக்கின்றோம் என்ற மன நிறைவினைப் பெற்றுக் கொள்ள ஆசிரியர் தொழிலை விட வேறு தொழிலை குறிப்பிட முடியாது. மாணவர்களை எல்லைத் துறைகளில் செய்தல், வழிநடத்தல் இவற்றைப் பெறலாம் என்பதே இத்தொழிலின் சிறப்பு ஆகும்.

**கேள்வி: மாணவர் விரும்பும் ஆசிரியராக இருப்பது பற்றி உங்களது கருத்து?**

பதில்: கருணையுடன் நடந்து கொள்பவராக இருத்தல்.
சிநேகத் தன்மை உள்ளவராக இருத்தல்.
நியாயமாக நடப்பவராக இருத்தல்.
பொறுமை உள்ளவராக இருத்தல்.
சமத்துவத்தை விரும்புவராக இருத்தல்.
பாடங்கள் தொடர்பான பிரச்சினைகளை தீர்ப்பதற்குரிய பண்பு உள்ளவராக இருத்தல்.
பிள்ளைகளின் பிரச்சினைகளை விளங்கிக் கொள்ளும் தன்மை உள்ளவராக இருத்தல்.
பிள்ளைகளுக்கு வழிகாட்டும் பண்புள்ளவராக இருத்தல்.

எதிர்கால பாடசாலையிலும் ஒழுக்கமுடையவர்களாக இருத்தல் என்பவற்றைக் குறிப்பிடுகின்றேன். இவ்விதம் நடந்து கொள்வதுதான் இலகு.

**கேள்வி- இறைப்பணிதரும் மகத்துவம் பற்றி?**

பதில்: பத்து மாதம் சுமந்து ஒரு பிள்ளையைப் பெற்றெடுப்பவள் தாய். அந்தப் பிள்ளையை அறிவுடைய சமூகத்தில் நல்லவர்களாக ஆக்குபவர்கள் ஆசிரியர்கள். பல மனம் மாறாத பிள்ளைகளாக பள்ளிக்கூடம் வரும் மாணவர்களை வழிகாட்டி, அறிவூட்டி, உள்ளத்தால் உயரச் செய்பவர்கள் ஆசிரியர்கள். அறிவற்ற மனிதன் விலங்காக மதிக்கப்படுகிறான். மனிதனைப் பிறந்தவனை மனிதனாக வழி காட்டும் ஆசிரியத் தொழில் புனிதமானது. அதன் இலக்கு. இச்சமூகத்திற்கு கிடைக்கும் பெரும் மாணவரின் பெறுபேறு, அடைவுமட்டம், வளர்ச்சியாகும்.

மாணவர்களின் அறிவுப் புலமையைக் கூர்மைக்கச் செய்வதுதான் ஆசிரியர் பணி. "உலகம் என்பது உயர்ந்தோர் மாட்டு" என்ற ஆன்றோர் வாக்கு பல துறைகளில் சான்றோர்களை உருவாக்கும் ஆசிரியர் தொழில் மகத்தானது.

**கேள்வி- இத்தொழிலில் ஆற்றப்படும் அர்ப்பணிப்பு பற்றி?**

பதில்- பல்வேறு அறிவு நிலை வாய்ந்த வேறுபட்ட சூழலிலிருந்து வருகின்ற மாணவர்களைக் கற்பிப்பது ஆசிரியர் தொழில். நேர வரையறை பார்க்காமல் கடமை செய்ய வேண்டிய நிலை உள்ளது. வசதி குறைந்த பாடசாலைக்கு சமூகமளித்தல், பெற்றோர்களை அழைத்து சமூக சேவை செய்தல், பல்வேறு பாடசாலை நிகழ்வுகளின் போது மாணவர்களின் தனித்திறமைகளை அறிந்து வழிகாட்ட வேண்டிய நிலை. ஆசிரியர் விடுமுறைகளைக் கூட மாணவர் நலன் கருதி பாடசாலைக்கு வந்து மாணவரது மனித வளங்களை நல்ல முறையில் பயன்படுத்துகின்ற செயல்பாடுகளை அர்ப்பணிப்பு வேண்டும்.

**கேள்வி: தற்கால மாணவ சமுதாயம் கல்வியில் எதிர் நோக்கும் பிரச்சினைகள் எவையென நீங்கள் கருதுகிறீர்கள்?**

பதில்- பாடசாலைச்சூழல், வீட்டுச் சூழல், சமூகச் சூழல் தாக்கத்தை ஏற்படுத்திக் கொள்ளும் சாதகமற்ற காரணங்கள் உள்ளன.

**கேள்வி: பாடசாலைச் சூழல் இதில் எவ்வாறு பங்களிப்புச் செய்கின்றது?**

பதில்:- பாடசாலைச் சூழல் சம்பந்தமானவை
- போதிய ஆசிரியரின்மை
- வளப் பற்றாக்குறை
- சில ஆசிரியர்களின் அசட்டையான போக்கு
- மொழி மத வேறுபாடுகள்
- அளவுக்கதிகமான வேலைத் திட்டம்
- ஒத்துழைப்பின்மை





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கேள்வி:-** ***கற்பிக்கும்போது ஏற்பட்ட அனுபவங்கள் பற்றி?***

**பதில்:**: பல விடயங்கள் ஆசிரியர் சேவைக்காலத்தில் நடந்திருந்தாலும் கூட என்னால் மறக்க முடியாத நிகழ்ச்சி சில உள்ளன. 2003ஆம் ஆண்டு தரம் 3 இற்கு என்னிடம் ஒரு மாணவி புதிதாகச் சேர்ந்தார். புதிய பாடத்திட்டம் அறிமுகமான நேரம். அவருக்கு ஓர் எழுத்துக் கூடத் தெரியாது. எனக்கும் அவரைப் பார்க்கும் போது நான் என்ன செய்யப் போகிறேன் என்றும் தெரியவில்லை. தரம் 2 இற்கு மாற்றலாமா என அதிபருடன் கலந்தாலோசித்துக் கொண்டு இருந்த நேரம், அம்மாணவியின் பரிதாபமான முகம், ஏதோ தேடி பரிதவிக்கும் கண்கள், சொல்ல முடியாத சோகம் என ஏதோ ஒன்று என்னைத் தடுத்தது. அவரைப் பற்றிய ஆய்வில் ஈடுபட்டேன். தந்தை கல்லுடைக்கும் தொழிலாளி. தாயும் ஒரு மகனும் ஏதோ பிரச்சினையால் பிரிந்து வாழ்கின்றனர். தந்தை காலை வேலைக்குப் போக 7வயதுப் பிள்ளை வீட்டு வேலை செய்து வீட்டைப் பூட்டிக்கொண்டு பாடசாலைக்கு வருவார். இவ்வாறு பல தகவல்களை அறிந்து கொண்ட நான் பலவாறு அவரை நெறிப்படுத்தினேன். பின் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சிறப்பாகச் சித்தி எய்தினார். அத்துடன் பல இணைப்பாடவிதானச் செயற்பாடுகளிலும் பரிசில்கள் பெற்றார். அவரின் வளர்ச்சி எனக்கு பெரும் ஆறுதலளித்தது. எனது சரியான முடிவால் சிறந்த மாணவியை உருவாக்கிவிட்டேன்.

சிறிது காலத்தின் பின் அவரின் தந்தையார் காண்போரிடம் எல்லாம், அந்த ஆசிரியையால் தான் என் பிள்ளை இந்நிலைக்கு வந்தது எனக் கூறினார். அது எனக்கு விருது பெற்ற களிப்பை அளித்தது.

**கேள்வி:** ***இத்தொழில்சார் சலிப்புத்தன்மை எப்பொழுதாவது ஏற்பட்டதுண்டா? அப்படியில்லை எனில் அதற்கான காரணம்?***

**பதில்:** நான் எப்பொழுதுமே இவ்வாசிரியப் பணியில் சலிப்புக்கொண்டதே இல்லை. காரணம் எனது தந்தையார் உழைப்பையும் கடமையையும் இன்றுவரையும் எனக்குச் சொல்லித் தந்து கொண்டிருக்கிறார். 95வயதைத் தாண்டியும் அவரிடத்தில் இருக்கும் உழைப்பை கண்டு வியந்திருக்கிறேன். எந்தத் தொழிலானாலும் சலிப்பின்றியும் நேர்மையுடனும் கடமையுணர்வுடனும் அவர் செய்யும் வேலைகள் என்னையும் அதே திசையில் பயணிக்கச் செய்திருக்கிறது, செய்துகொண்டும் இருக்கிறது. இது எனக்கு ஆத்மார்த்தமான திருப்தியை தந்திருக்கிறது.

**கேள்வி:** ***இறுதியாக ஆசிரியர்கள் நிறைவேற்றவேண்டிய அத்தியாவசிய கருமங்கள் என எவற்றைக் கருதுகிறீர்கள்?***

**பதில்:**

1. கொள்கை சார்ந்த அறிவுப் பொக்கிஷத்தின் மீது விருத்தி செய்யப்பட்ட பல திறன்கள் குறிப்பிட்டதொரு தொழிலில் ஈடுபட்டவரிடம் காணப்படவேண்டும்.
2. தன்னைத் தேடி வருபவர்களின் நலன் கருதி செயற்படுவதற்கு முன்வருதலும் முன்னேற்றத்திற்கு உழைத்தலும்
3. தனது சேவைகள் தொடர்பாக போதிய அளவிலான தன்னம்பிக்கையைப் பேணிக் கொள்ளுதல்.
4. குறிப்பிட்ட தொழிலில் ஈடுபடுவோர் பின்பற்றும் அறநெறிக் கோலம் ஒன்றிருத்தல்.
5. பொது மக்கள் அறியாத பல விடயங்கள் பற்றி அறிந்திருத்தல்.
6. தொழிலுடன் தொடர்பான அறிவு, சாதுரியம் போன்றவற்றை இடைவிடாது விருத்தி செய்வதன் மூலம் பயனுள்ள சேவையை வழங்குதல்.

என அத்தியாவசியமான சமூகக் கருமங்கள் சிலவற்றை ஆசிரியர்களாகிய ஒவ்வொருவரும் நிறைவேற்ற வேண்டும் என கருதுகின்றேன்.

இவ்வகையில் ஆசிரியத் தொழிலை மேற்கொண்டு வரும் இவ்வாசிரியர் சிறந்ததோர் ஆசிரியராக வினைத்திறன் உள்ள நல்லாசிரியராக இனங்காண்பதற்கு இவருடைய இக்கால கட்டப் பணியானது தெளிவாக வெளிப்படுத்துகின்றது.

அவரது பணி தொழில் சார் தகைமைகளுடன் 23 வருடங்களைக் கடந்து நடைபெறுகின்றது என்றால் அது உன்னதமானதும் உயர்வானது என்பதையும் வெளிப்படுத்துகிறது. இது போன்ற ஒரு நிலைமையை நாம் இன்னும் பல இடங்களில் கண்டிருக்கிறோம் கடினமான கஸ்ரமான சூழ்நிலைகள் நிறைந்த பிரதேசங்களில் கற்பிக்கும் ஆசிரியர்கள் பலர் தமது தொழிலை வாண்மை விருத்தியுடன் மேற்கொண்டு வருவதைப் பாக்கின்றோம். இதுபோன்றதோர் தொழில்சார் விருத்தி செயற்பாடுகள் நம் சமூகத்தில் இன்னும் உயிர்ப்புடன் நடைபெற்றுக் கொண்டுதான் இருக்கிறது. இவரைப் போன்றவர்கள் உயர் விருதுகளைப் பெறுவதற்கு தகுதி உடையவர்களே!

***பண்புடையார் பட்டுண்டு உலகம் அது இன்றேல்***
***மண்புக்கு மாய்வது மன்.***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலைகளில் நூல்நிலையப் பயன்பாடு - ஓர் கண்ணோட்டம்



பொ. அமிர்தலிங்கம்

நூல் நிலையம் வரும்போது அங்கே நூல்கள், சஞ்சிகைகள், இதழ்கள், கையெழுத்துப்படிகள், கலைகள் என்பன ஒழுங்காகச் சேகரிக்கப்பட்டு களஞ்சியப்படுத்தப்பட்டு, காட்சிக்கு விடப்பட்டு, நகரப்பட்டு அறிவுக் களஞ்சியங்களாக அறிவு பகர்வனவாகக் காணப்படுகின்றன. இந்த நூலகங்கள் முறைசார்ந்த கல்வியின் வளர்ச்சியில் இணைந்து அறிவை வளர்க்கும் அறிவுச்சாலைகளாகச் செயற்படுகின்றன. அறிவை எழுத்து வடிவில் தேக்கி வைத்து இருக்கும் பயன்படக் கூடிய விதத்தில் கையளிப்பதே நூலகத்தின் செயற்பாடாகும். நூலகம் நுகராமல் தேக்கி வைத்திருப்பின் அமைந்துள்ளன.

*"தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குக் கற்றனைத் தூறும் அறிவு"*

என்றார் வள்ளுவப் பெருந்தகை. எனவே நூல்களைக் கற்று அறிவு படைத்தவர்களாக நாம் வளர உறுதுணையாவது நூலகமாகும். எமது கல்வியின் நோக்கம் கற்றோனையும் மற்றோனையும் சான்றோனாக்குவதாகும். கற்கும் கல்வி பாடசாலைக் கல்வியுடன் மாத்திரமல்ல, சமாந்தரமாக நூல் நிலையத்திலுள்ள நூல்களையும் வாசித்து அறிந்து செயலாற்ற வேண்டும். எமது திறன்கள், மனப்பாங்குகள், விழுமியங்கள் என்பவற்றை நாம் பாடசாலையில் கற்கும் நாட்களில் நூலகங்களைப் பயன்படுத்துவதன் மூலம் பெற்றுக்கொள்ள வேண்டும். எமது சமூக, பொருளாதார, கலாசார, ஒழுக்க, பண்பாட்டு வளர்ச்சிக்கு உறுதுணையாக அமைவது அறிவு வளர்ச்சியேயாகும். அறிவு வளர்ச்சியை நாம் மேம்படுத்த நூலகங்களைப் பயன்படுத்த வேண்டும். இளமையில் கல்வி சிலையில் எழுத்து என்பர். எமது முறைசார்ந்த கல்வியுடன் நூலகப் பாவனையும் சேர்ந்து எமது அறிவை வளர்க்க வேண்டும். தொட்டனைத்தூறும் மாந்தர்க்குக் கல்வியினால் நாம் பெறுவது அறிவு, அந்த அறிவானது எமது நிகழ்கால எதிர்கால ஒழுக்கத்திற்குக் காரணமாக அமைகிறது. ஒழுக்க வாழ்விற்கே கல்வியும் உதவுகின்றது. ஒழுக்கமே எமது வாழ்விற்கு சிறப்புத் தருவது. இன்றைய இளைஞர்களுக்குத் தேவையானதும் அதுவே. "நூலகம் என்பது உலக அறிவை அடைவதற்கான திறவுகோல்" என்றார் முன்னாள் இந்தியப் பிரதமர் ஜவஹர்லால் நேரு.

நூலகங்களில் நூல்கள் களஞ்சியப்படுத்தப்பட்டு நுகர்வோருக்கு பயனளிக்கின்றன என்றோம். இப்படியாக நூலகங்களில் நூல்களும், நூல்களில் அறிவும் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளன. இந்த நூல்கள் மூலம் எமது அறிவு விருத்தி மாத்திரமல்ல, எமக்குப் பல தகவல்கள், புள்ளிவிபரங்கள் என்பனவற்றைத் தருகின்றன. ஆய்வு, விமர்சனம் என்பவற்றைச் செய்யவும் வழிகாட்டுகின்றன. நாம் பாடசாலைக்கல்வி, பல்கலைக்கழகக்கல்வி ஆகியவற்றில் முறைசார்ந்த கல்வியைப் பெறுவதனால் அதற்கு நூலகங்கள் பெருந்துணை புரிகின்றன. கண்டதும் கற்கப்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்டிதனாவான் என எமது மூதோர் கூறுவர். கண்டது என்பது எல்லாவற்றையும் அல்ல. எமது வளர்ச்சிக்குத் தேவையான, வாழ்வுக்கு உறுதுணையான நூல்களைப் படிப்பதனால் பண்டிதனாக வளர வழியுண்டு. நூல் நிலையங்கள் பாலர் தொடக்கம் பல்கலைக்கழகம் வரை படிக்கும் மாணவர்களுக்குப் பயன்படத்தக்க வகையில் அமைய வேண்டும். முறைசார் கல்விப் பயன்பாட்டிற்குரிய சகல நூல்களும் சஞ்சிகைகளும் பாடசாலை நூலகங்களில் இடம்பெற வேண்டும். நூல்கள் மாத்திரமல்ல ஒலி, ஒளி நாடாக்கள், கணினிகள் (AUDIO, VIDEO, C.D, DVD, COMPUTER) என்பனவும் நூலகத்தில் இருப்பின் அவற்றின் பயன் அளப்பல. இன்று மாணவர்கள் ஆசிரியர்களது கற்பித்தலையே நாடுகின்றனர். வகுப்பறைக்குள்ளேயே கற்றலும், ஆசிரியர்களது கற்பித்தலும் இடம்பெறுவதால் நூலகங்களை நாடமுனைவதில்லை. மாணவர்களைச் சுயமாகக் கற்க ஆசிரியர்கள் ஊக்குவிக்கவேண்டும். பாடங்களுடன் சம்பந்தப்பட்ட நூல்களைத் தேர்ந்தெடுத்துப் பொருளுணர்ந்து கற்க ஆசிரியர்கள் உதவவேண்டும். இப்படியான நூலகங்களில் கற்பது சுயசார்புடையதாக இருக்க வேண்டும். நூலகங்களில் கற்பதால் மாணவர்கள் தாமே கற்கும் நடத்தையைத் தமக்குள் ஏற்படுத்திக் கொள்கின்றனர்.

இந்த நூலகங்களின் தோற்றுவாய் பற்றி நாம் ஆராய்ந்தால் கி.மு. 668 - 627ல் தொன்மையான களிமண் தகட்டு நூற்றொகுதிகள் பாபிலோனியாவில் இருந்ததாக வரலாறு கூறும். ஆசர் மன்னர் ஆசூர்பானி பாலின் நூலகம் மிகப் பழமையானது. நூலகர் என்னும் பதவியை முதலில் வகுத்தவர் அமில் அனு எனும் பாபிலோனியர். அற்றாலூஸ் என்பவர் ஆசிய மைனரில் உள்ள பேர்கமம் என்னுமிடத்தில் நூல் நிலையத்தை ஏற்படுத்தினார். பின்னர் அரிஸ்டாட்டில் என்ற கிரேக்க பேரறிஞர் சொந்தமாக நூலகம் ஒன்றை வைத்திருந்தார். அரிஸ்டாட்டில் நூல்களை அறிவியற் சிந்தனை அடிப்படையில் ஒழுங்குபடுத்தி வைக்கும் கலையை உண்டு பண்ணினார். ஆனால் அவரது நூல்கள் பைபிரஸ்புல் இதழ்களில் செதுக்கியதால் பல ஆண்டுகள் பேண முடியாமல் போயிற்று. அரிஸ்டாட்டிலின் நூலகமே முதல் நூலகமாகும். அதைத் தொடர்ந்து பேர்காமும் நகரில் கி.மு. 197 ஒரு பெரிய நூலகம் அமைக்கப் பெற்றது. முதன் முதல் கிரீசு நகரங்களே பொதுமக்களுக்கு நூலகங்கள் நிறுவின. பிரான்சு நாட்டில் 4ம் லுயிஸ்மன்னரும், 5ம் சார்ல்ஸ் மன்னரும் உருவாக்கிய ''அரசரின் நூலகம்'' (KING'S LIBRARY) பின்னர் தேசிய நூலகமாக வளர்ந்தது. இங்கிலாந்தில் கூட ஒவ்வொரு கோவில் பற்றிலும் நூலகங்கள் தொடங்கப்பட்டன. இந்தியாவில் தொடக்கத்தில் சமணர்கள் பௌத்தர்கள் தங்கள் மடங்களில் சுவடிகளைச் சேர்த்துக் காத்தனர். இலங்கையில் சுதந்திரத்திற்கு பின் தான் பாடசாலை நூலகங்கள் மேலும் வளர்ச்சியும் அபிவிருத்தியும் பெற்றன. இலங்கையில் அங்கிலிக்கன் திருச்சபையினர் யாழ்குடாநாட்டில், சுண்டுக்குளியிலும், மெதடிஸ்ட் திருச்சபையினர் யாழ் மத்திய கல்லூரி, பருத்தித்துறை ஹாட்லி கல்லூரியிலும் மாணவர்களுக்கு கற்க நூலகங்களைப் பாடசாலைகளில் அமைத்தனர். மேலும் தமிழைப் பொறுத்தவரையில் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் தான் மிகக் கூடுதலாக நூலகத்தையும், முன்னெடுத்தவராவார். அவரது நூல்கள் தெளிவான வசன நடை, ஆழ்ந்த கருத்துக்கள், பிழையற்ற பதிப்புக்கள் கொண்டனவாக நூலகங்களில் இடம்பெற்றன. வண்ணார்பண்ணை சைவப்பிரகாச வித்தியசாலையில் நூலகத்தினை அமைத்துக் கொடுத்தார். சைவ வினாவிடை மூலம் ஒழுக்கங்களிற்கு, நூலகப்பண்பாட்டிற்கு வழிவகுத்தார். சைவ வித்தியா விருத்திச் சங்கத்தினரும் தாம் அமைத்த பெரிய பாடசாலைகளிலும்,கலாசாலைகளிலும், நூலகங்களை அமைத்தனர். இந்த சபையினரும் நூலகங்களை அமைக்க முற்பட்டனர். சேர். பொன். இராமநாதன் அவர்கள் திருநெல்வேலி பரமேஸ்வரா கல்லூரியிலும், மருதநாமடம் இராமநாதன் கல்லூரியிலும் நூலகங்கள் அமைத்தார். சைவப் பெண்களுக்குரிய பெண் கல்லூரியான இராமநாதன் கல்லூரியிலேயே முதலாவது பெண்களுக்கான கல்லூரி நூலகம் அமைக்கப்பட்டது.

இலங்கையில் நூலகங்களின் வளர்ச்சிக்குப் பல்வேறு நடவடிக்கைகள் காரணமாயிருந்தன. தாய்மொழிக் கல்வியின் பிரயோகம் பெரிதும் துணைபுரிந்தது. தாய்மொழிக் கல்வி மூலம் தமது சொந்த மொழியில் கற்கும் வாய்ப்பு ஏற்பட்டதால் நூலகப் பயன்பாடும் அதிகரிக்கத் தொடங்கியது. மேலும் இலவசக்கல்வி அறிமுகமாகியதால் யாவரும் கற்கும் வாய்ப்பைப் பெற்றனர். இதனால் நூல் நிலையப் பயன்பாடும் அதிகரித்தது. மேலும் மத்திய மகாவித்தியாலயங்கள் நூல் நிலையங்களை கொண்டு மிளிர்ந்தன. இந்த நூலக விருத்தி மாணவர்களை மாத்திரமல்ல கற்பிப் போரான ஆசிரியர்களையும் தமது கல்வியை மேம்படுத்த உதவியது. மேலும் உயர் கல்விக்குரிய வாய்ப்பையும் நூலகங்கள் வழங்கின.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூலகம்

நூலக அறிவு மேலதிகமான அறிவைப் பெற வழிவகுத்தது. பாடசாலையை முடித்து பல்கலைக்கழகம் சென்று இதனால் உயர்கல்வி பெறும் வாய்ப்பும் அதிகரித்தது எனலாம். மேலும் பெண்கள் கூட கல்வியில் ஊக்குவிக்கப்பட்டனர். இப்படியாக பாடசாலைகளில் நூலகங்கள் வளர்ச்சியுற்றதால் படிக்கும் மாணவர்களின் அறிவுத் திறன் வளர்ச்சியடைந்தது. பேகன் என்னும் பேரறிஞர் கூறும்போது "சில நூல்களை ருசிபார்க்க வேண்டும். சில நூல்களை மென்று விழுங்க வேண்டும். சில நூல்களை நன்கு சுவைத்து மென்று விழுங்கிச் செரிக்கச் செய்ய வேண்டும். படித்தல் ஒரு மனிதனை முழு மனிதனாக்குகிறது. உரையாடல் ஒரு மனிதனைத் தயாருள்ள மனிதனாக மாற்றுகிறது. எழுதுதல் ஒருவனைச் சரியான மனிதனாகச் செய்கிறது. வரலாறுகள் ஒருவனை அறிவாளியாக்குகின்றன. கவிதைகள் ஒருவனை உற்சாகமுடையவனாக்குகின்றன. கணக்குகள் ஒருவனை நுண்மையானவனாக்குகின்றன. தத்துவ ஞானங்கள் ஒருவனை ஆழ்ந்தவனாக்குகின்றன. நீதிநூல்கள் ஒருவனை கண்டிப்பானவனாக்குகின்றன. தர்க்க நூல்கள் ஒருவனைகண்டிப்பவனாக்குகின்றன. தர்க்க நூல்கள் ஒருவனை வாதாடும் திறமையுடையவனாக்குகின்றன" என்று சுருக்கமாக நூல்களைப் பற்றி எடுத்தியம்பியுள்ளார். இவை அனைத்தையும் நூல்களில் படித்துச் சுவைக்கலாம்.

இன, மத, மொழி பேதமின்றி கல்வியை ஊக்குவிக்க உச்சநிலைக்கு எம்மை வளரச் செய்ய பாடசாலை நூலகங்கள் மிக உறுதுணையாகவுள்ளன. மாணவர் செல்வங்கள் மத்தியிலே பழக்கவழக்கங்கள், வாசிப்புத்திறன், சிந்தனை வெளிப்பாடு, ஆய்வுத்திறன், விவாதத்திறன் என்பனவற்றை ஊக்குவிக்கின்றன. சிறந்த கருத்துக்களை நாம் வாசிப்பதனால் எமது வாழ்விற்கு இவை சிறந்த வழிகாட்டியாக உள்ளன. எமக்கும் சமூகங்களிடையே புரிந்துணர்வு ஏற்பட வழிவகுக்கிறது. பல சமயத்தவர்களின் வாழ்வு, அறிவாற்றல் என்பனவற்றைக்கூட பாடசாலை நூலகத்தில் நூல்கள் மூலம் பரிமாறலாம். மாணவர்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவதில் நூலகம் பிரதான பங்கை பெற்றுள்ளது. இந்த நூல் நிலையம் மாணவர்களுக்கு ஒரு தகவல் நிலையமாகவும், அறிவுக் களஞ்சியமாகவும், தெரியாதவற்றைத் தெரிந்து கொள்ளும் வாய்ப்பினையும் ஏற்படுத்தித் தருகிறது. எமது சிந்தனை சக்தியை வளர்ச்சியடையச் செய்து பிரச்சினைகள் ஏற்படும்போது தீர்வுகாண உதவுகிறது. எது? ஏன்? எப்போது? எவ்வாறு? எப்படி என்ற கேள்விகளையெழுப்பி விடைகாண முற்படுகிறது.

மாணவர்களின் உள்ளார்ந்த திறமைகளை வளர்க்கவும், அவர்களை சமுதாயத்தில் உள்ளவர்களாக மாற்றுவதிலும் நூலகம் பிரதானபங்கு கொள்கிறது. எமது அறிவுக் களஞ்சியமான நூல்கள் நூலகங்களில் களஞ்சியப்படுத்தப்பட்டு எமக்கும் எமது எதிர்காலச் சந்ததியினருக்கும் அறிவுத் தொகுதியாக வழங்கப்பட்டு பேணிப் பாதுகாக்கும் நிறுவனமாக பாடசாலை நூலகங்கள் அமைகின்றன. அச்சு இயந்திரங்களின் அறிமுகம் மூலம் தான் நூல்கள் பெருகலாயின. இந்தப் புத்தகப் பண்பாட்டு வளர்ச்சி எமது வாசிப்புத்திறனிலும், செயற்பாட்டிலுமே பெரிதும் தங்கியுள்ளது. எமது அறிவு ஆற்றலை பாடசாலை நூலகங்களில் விருத்தி செய்து விழிப்புணர்வையும் செய்ய இந்த நூலகங்கள் உதவுகின்றன. முதலில் நூலகங்களிற்குச் செல்வோர் தமது தேவைகளை கருத்திற்கொண்டு அவற்றைத் தேடித் தெரிந்து கொள்ளக்கூடிய திறனையும், ஆற்றலையும் பாடசாலை மாணவர்களால் வளர்த்துக் கொள்ள முடியும். எனவே மாணவர்களை வாசிப்பில் ஊக்குவிப்பது ஆசிரியர்களின் கடமையாகும். இன்றைய வாழ்வில் மாணவர்கள் பாடசாலைகளிலும், பல்கலைக்கழகங்களிலும் பரீட்சைகளில் தேற வேண்டியவர்களாவர். எனவே இவர்களுக்கு ஆசிரியர்கள் வழங்கும் குறிப்புக்கள், தனியார் வகுப்புக்கள் மாத்திரம் பரீட்சைகளில் தேற உதவமாட்டாது. நூலக நூல்களைப் புரட்டிப் பார்த்து நூல்கள் மூலம் பயன்பெற்றால் பல தகவல்களைப் பெற்று பரீட்சையில் சித்தியடையமுடியும். எனவே ஆசிரியர்கள் மாணவர்களுக்கு வாசிக்கும்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழக்கத்தையும் பொருள் உணர்ந்து கற்பதையும் ஊக்குவிக்க வேண்டும். மாணவர்களின் தனித்திறன் தேவைகள் என்பனவற்றிற்கு ஏற்றவகையில் கற்றல் விளக்கங்களை நூல்களிலிருந்து பெறமுடியும்.

வாசிப்பு என்பது மனித உரிமை. நாம் வாழ்வதற்கு என்ன உரிமையுள்ளதோ வாசிப்பதற்கும், அறிவதற்கும் உரிமையுமுண்டு. எனவே நூலகத்தில் நாம் தரவை சேகரிக்க, ஆய்வு செய்ய, பல்வேறு விடயங்களைப் பெற, சுவடிகளிலிருந்து பயன்பெற முனைய வேண்டும். எனவே வாசிப்பதால் மனிதன் பூரணமடைகிறான். பாடசாலை நூல் நிலையங்கள் கற்கவும், கற்பிக்கவும் உதவுகின்றன. இப்போது இலங்கையில் நாம் உலகளாவிய கல்வி அபிவிருத்தியினை நோக்கி முன்னேறுகின்றோம். எனவே இப்படியாக முன்னேற பாடசாலை தோறும் நூல் நிலையங்கள் அமைக்கப்பட



வேண்டும். எனவே அரசானது மத்திய அரசுக்குக் கீழ்வரும் பாடசாலைகளிலும், மாகாண அரசு மாகாணத்தின் கீழ்வரும் பாடசாலைகளிலும், தனியார் பாடசாலைகளிலும், சர்வதேச பாடசாலைகளிலும், பல்கலைக்கழகங்களிலும் நூல் நிலையங்களை அமைத்துக் கொள்ளவேண்டும். இந்த நூலகங்கள் மூலமாக மாணவர்களுக்கு ஆய்வறிவும் அறிவியல் தேடலும் இடம்பெறுகிறது. நூலகத்தின் சிறப்புத் தன்மையை, சரிவரப் பயன்படுத்தும் உணர்வை மாணவர்களிடையே ஏற்படுத்துகிறது. நூல் நிலையம் இல்லாத ஊரும் ஒரு ஊரா? என்று கேட்டார் லெனின். தம்மைக் கொல்ல வந்த இளைஞனை மன்னித்து, அவனுக்குப் படிக்க நல்ல புத்தகங்களைக் கொடுக்குமாறு உத்தரவிட்டார். நூல்கள் மக்களுக்குச் செய்யும் மிகப் பெரும் பயனை உணர்ந்து ரஷ்யாவில் சிற்றூர்கள் யாவற்றிலும் நூல் நிலையம் ஒன்றாவது அமைந்துள்ளது. நூல் நிலையம் என்பது ஆடம்பரமான ஒன்றல்ல. வாழ்க்கையில் இன்றியமையாத தேவைகளில் அதுவும் ஒன்றாகும். பிசர் என்னும் அறிஞர் இவ்வாறு வாழ்க்கையில் மாணவர்களுக்கு அறிவளிப்பட்ட நூல் நிலையமானது இன்றியமையாத பங்கை வகிக்கிறது. மாணவர்களின் கல்வி விருத்திக்கு ஏற்ற தகவல்கள், புள்ளிவிபரங்கள் என்பன பெறப்படுகின்றன. மாணவர்களை வாசிக்கப் பயன்பெற ஆராய உற்சாகப்படுத்துகிறது. எனவே மாணவர்களின் விருப்பங்களைப் பொறுத்து ஏற்ற நூல்கள் சேர்க்கப்படுதல் வேண்டும். ஆசிரியர்கள் தமது கற்பித்தலுக்காக நூல் நிலையத்தைப் பயன்படுத்த முடியும்.

ஆசிரியர்கள் தமது ஆளுமை விருத்திக்காக, புதிய நுட்பங்களை அறிய நூல்களைச் சாதனமாகப் பயன்படுத்துகின்றனர். மாணவர்கள், ஆசிரியர்கள் அனைவரும் பல்வேறு ரீதியில் புதுப்புது தகவல்களைப் பெறவும், சமூகத்தோடு இணைந்து வாழவும், சிறந்து வாழவும் நூலகம் வழிவகுக்கிறது. பாடசாலைச் சமூகத்தில் உள்ள நூலகங்கள் பாடத்திற்கேற்ப சிறப்பு நூலகங்களாக பல்வேறு துறைகளைக் கொண்டதாக இருக்க வேண்டும். கலைத்துறை, விஞ்ஞானத்துறை, பொறியியல்துறை, மருத்துவத்துறை, விவசாயத்துறை, மிருக வைத்தியத்துறை என பல துறைகளை உள்ளடக்கியதாக இருப்பின் பாட சம்பந்தமான விழிப்புணர்வை மாணவர்களுக்கு ஏற்படுத்த முடியும். அமெரிக்க ஞானி எமர்சன் கூறும்போது எனக்குள் அதிகமாகத் தேவைப்படுபவர் யார் என்றால், என்னால் இயன்றதைச் செய்யுமாறு தூண்டும் மனிதர்கள்தான் என்கிறார். மாணவர்களைத் தூண்டும் மனிதர்களாக நூலாசிரியர்கள் திகழ்கிறார்கள். அறிவை ஊட்டுகின்றார்கள்.

தாமஸ் கார்லைல் என்ற நூலறிஞர் கூறும்போது

*"தற்காலத்திலே உண்மையான பல்கலைக்கழகம் என்றால் அது ஒரு நூல் நிலையந்தான்"*

என்றார்.

இவர் நூல் நிலையத்தைப் பல்கலைக்கழகத்தோடு ஒப்பிட்டு இயம்பியுள்ளார். நூல்களைக் கற்பதன் மூலம் பல்கலைக்கழகங்களையும் கற்கலாம். அறியலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றிச்சர்ட் டி.பி. யுறி என்ற அறிஞர் கூறும் போது *''நூல்களைச் சென்றடைந்தால் உறங்காமல் சோர்வு கொள்ளாமல் அவை நமக்கு அறிவு கற்பிக்கும்''* என்றார்.

இவர் நூல்களில் மூழ்குவதனால் நமது அறிவை வளர்க்கலாம். முழு ஈடுபாடு கொள்வதனால் சோர்வின்றிக் கற்கலாம் எனக் குறிப்பிடடுள்ளார்.

மாணவர்களது அறிவுசார் தேவைகளைப் பூர்த்தி செய்ய வேண்டிய நிலையில் பாடசாலை நூலகங்கள் இருக்கின்றன. இவை வரையறை செய்யப்பட்ட சட்டதிட்டங்களையும், ஒழுங்கமைப்பையுமுடையன. நூலகத்தினைப் பொறுத்தவரை எத்தனை நூல்கள் உள்ளன? எந்தத் துறைகளில் நூல்கள் உள்ளன? என்பன முக்கியமல்ல. மாணவர்களின் அறிவுத் தாகத்தினை எந்த வகையில் பூர்த்தி செய்துள்ளன? என்பதுதான் இன்றைய தேவை. எனவே நூல்களின் எண்ணிக்கையை மனதிற்கொள்ளாது, மாணவர்களது, ஆசிரியர்களது தேவை கருதி நூல்களை களஞ்சியப்படுத்த வேண்டும். மாணவர்கள் கற்கும்போது மகிழ்ச்சிகரமான நிகழ்வுகள் நிகழ்கின்றன. மூளையின் மகிழ்வு மையங்கள் தூண்டப்பட்டு, ஆனந்த உணர்வுகள் ஏற்பட்டு, வாசிப்பில் ஆர்வமும் ஏற்படும். நூலகமானது புலமையையும், மனிதப் பண்பாட்டையும் வளர்க்கிறது. எனவே நூலகங்களில் மாணவர்களின் பொது விவேகத்தை வளர்க்கக் கூடிய நூல்களை தெரிவு செய்து களஞ்சியப்படுத்தினால் அது மாணவர் சமூகத்திற்கு வரப் பிரசாதமாக அமையும். முன்னைய காலத்தில் கல்வியை ஆசிரியர்களிடமிருந்தே பெற்றோம். ஆனால் காலப்போக்கில் அறிவுப் பெருக்கத்தின் காரணமாக கல்வியை பல இடங்களிலிருந்தும் பெறக்கூடிய வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. இப்படி அறிவுப் பெருக்கத்தின் உறைவிடமாக முதலில் நூல் நிலையத்தை நாம் கொள்ள வேண்டும். மாணவ தேவைகளைப் பூர்த்தி செய்யும் இடமாக இது அமைகிறது. ''புத்தகங்கள் மனித சமூகத்திற்காகப் பேரறிஞர்கள் விட்டுச் சென்றுள்ள பரம்பரைச் சொத்தாகும்'' என்றார். தோமஸ் அல்வா எடிசன் எனும் அறிஞர், இப் பரம்பரைச் சொத்தைப் பேணிப் பாதுகாத்து பயன்பெறுவது மாணவர்களின் தலையாய கடமையாகும். பிறர் எழுதிய புத்தகங்களைக் கொண்டு உங்களைத் திருத்திக் கொள்வதில் நேரத்தைச் செலவிடுங்கள். பிறர் வருந்தி உழைத்ததைக் கொண்டு நீங்கள் எளிதில் பெறக்கூடிய பயன் இதுவாகும் என்றார் சாக்கிரடீஸ். நூல் நிலையங்களிலுள்ள நூல்கள் எம்மையே திருத்துகின்றன. எம்மைச் சிறந்த மனிதர்களாக்குகின்றன. ஆங்கிலமேதை ஜான்சன் கூறும்போது ''ஒரு புத்தகம் எழுத அரைவாசி நூல் நிலையத்திற்கு மேல் படிக்க வேண்டும் என்றார்.'' இப்படியாக எழுதப்படும் புத்தகங்களில் அறிவூட்டும் கருத்துக்கள் பொதிந்து காணப்படும் என்பது இதன் மூலம் புலனாகிறது.

பாடசாலை நூல் நிலையங்கள் கற்றல், கற்பித்தல் ஆகிய இரு வகைச் செயல்களில் ஈடுபட்டுள்ளன. மாணவர்கள் நூல் நிலையத்திலும் கற்கின்றனர். ஆசிரியர்கள் நூல் நிலையத்தில் நூல்களைப் படித்து கசடறக் கற்பிக்கின்றனர். இரண்டு செயல் முறைகளுக்கும் அத்திவாரம் நூலகமே எனலாம். அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் ஆரம்பக்கல்வி, இடைநிலைக் கல்வி, உயர்கல்வி என்பனவற்றிற்கு பொருத்தமான தனித்தனி நூல் நிலையங்கள் அமைக்கப்பட்டு உள்ளன. எனது எப்படியிருப்பினும் அரசாங்கமும், தனியாரும் எமது எதிர்கால சிற்பிகளின் வாழ்விற்காக, அவர்கள் படிக்கும் அனைத்து கல்லூரிகளிலும் பல்கலைக்கழகங்களிலும் நூலகத்தைக் கட்டிக் கொடுத்துப் பேணிப் பாதுகாக்க வேண்டும். எனவே இளம் சமுதாயம் சவால்கள் மத்தியில் வீறுநடைபோட நூலகம் உதவ வேண்டும். அறிவுப் பொக்கிஷமான இந்த நூலகங்கள் மாணவர்களது அறிவுத்திறனை, விழுமியங்களை, மனப்பாங்கை வளர்ப்பனவாக அமைய வேண்டும். அறிவுடையார் எல்லாம் உடையர். மாணவர்களையும் அறிவுடையவர்களாக எல்லாம் உடையவர்களாக வாழ வழிவகுப்போமாக! மாணவர்கள் சகலரும் ஆசிரியர்களினால் கற்பிக்கப்படுகிறார்கள். அனைவருக்கும் ஒரே மாதிரியான கற்கை முறை நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. எனினும் அவர்களின் அறிவுச் சோலையை வளம்படுத்த திறவுகோலாக நூல் நிலையங்கள் அமைகின்றன. நுகர்வோனின் திறமைக்கேற்ப, ஆற்றலுக்கேற்ப நுகர்ந்து அனுபவிக்கப்பட்டு வருகின்றன. கதவைத் திறந்தாற்றான் வீட்டினுள் நுழையலாம். அதேபோல் நூல் நிலையமாகிய கதவைத் திறந்து அறிவுப் பொக்கிஷமான நூல்களை நுகர்வோமாக! ஜான் ரஸ்கின் என்னும் அறிஞர் பின்வருமாறு கூறுகிறார். ''மனித ஆன்மாவை மிகச் சிறந்த நிலைக்கு அழைத்துச் செல்ல, மனிதரிடம் உள்ள சிறந்தவற்றை வெளிக்கொண்டுவர, மனிதர்கள் தங்களுக்குத் தாங்களே மகிழ்ச்சியாக வாழ, மற்றவர்களுக்குச் சேவை செய்கின்ற மனப்பான்மையை ஏற்படுத்த வாழ்நாள் முழுவதும் படித்துக் கொண்டே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்து அவரி மாகிறது வைகிறார். நல்ல புத்தகங்கள் மூலம் அறிவை வளர்க்கலாம். அறிவு இருப்பின் திறமை குடிகொள்ளும். திறமை இருப்பின் பதவியும் புகழும் தேடிவரும். அறிவும் திறமையும் ஒன்று சேரும்போது துணிவும், தைரியமும், அஞ்சா நெஞ்சமும் ஏற்படும். அறிவும் திறமையும் துணிவும் ஒன்றுசேரும்போது நம்பிக்கை பிறக்கும். விடாமுயற்சி தொடரும். அறிவு, திறமை, துணிவு, நம்பிக்கை ஏற்படவே உற்சாகம் தானாகவே வரும். இப்படியாக அறிவு, திறமை, துணிவு, நம்பிக்கை, உற்சாகம், சேர்ந்தால் உழைத்து வாழ்ந்து மகிழ்ச்சியும் நிறைவும் அடையலாம். எனவே மாணவ மாணவிகள் நாளை முழுமனிதர்கள். நாட்டை ஆளப்போகும் வல்லமையுடையவர்கள். எனவே அறிவுத் திறமையை நூல் நிலையத்தைப் பயன்படுத்தி வாழ்வில் வெற்றி நடைபோடுவோமாக.

## • மனப்பாடம் • செய்வதற்கான • உத்திகள் •

சிறப்பாக மனப்பாடம் செய்வது என்பது சிலவேளைகளில் கற்றல் செயல்முறை நினைவு ஆற்றலின் மனதில் இருத்தல் பின்னர் தேவைப்படும் போது இலகுவாக வெளிக்கொணர்தல் ஆகிய இரண்டு கூறுகளை அடிப்படையாகக் கொண்டதாகும். மன இயல்பு நிபுணர்கள் நினைவு ஆற்றல் பற்றி பல ஆராய்ச்சிகளை முன்னெடுத்துச் செய்துள்ளனர். இவர்கள் மேற்கொண்ட இத்துறையில் ஆய்வுகளை மேற்கொண்டுள்ளனர். இவற்றின் விளைவாக சிறப்பாக மனப்பாடம் செய்வதற்கான பல உத்திகள் இன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவற்றுள் முக்கியமானவை.

1. ஒரு பாடப் பகுதியைக் குறிப்பிட்ட நிலையில் இருந்து கவனமாகப் படிக்க வேண்டும். சுருக்கமாக குறிப்புகள் எடுத்து பாடப் பொருளின் தலைப்பிலிருந்தும் அறிமுகமான சிறப்பான பகுதியும் கற்கும் முறையையும் கொண்டிருத்தல். இவ்வாறு பகுதிகளைக் குறித்த நேரத்தில் இடைவெளி விட்டு கற்றல் சிறந்தது.

2. உதாரணமாக ஒரு செய்யுளை மனப்பாடம் செய்ய 50 தடவைகள் படிக்கவேண்டும் எனில் ஒரு நாளைக்கு 10 தடவைகள் என 5 நாட்கள் படிப்பது, ஒரே தடவையாக 50 முறை படிப்பதை விடச் சிறந்தது. கால நேர வீண் ஒரு நாளைக்கு மேல் இருக்கத் தேவையில்லை. ஒரு வரியை ஒரே தடவையில் மனப்பாடம் செய்யலாம்.

3. முழுமையாகப் படிக்கல் சிறு சிறு பகுதிகளாகப் பிரித்து பகுதி பகுதியாகவும் படிக்கலாம். தனித்தனியாகப் பிரித்து விடயங்களைத் பாடப் பகுதி நீண்டதாக இருப்பின் அதனை பொருளும் தொடர்பும் கெடாமல் பகுதிகளாகப் பிரித்து முதற்பகுதி, முதல் இரண்டு பகுதிகள், முதல் மூன்று பகுதிகள் எனக் கற்றல் சிறந்தது.

4. ஒரு பாடப்பொருளை கற்கும் போது சில தடவைகள் அப்பாடப் பகுதியைப் பார்த்து படித்த பின் அதிலிருந்து பார்க்காமல் ஒப்புவித்தல். அவ்வாறு ஒப்புவிக்க சிரமப்படும் சந்தர்ப்பத்தில் மட்டும் பாடப்பகுதியைப் பார்த்தல். இது சிக்கலும் பயனும் உள்ளது.

5. பொருளுணர்ந்து மீட்டுக் கொள்ளுதல். கற்கவேண்டியவற்றின் பொருளை விளங்கிய பின் உள்ளடக்கம் தெரியும். ஒருவரின் ஆர்வமும் மனப்பாடம் கற்றலுக்கு வசதியாகும்.

பாடசாலை உண்மை அறிவைம் வழங்கும் ஒரு இடமாகத் திகழவேண்டும் - டாக்டர் கில். யோர்ரிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வட இலங்கையின் கல்வி வளர்ச்சியில் சி.து.மு.பசுபதிச்செட்டியார் அவர்களின் பங்களிப்பு



பேராசிரியர் இரா. வை. கனகரத்தினம்

தமிழ்இலக்கிய வரலாற்றையும் சைவ இலக்கிய வரலாற்றையும் எழுதப்புகும் வரலாற்று ஆசிரியர்கள் தமிழ்மொழி வளர்ச்சியினையும் தமிழ்ப்புலவோர் ஆற்றலையும் வெளிப்படுத்துவதன் மூலம் தம் வரலாற்றுக்குப் பெருமை தேடமுற்படுவர். உண்மையில் இவ்வாறான விருப்பு வெறுப்புக்களற்று அமைத்துக்கொடுக்கும் புலவர் வரலாறுகளும் பணிகளும் சுட்டப்படாது விட்டுச்செல்லும் பல்பினை இவ்வரலாறுகளைப் படிப்போர் நன்கு அவதானிப்பர். புறநானூறு சில புலவர்களின் வரலாறுகள் மிகமிகச் சுருங்கிய வடிவிலேயே நூல்களுடன் இணைந்துள்ளன. அவை புலவர்களின் சரியான மதிப்பீடு என்று கொள்வதற்கில்லை. அவற்றுட் பல அவர்களின் ஆற்றலினை வெளிப்படுத்தும் பொருட்டு எழுதப்பட்டவை அல்ல என்பது தமிழ் இலக்கிய வரலாற்றில் இடம்பெறும் வெட்டவெளி உண்மையாகும்.

ஈழநாட்டின் சைவத்தமிழ் இலக்கிய வரலாறு இன்னும் எழுதப்படவில்லை. இவ்வரலாற்றில் அரசபணிகளும் மன்னர்கள், புலவர்கள் முயற்சிகளும் இடம்பெறுவது அவசியம். ஈழநாட்டு தனிமனித வரலாறுகளை விரித்து ஆராயும் ஆய்வுகள் முன்னிற்கின்றன. சமீபகால புலவோர் பணிகளும் புலவர் வரலாறுகளும் ஆய்வுக்குட்படுத்தப்பட்டுள்ளன. புலவர் ஆய்வில் சோ. இளமுருகனார் அவர்களின் வரலாறு ஆய்வுக்குட்படுத்தப்பட்டு நூலுருவம் பெற்றிருப்பது இங்கு குறிப்பிடத்தக்கதொன்றாகும். ஈழநாட்டு மக்களின் பரந்த மனப்பான்மையும் நன்றியறிதலையும் இது உணர்த்தி நிற்கும். அவ்வகையில் புலவர் வரிசையில் பெரியார் திரு. சி.து.மு. பசுபதிச் செட்டியார் அவர்கள் ஆற்றிய சைவத்தமிழ்ப் பணிகள் அளப்பரியன. இந்நிலையில் அவர் ஆற்றிய கல்விப்பணி பற்றி நோக்குவோம்.

தென்கிழக்காசிய நாடுகளிலும் பிற உலக நாடுகளிலும் சைவ சமயத்தைப் பரப்பி அவ்விடங்களில் சைவ சமயத்தை நிலைபெறச் செய்த பெருமை தென்னிந்திய வணிக குழுக்களையே சாரும். இலங்கையின்கண் மிளிர்ந்த சமயங்களுக்கு முன்பே ஈழ நாட்டில் சைவம் பரவக் காரணமாக இருந்தவர். தென்னிந்திய பேரரசர்கள் ஆதாரங்கள் மீது படையெடுத்து ஆட்சியைக் கைப்பற்றிய பொழுதும் அவர்களால் சைவத்தையும் தமிழ் மொழியையும் சரியான முறையிலே பேண முடியவில்லை. ஆனால் இந்து சமுத்திர நான்கு நாட்டுக்கோட்டை, மணிக்கிராமத்தார், திசையாயிரவர், வீரவளஞ்சியர், அய்யவொளோ, ஐந்நூற்றுவர், வீரக்கொடி, ஆவணக்களரி, நகரத்தார், செட்டி மக்கள், செட்டிகள் முதலான வணிகப் பெருமக்களால் சைவமும் தமிழ் மொழியும் நன்கு பேணப்பட்ட ஆதாரமும், கோணேஸ்வரம், முன்னேஸ்வரம், பதவியா, கந்தளாய், திருகோணமலை முதலான பகுதிகளிலே வழிபாடுற்றுக் கிடைக்கப்பெறும் ஆலயங்களும் தமிழ்க் கல்வெட்டுக்களும் மற்றும் நிலைபெறான ஆவணங்களும் இவற்றுக்கோர் எடுத்துக்காட்டாக விளங்குகின்றன. ஈழநாடு அந்நியராட்சிக்குட்பட்ட காலப்பகுதியிலும் (1505 - 1948) சைவத்தை ஈழநாடு பூராவும் பேணிக்காத்த பெருமை இந்த வாரிசு வணிகக் குழுக்களையே சாரும். குறிப்பாக நாட்டுக்கோட்டை நகரத்தார், செட்டிமார்களின் பணிகள் விதந்துரைக்கத்தக்கவையாகும். இவர்களின் சமயப் பணிகளும் கொழும்புக் கரையோரப் பட்டணங்கள், மலைநாடு, யாழ்ப்பாணம் என்ற வகையில் பரந்திருந்தன. ஏனைய பாரம்பரிய நாட்டிலே கோவைத்தில்லைச் செட்டியார், சி.து.மு.பசுபதிச் செட்டியார் முதலானோர்களின் பணிகள் விதந்தோதப்பட வேண்டியவையாகும்.


பசுபதிச் செட்டியார் வாழ்ந்த காலம் (1856 - 1906) ஆங்கிலேயரின் ஆட்சிக்காலம் (1818 - 1948). அவர்கள் தமது ஆட்சியினை இந்நாட்டில் நிலைப்படுத்துவதற்கு மேற்றுறையில் ஆற்றலை கல்வியினை இந்நாட்டு மக்களிடத்தே வளர்க்க முயன்றனர். இதன் மூலம் தம் சமயத்தையும் மொழியையும் பண்பாட்டையும் இங்கு வாழும் மக்களிடத்தே நிலைபெறச் செய்வதன் மூலம் நிலையான பலத்தை நிலைநிறுத்த முயன்றனர். இதனால்

கிழக்கிந்தியக் கம்பனிகளிடமிருந்து பரிசுத்த ஆவி புடையவர்களை, மேலைநாட்டில் இருந்த பெரிய அளவிலான சமயப் பரப்புப் பாதிரிமார்களை வரவழைத்தனர். அவ்வாறு வந்த வெஸ்லியன் மிஷன் (1814), சேர்ச் மிஷன் (1818), அமெரிக்கன் மிஷன் (1816) முதலான மிஷனரிமார்கள் தமது பணிகளைச் சமூகத்தில் இலகுவாக்கும் நோக்கில் பள்ளி, வைத்தியசாலை, ஒப்புரவு, ஆங்கிலக்கல்வி, அச்சியந்திரசாலை நிறுவுதல், பதிப்பு, பத்திரிகை வெளியீடு முதலான பல்வகைத் துறைகளைப் பெருகச் செய்து பல்வகை மக்களையும் கவர்ந்தனர். குறிப்பாக யாழ்ப்பாணச் சமூகம் பெரிதும் இவ்விடயத்திலேயே ஈர்க்கப்பட்டது. உயர்மட்டத்தினரென்று தம்மைக் கருதியோரும் வசதியானவர்களும் மேலும் தமது வாழ்க்கையையும் மேலைநாட்டவரையும் பின்பற்றி இருப்பதில் விரும்பினர். இப்பணியில் சாதாரண மக்கள் இலகுவில் சேர்ந்துகொண்டமை ஆச்சரியப்படுவதற்கில்லை.

இக்கிறிஸ்தவ மிஷனரிமார்கள் போர்த்துக்கேய, ஒல்லாந்தர் காலங்களில் வைக்கப்பட்ட ஆலயங்களிலும் பள்ளிக்கூடங்களிலும் தமது மதத்தையும் மொழியையும் போதித்தனர். அரசின் ஒத்துழைப்பும் கல்வியும் மற்றும் இவர்கள் தாம் நினைத்ததைச் செய்து முடிப்பதற்கு வாய்ப்பளித்தன. இவர்கள் சில கட்டடங்களை அழகும் உறுதியும் கொண்டனவாக அமைத்தனர். இத்தகைய பாதிரிமார்களின் வருகையும் மதமாற்றமும் மக்களைப் பாதித்தன. இவ்வாறு மதமாற்றத்தைக் கண்டு மக்கள் விரும்பியோ விரும்பாமலோ கிறிஸ்தவத்தில் சேர்க்கப்பட்டனர். இத்தகைய சூழ்நிலையில் சைவத்துக்கு ஏற்பட்ட சிக்கலையும் மக்களின் உணர்வுகளையும் கருத்திற்கொண்டு 1843இல் முன்னர் பிறந்த ஆறுமுகப் பிள்ளை இருந்த விதானையார் முத்துக்குமாருக்கும் சிவகாமி அம்மையாருக்கும் மகனாகப் பிறந்தவர். தமிழ், ஆங்கிலம், சமஸ்கிருதம் ஆகிய மூன்றிலும் புலமை பெற்று வெளிப்பட்டார். சைவ சமயத்துக்கு எதிர்ப்பாக இருந்தவர் இவரேயாவார். அவரிலும் மிஷனரிமாரை முன்னின்று எதிர்த்துப் போர் தொடுத்தவர் ஆறுமுக நாவலர். தமிழ் மறைகளை ... சைவ நூல்களைப் பதிப்பித்தும், ... பாடசாலைகளை நிறுவியும் பல வழிகளிலும் சமயத்தைக் காத்த வல்லவர். பல்வகைத் துறைகளிலும் ... மொழி பெயர்ப்பு ... பயின்ற பிரசங்கங்களால் இவ்வுலகுக்குப் புறநடையாக விளங்கினார்.

**செட்டியாரின் கல்விப் பணி**

செட்டியார் சைவ பரிபாலன சபையின் குறிக்கோள்களுள் ஒன்றான "சைவ முறைப்படி சைவப் பிள்ளைகள் ஆங்கிலத்தையும் தமிழையும் பயில்வதற்கான வித்தியாசாலைகளை அவசியமான இடங்கள் தோறும் தாபித்து நடத்தல்" என்னும் குறிக்கோளினை முன்னெடுத்துச் சென்று நிறைவேற்றும் வகையில் உழைத்தவர். செட்டியார் அவர்கள் 1889ஆம் ஆண்டு ஆனி மாதம் 5ம் திகதி நடைபெற்ற சைவக் கூட்டத்தில் சைவ மக்கள் படிக்க ஒரு ஆங்கில



வித்தியாசாலை ஆரம்பிக்கப்பட வேண்டியதன் அவசியத்தை வற்புறுத்திப் பேசினார். இதன் பொருட்டு 20,000 ரூபா தேவைப்படும் என்று குறிப்பிட்டார். இவ்வளவு தொகையை எப்படிப் பெறுவது என்று சபை மலைத்து நின்றது. இந்நிலையில் வெஸ்லியன் மிஷனைச் சேர்ந்த பேர்சிவல் பாதிரியாரால் 1857ஆம் ஆண்டு முதல் யாழ்ப்பாணப் பட்டண உயர்தர பாடசாலை (Town High School) என்னும் பெயருடன் ஒரு பாடசாலை நடத்தி வந்தார். பின்னர் இப்பாடசாலை ஆர். மைக்கல் நாதனியல் முறைகளின் நிர்வாகத்தின் கீழ் வந்தது. அதே வேளை பாதிரியாரின் (Kock) பாடசாலை ஒன்றும் 25 பகுதியில் நடைபெற்று வந்தது. அது அப்பொழுது விலைபோகும் பாடசாலையாக இருந்தது. இதனை விலைக்கு வாங்கும் போட்டியும் இருந்தது. இந்நிலையில் செட்டியார் அவர்கள் சபையின் அங்கீகாரத்தை நிறைவேற்றும் பொருட்டு 1890ஆம் ஆண்டு ஆடி மாதம் 5ம் திகதி நடைபெற்ற சபைக் கூட்டத்தில் அப்பாடசாலையை விலைக்கு வாங்கி இந்துப் பிள்ளைகளுக்குரியதாக்க வேண்டும் என்னும் தீர்மானத்தை முன்மொழிந்தார். ... பாடசாலையை 6 1/2 ஏக்கர் நிலத்துடன் வாங்கியது. 1890ஆம் ஆண்டு ஸ்ரீ பொன். இராமநாதன் அவர்கள் யாழ்ப்பாணப் பாடசாலைப் பொருட்டு வந்திருந்தார். இதனை அறிந்த செட்டியார் தமது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்களின் பிரதிநிதி என்ற வகையிலும் சேர்.பொன்.இராமநாதனுக்கு சிறந்த வரவேற்பொன்றினை அளிக்கத் தீர்மானித்தனர். அவரை வரவேற்கும் பொறுப்பினை செட்டியார் அவர்கள் தான் வாங்கிய பாடசாலைக்குரிய காணியில் அழகிய உறுதியான பந்தலொன்றினை அமைத்தார். 1890ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் 24ம் திகதி செட்டியார் அமைத்த பந்தலில் சிறப்பான வரவேற்பொன்றினை இராமநாதனுக்கு அளித்தது. அப்பொழுது அங்கு பேசிய சேர்.பொன்.இராமநாதன் அவர்கள் கிறிஸ்தவர்களுடைய பரிச்சயம் ஒரு காலத்தில் நமக்கு ஆகாதென்றும் சைவப் பள்ளிக்கூடங்களுக்கே அனுப்பி பிள்ளைகளுக்கு நல்ல கல்வியும் நல்ல பழக்கமும் பயிற்ற வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

1890 ஆம் வருடம் ஆடி மாதம் 19ஆம் திகதி கூடிய சபைக் கூட்டத்தில் செட்டியார் அவர்கள் 'சுசன்மநகராக்கிரக உயர்நிலைப் பள்ளியைக் கையேற்று நடத்த வேண்டும்' என்னும் தீமானத்தை முன்மொழிந்தார். அதனை சபை ஆராய்ந்து அதன் படி சுசன்மநாக்கிராக்கிரக உயர்நிலைப் பள்ளி வண்ணார் வைத்தீஸ்வரன் ஆலயத்தில் வடக்கு வீதியிலுள்ள மெத்த வீட்டிற்கு மாற்றப்பட்டது. பிள்ளைச் செட்டியார் இதனை விருத்தி வருடம் 8ஆம் திகதி (22-10-1890) அன்று தாம் வரவேற்பின் பொருட்டு கட்டிய மண்டபத்திற்கு மாற்றிக் கொண்டார். அப்பாடசாலையின் தலைமை ஆசிரியராக கடமையாற்றியவர் ச.அப்பாப்பிள்ளை ஆசிரியராவார்.

அங்கு எண்பது மாணவர்கள் கல்வி கற்றனர். இப்பாடசாலை இந்து உயர் பாடசாலை (Hindu high School) என்னும் பெயரைப் பெற்றது. இக்காலம் தொடக்கம் இப்பாடசாலையை முகாமைத்துவம் செய்ய தனிக்குழுவொன்று நியமிக்கப்பட்டது. அதில் தா.செல்லையாப்பிள்ளை, த.கைலாசபிள்ளை, ச.சபாபதிப்பிள்ளை, சித.மு.பசுபதிச்செட்டியார், சி.நாகலிங்கம் ஆகியோர் இடம்பெற்றிருந்தனர். கர வருடம் சித்திரை மாதம் (1891) இப் பாடசாலையின் முதற் பரீட்சை நடைபெற்றது. கர வருடம் சித்திரை மாதம் 23ஆம் திகதி (1891) நிலையான கட்டடத்திற்கான அத்திவாரம் இடப்பட்டது. இக்கட்டிடத்தைக் கட்டியெழுப்பும் முழுப்பொறுப்பும் சித.மு.பசுபதிச்செட்டியாரிடம் விடப்பட்டது. இப் பாடசாலையின் கட்டடங்கள் மூன்று கட்டங்களாக நிறைவேற்றப்பட்டன. அப் பாடசாலையின் தோற்றத்தில் சித.மு.பசுபதிச் செட்டியார் மிகுந்த விவேகத்துடன் செயல்பட்ட முறையை பற்றி இந்து சாதனம் பின்வருமாறு குறிப்பிடுவது கவனத்தில் கொள்ளத்தக்கது.

சைவ மக்கள் கிறிஸ்து மார்க்கத்திலே சேர்தற்கு பாதிரிமாரும் சிறந்த துணையாகவுள்ளனர். அப்பாதிரிமார் வைத்து நடாத்திய ஆங்கிலத் தமிழ் வித்தியாசாலைகளே என்ற ரகசியத்தை உணர்ந்த நாவலரவர்கள் ஆங்கில வித்தியாசாலை ஒன்றையும் வண்ணார் பண்ணையில் அந்தப் பெரியார் தாபித்து சில காலம் நடத்தினார். ஆனால் அது அக்காலத்தில் நீடித்து நடைபெறவில்லை. அந்தக் குறையை நீக்க வேண்டும் என்று இந்தச் சபையார் நோக்கம் கொண்டு சைவாங்கில வித்தியாசாலை இப்பொழுது யாழ்ப்பாணம் பெயரோடு நடத்திக் கொள்ளும்படி சபையில் ஒப்புவித்தனர். இந்நிலையத்திற்றானே சித.மு.பசுபதிச்செட்டியார் சமயோசிதமாக இந்துக்கல்லூரியை ஆரம்பித்தார். சி.நாகலிங்கப்பிள்ளை தம்முடைய பராமரிப்பின் கீழிருந்த Town High School என்னும் ஒரு பாடசாலையை நிறுவுவதற்கு தீர்மானித்தனர். 1891ஆம் வருடம் கார்த்திகை மாதம் 4ம் திகதி கூடிய சபைக் கூட்டத்தில் ஒப்புவிக்க இச்சபையார் ஏற்றுத் தங்களால் சமயோசிதமாக அமைக்கப்பட்ட சாலையில் அப் பிள்ளைகளைத் தருவித்து நடாத்தி வருவராயினர்.

பசுபதிச் செட்டியார் காலத்தில் கட்டப்பட்ட இப்பாடசாலையின் கட்டடத் தொகுதிகளை மூன்று கட்டங்களாக வகுத்து நோக்கலாம். முதற்கட்டம் 1891ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு 1895ஆம் ஆண்டு நிறைவுற்றது. இரண்டாம் மூன்றாம் கட்டங்கள் 1895ஆம் ஆண்டு தொடங்கப்பெற்று முடிவுற்றது. இக்கட்டடத் தொகுதிகளைக் கட்டி முடிப்பதில் தாம் ஒரு பணத்தைச் செலவு செய்ததுடன் இவற்றை முடிப்பதற்காக பணம் தண்டுதல் என்னும் அடிப்படையில் விவாகம், வித்தியாரம்பம், புத்திரப்பேறு, கிரகப்பிரவேசம், தீட்சை, ஆசாரி அபிஷேகம், அந்தியேட்டி, சிரார்த்தம் முதலான சடங்கின் பொழுது சைவர்களுக்கு ஏற்படும் செலவைக் குறைத்து விரும்பிய தொகையை அனுப்பும் படி வேண்டிக் கொண்டதன் மூலமும் தென்னை மரம் விற்றல், தருமப் பெட்டி வைத்தல், நாடக விழா நடத்தல், அதிஷ்டலாபச் சீட்டு இழுத்தல், மரவேலைத் தளபாடம் விற்றல், தண்டல், புத்தகம் விற்பனை, ஏற்றமதி இறக்குமதிப் பொருட்களுக்கு மகிமை ஏற்படுத்தல் முதலான வழிகளை மேற்கொண்டதன் மூலமாகவும் இக்கட்டட வேலைக்கான செலவின் ஒரு பகுதியை ஈடு செய்து கொண்டார்.

இக்கட்டடங்களை ஈழநாட்டுச் சிற்பிகளையும் தமிழ் நாட்டுக் கலைஞர்களையும் கொண்டு கட்டுவித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்கட்டடங்கள் அழகும் கனதியும் செம்மையும் உடையனவாய் விளங்கின. மேல் மாடிகள் தேக்கு மரத்தாலான வேலைப்பாட்டை உடையனவாக விளங்கின. சேர்.பொன்.இராமநாதன் இச்சபையின் தலைவராக இருந்தவர். ஒரு முறை இக்கல்லூரியின் பரிசளிப்பு விழாவுக்கு வருகைதந்த பொழுது செட்டியார் இக்கல்லூரிக்கு ஆற்றிய ஊழியத்தைப் பற்றி பின்வருமாறு நினைவு கூர்ந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

இப்பாடசாலையின் கட்டடங்கள் உறுதியானவை. அழகானவை. இவை திருமலை நாயக்கரின் கட்டடங்களுக்கு ஒப்பானவை. இதனைக் கட்டியவர் யார்? அவர் ஒரு வரலாற்று நாயகன். அவர் ஆற்றிய பணிகள் நினைவ கூரப்பட வேண்டியவை. அவர் இத்தாபனத்தின் நிறுவனர்களுள் ஒருவர். அவர் தான் சித.மு.பசுபதிச் செட்டியார்.

முதற் கட்டடத் தொகுதி மன்மதவருடம் ஆவணி மாதம் 23ம் திகதி (23-08-1895) வெள்ளிக்கிழமை பூர்வபட்ஷ திதியும் அத்த நட்சத்திரமும் சுகன்ம நாம யோகம் வணிசகரணம் கூடிய சுப முகூர்த்தத்திலே இக் கட்டடம் திறக்கப்பட்டது. இதனைத் திறந்து வைத்தவர் சேர்.பொன்.குமாரசுவாமி முதலியார் அவர்கள். 1898ஆம் ஆண்டு யாழ்ப்பாணக் கல்வியதிகாரியாக இருந்த ஆர்.எ.லெம் புறூக் அவர்களின் சிபார்சின் பெயரில் 1895ஆம் ஆண்டு அப்பாடசாலை அரச நன்கொடை பெறும் பாடசாலையாக அங்கீகரிக்கப்பட்டது. "செட்டியார் அவர்கள் லெம்புறூக்கின் உதவியினை நன்றி மறவாது 1904ம் ஆண்டு புரட்டாதி மாதம் நடைபெற்ற பரிசளிப்பு விழாவில் அவரைப் பிரதம அதிதியாக அழைத்ததோடு அவரது பெயரில் பரிசுத் திட்டத்தையும் அறிவித்தமை இருவருக்கிடையிலான நட்பையும் இப்பாடசாலையின் வளர்ச்சியில் அவருக்கிருந்த அக்கறையையும் காட்டி நிற்கும்.

இப் பாடசாலையில் எட்டு வகுப்புக்கள் இருந்தன. 1890-1892 ஆம் ஆண்டு வைகாசி மாதம் முதல் கல்கத்தா பல்கலைக்கழக பிரவேசப் பரீட்சைக்கான வகுப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டது. 1895 முதல் அரச பாடத்திட்டத்திற்கமைவாக பாடசாலை ஒழுங்கு படுத்தப்பட்டது. இப்பாடசாலையின் கல்வி ஒழுங்கு நான்கு வகையாகப் பிரிக்கப்பட்டிருந்தது.

1. கனிஷ்ட முதற் கலை வகுப்பு
2. சிரேஷ்ட முதற் கலை வகுப்பு
3. கல்கத்தா பிரவேசப் பரீட்சை
4. பாலர் வகுப்புத் தொடக்கம் அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட எட்டு வகுப்புக்கள்.

செட்டியார் அவர்கள் சபையின் தாபகர்களுள் ஒருவராகவும் அதன் தனாதிகாரியாகவும் அப் பாடசாலையின் நிர்வாகியாகவும் விளங்கியமையால் இப்பாடசாலையின் ஆசிரியர்களை நியமிக்கும் பொறுப்பு அவரிடத்தில் விடப்பட்டிருந்தது. இதனால் ஈழநாட்டிலும் தமிழ் நாட்டிலும் தரமும் சிறப்பும் மிக்க ஆசிரியர்களை தேடிக் கண்டு அவர்களை ஆசிரியர்களாக நியமித்தார். அவ்வகையில் செட்டியாரால் இக்கல்லூரியின் அதிபராக நியமிக்கப்பட்டவரே நெவின் செல்லத்துரை அவர்கள். அவர் தமிழ் நாட்டில் பாலக்காட்டு அரசினர் உயர் பாடசாலையில் அதிபராக இருந்து வந்தவர். அவர் ஒரு பட்டதாரி. யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவர். அத்தகையவரை 1892ஆம் ஆண்டு தமிழ் நாட்டினின்று வரவழைத்து 1892ஆம் ஆண்டு மாசி மாதம் இந்துக் கல்லூரி அதிபராக நியமித்தார். இவருடைய நியமனத்தின் படி பட்டப்படிப்பு வகுப்பு இங்கு ஆரம்பிக்கப்பட்டது. இவருடைய வருகையுடன் இப்பாடசாலையின் மாணவர் தொகையும் அதிகரித்தது. ஆங்கிலக் கல்வியுடன் வடமொழிக் கல்வியும் தமிழ்க் கல்வியும் சிறப்பாகப் போதிக்கப்பட்டன. தமிழ் நாட்டைச் சேர்ந்த பத்மநாதையர் வடமொழியையும் தாவடி பண்டிதர் சோமஸ்கந்தப்பிள்ளை தமிழையும் கற்பித்து வந்தனர். பால பண்டிதர் வகுப்புக்கள் நடைபெற்றன. 1899ஆம் ஆண்டு முதல் 1905ஆம் ஆண்டு வரையும் இப்பாடசாலையின் மாணவர் வருகை பின்வருமாறு அமைந்திருந்தது.

| ஆண் | மாணவர் தொகை |
|---|---|
| 1889 | 100 |
| 1891 | 248 |
| 1893 | 292 |
| 1895 | 700 |
| 1897 | 878 |
| 1899 | 340 |
| 1902 | 397 |
| 1905 | 393 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பாடசாலையின் மாணவர் தொகை 1889முதல் 1894 வரை 100 - 300 இடைப்பட்டதாக இருந்தது. 1895 இல் 700 ஆக உயர்ந்துள்ளது. 1895 முதல் 1905 வரை உள்ள காலப் பகுதிகளில் மாணவர் தொகை குறைந்து சென்றுள்ளதை உணர முடிகின்ற பொழுதும் அவற்றிலே ஒரு சமநிலைத் தன்மையையும் காணப்படுவதையும் அவதானிக்க முடிகிறது. 1895இல் மாணவர் தொகை கூடியிருப்பதற்கு சைவக் கல்வி மரபில் ஆங்கிலம், தமிழ், வடமொழிகள் ஆகிய மொழிகள் மூலம் கற்பிக்கப்படும் இக் கல்லூரியாக இது அமைந்திருந்ததோடு கிறிஸ்தவக் கல்லூரிக்கு ஒப்பான ஒரு கல்வி நிறுவனமாகவும் இருந்தமையால் இங்கு கல்வி பயில மாணவர் உலகம் விரும்பியதில் எவ்வித ஆச்சரியமும் இல்லை. பிற்பட்ட காலப்பகுதியில் மாணவர்கள் சற்றுக் குறைந்தமைக்கு யாழ்ப்பாணக் குடாநாட்டின் பல்வேறு பகுதிகளிலும் சைவ மரபின் கீழ் தமிழ் - ஆங்கிலப் பாடசாலைகள் தொடக்கப்பட்டமை இதற்கு முக்கிய காரணமாகக் குறிப்பிடலாம். 1895ஆம் ஆண்டு இப் பாடசாலை பல இணைக்கப்பட்டது. இக்கல்லூரியின் தாபகமும் அதன் வளர்ச்சியும் மிஷனரிமாரை அச்சத்துக்குள்ளாக்கியது. அதன் வெளிப்பாடாக அமைந்ததே 'ஒரு கல்லூரி இன்றிப் பஞ்சப்பட்டிருந்த சின்ன யாழ்ப்பாணம் இப்பொழுது பஞ்ச கல்லூரியைப் பெற்றுள்ளது' என்னும் உதயதாரகையின் (10-10-1893) கூற்றாகும். 1902இல் இக்கல்லூரி ஒரு அதிகார சபையின் கீழ் இயங்கியது. முதல் இவ்வதிகார சபை சித.மு.பசுபதிச் செட்டியார், ச.செல்லாயாப்பிள்ளை, சி.நாகலிங்கம், வி.காசிப்பிள்ளை, எ.சபாபதி, த.கைலாசபிள்ளை ஆகியோரைக் கொண்டு அமைந்திருந்தது. இச்சபை காலக்கிரமத்தில் அரச அங்கீகாரம் பெற்று தமது சைவப் பிள்ளைகளின் தமிழ் ஆங்கிலக் கல்வி விருத்தியில் அயராது உழைத்து தமிழர் சமுதாய வளர்ச்சியில் தனக்கென தனியான இடத்தைப் பெற்றுள்ளமை எல்லோராலும் பாராட்டத்தக்கது.

- **மாணவர்கள் வெள்ளைத்தாள். அதில் ஆசிரியர் என்ன எழுதினாலும் அப்படியே பதிகிறது.**
- **மாணவர்கள் தம் துறைசார்ந்த புதியன படைக்க ஆசிரியர்கள் முன்மாதிரியாக இருத்தல் வேண்டும்.**
- **கற்றவர்களே கண்ணுடையவர்களாக மதிக்கப்படும் காலம் இது.**

## யாவர்க்கும் கல்விக்கான உரிமை

உலகநோக்கில் கல்விக்கான உரிமையும் கற்பதற்கான உரிமையும் நடைமுறையில் முழுமையாகச் செயற்படுத்த முடியாமல் இருந்தாலும் கூட கற்ற மனிதர்களுக்கான தேவை மேலும் அதிகரித்துக் கொண்டு வருகிறது. உலக சனத்தொகையில் 1000 மில்லியன் பேர் எழுத்தறிவு அற்றவர்களாவர். இவர்களில் பெரும்பான்மையோர் பெண்களாவர். வளர்ச்சி அடைந்து வரும் நாடுகளைச் சேர்ந்த 130 மில்லியன் சிறுவர்கள் பாடசாலைக்குச் செல்வதில்லை. இவர்களில் 2/3 பங்கினர் வளர்ச்சி அடைந்து வரும் நாடுகளைச் சேர்ந்த சிறுமியர்களாவர். இந்தப் பின்னணியில் 1989 ஆம் ஆண்டின் ஐக்கிய நாடுகள் தாபனத்தின் சிறுவர்களின் கல்விக்கான பட்டயம், சிறுவர்களின் கல்விக்கான உரிமையை உறுதி செய்வதாக அமைந்துள்ளது.

கல்வியை வழங்குவதால் மக்கள் மத்தியில் நல்ல மனப்பாங்குகளையும் நடத்தையில் மாற்றத்தையும் உருவாக்கலாம். சுகாதாரம், உற்பத்தி, சூழல், பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு கல்வி பங்களிப்புச் செய்ய முடியும். அதே கல்வியால் கற்போனின் கலாசார, சமூக, பொருளாதார நலன்களையும் விருத்தி செய்யலாம். கல்வியியலாளர்கள் கல்வியை வழங்க வேண்டியதன் முக்கியத்துவத்தை குறிப்பாக சமூகத்திற்கும் திட்டமிடுவோருக்கும் விளக்கமளித்தல் அவசியமாகும். கல்வியை வழங்குவதால் பாடசாலையை விட்டு வெளியேறித் தொழில் செய்யும் வளர்ந்தோர்களின் உற்பத்தி ஆற்றல் விரிவடையும். இதன் மூலம் சமூகத்தில் கல்வியின் தாக்கத்தை இனங்கண்டு கொள்ள முடியும்.

''எல்லோருக்கும் கல்வி'' என்பதற்கான உலக மாநாடு நேர்முகமான சிந்தனையோடும் அதனை அடைவதற்கான அர்ப்பணிப்போடும் செயற்பட்டு வருகின்றது. இன்றைய எந்தவொரு அபிவிருத்தி நடவடிக்கைக்கும் மனித வள விருத்தி அவசியமாகவுள்ளது. கல்வியை வழங்குவதால் மனித சக்தி விரிவாக்கப்படுவதோடு மனித உரிமையும் சமூகத்திற்கு ஆற்ற வேண்டிய கடப்பாடும் அதிகரிக்கின்றது. அடிப்படைக் கல்வி எல்லோருக்கும் வழங்க வேண்டும் என்ற கருத்து இன்று என்றும் இல்லாத அளவு முக்கியத்துவம் பெற்றுள்ளது. அத்தோடு, ஆரம்பக் கல்வியில் கற்றல் கற்பித்தல் தொடர்பான உளவியல், சமூகவியல், பொருளாதார, அரசியல் காரணிகளும் கருத்தில் கொள்ளப்படுகின்றன. கடந்த காலங்களை விட இன்று உலகின் அறிவு தொடர்பான வளர்ச்சி வேகம் மிகவும் துரித கதியில் இடம்பெற்று வருகின்றது. வாழ்க்கைக்குத் தேவையான அடிப்படைகள் இதன் மூலமே பெற்றுக் கொள்ளப்படுகின்றது என நம்பப்படுகின்றது.

நன்றி : **எல்லோருக்கும் கல்வி**

***கலாநிதி உ. நவரட்ணம்***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இருமொழியமும் மும்மொழியமும்

சிங்களம், தமிழ், ஆங்கிலம் என்ற மூன்று மொழிகளிலும் தொடர்பாடல் செய்யும் திறன் உள்ளவர்களை உருவாக்க வேண்டும் என்றும், மும்மொழிக் கொள்கை இன்று எமது நாட்டில் அறிமுகஞ் செய்யப்பட்டுள்ளது. இது வரவேற்கத்தக்க முயற்சி என்பதில் ஐயமில்லை. மும்மொழியம் (Trilingualism) என்னும் கொள்கையின் சிறப்பம்சங்களை நாம் புரிந்து கொள்வதற்கு முன்னர் மொழியியல் நோக்கிலான உண்மைகள் சிலவற்றை தெளிவுபடுத்திக் கொள்ள வேண்டும். மொழியியலில் சமுதாய மொழியியல் (Socio - Linguistics) எனும் ஒரு பிரிவு உண்டு. சமுதாய மொழியியலாளர்கள் மும்மொழியம் பற்றி என்ன கூறியுள்ளனர் என்பதை நோக்குதல் வேண்டும்.

ஒன்றுக்கு மேற்பட்ட மொழிகளை சமூக தொடர்பாடலில் உபயோகிப்போரை, இரு மொழிகளை உபயோகிக்கும் இரு மொழியாலளர், மும்மொழிகளை உபயோகிக்கும் மும்மொழியாளர் மூன்றுக்கு மேற்பட்ட மொழிகளை உபயோகிக்கும் பன்மொழியாளர் என்று மூன்று வகையினராக வகுத்துக் கொள்ளலாம். எனினும், சமுதாய மொழியியலாளர்கள் இம்மூன்று வகையினரையும் இருமொழியியம் (Bilingualism) என்ற வகைக்குள் சேர்த்துக் கொள்வதையே விஞ்ஞான முறையானதென்று கருதுவார். மும்மொழியியம் என்றோ பன்மொழியியம் என்றோ அழைக்கப்படும் தனித்தனியான கோட்பாடுகள் சமுதாய மொழியியலில் பேசப்படுவதில்லை. இரு மொழியியம் தொடர்பான விதிகளும் தத்துவங்களும் மும்மொழி உபயோகத்திற்கும் பிரயோகமாகும் என்று சமுதாய மொழியியலாளர் கூறுவர். சமுதாய மொழியியல் பற்றிய பாடநூல் ஒன்றினை புரட்டிப் பார்க்கும் போது இவ்வுண்மை புலப்படும்.

இருமொழியம் இருவேறுபட்ட சூழலமைவுகளில் நோக்கப்படுவது உண்டு. தனியாள் நிலைப்பட்ட இருமொழியம் என்பது தனியாள் ஒருவர் தனது தாய் மொழியையும் ஏனைய பிறமொழிகளையும் எவ்வாறு கற்றுக் கொள்கிறார். இவற்றைக் கற்றலும் கற்பித்தலும் தொடர்பான சிக்கல்களும் பிரச்சினைகளும் எவை? என்பனவற்றை ஆராய்கிறது. இதனை (Individual Bilingualism) என்று ஆங்கிலத்தில் அழைப்பர். இருமொழியியம் தனிநபர்கள் வாழும் சமூகச் சூழலமைவில் வைத்து நோக்கப்படும் பொழுது அதனைச் சமூக நிலைப்பட்ட இருமொழியம் (Societal Bilingualism) என்று கூறுவர். சமூக நிலைப்பட்ட இரு மொழியம் பற்றிய ஆய்வுகள் 1970களுக்குப் பிற்பட்ட காலத்தில் மிகச் சிறப்பாக வளர்ச்சி பெற்றுள்ளன. இது தனியாள் நிலைப்பட்ட இரு மொழியத்திலிருந்து வேறுபட்டது. ஒருவர் வாழும் சமூகச் சூழலில் செயற்படும் மொழிசார் சக்திகள் எவை?, அவற்றுக்கிடையிலான தொடர்புகள் யாவை?,, அவற்றின் சமூக, அரசியல் பின்புலம் யாது?, வரலாற்றுப் பின்புலம் யாது? ஆகிய வினாக்களை சமூக நிலைப்பட்ட இரு மொழியம் முன்வைத்து அவற்றிற்கான விடைகளைத் தேடுகிறது. தனியாள் நிலைப்பட்ட இருமொழியியம் தாய் மொழியையும் பிறமொழிகளையும் ஆளொருவர் கற்றுக் கொள்ளல், அவற்றைக் கற்பித்தல் என்பனபற்றிய பிரயோக மொழியியல் ஆய்வாக அமைகிறது. இதற்கு மாறாக சமூக நிலைப்பட்ட இருமொழியியம் சமூகவியல் நோக்கிலான விரிந்த பார்வையை வழங்குகிறது.

சமூக நிலைப்பட்ட இரு மொழியியத்தின் இரண்டு முக்கிய கருத்துக்களை இங்கு குறிப்பிடுதல் அவசியம். பன்மொழி பேசும் சமூகங்கள் மொழி அடிப்படையான அடுக்கமைவை கொண்டிருக்கும் என்ற கருத்தை மொழியியலாளர்கள் எடுத்துக் கூறியுள்ளனர். சமூகத்தில் அதிகாரம் மிக்க மொழி ஒன்றிருக்கும். அது பெரும்பான்மையினர் பேசும் மொழியாகவும் இருக்கும். ஏனைய மொழிகள் சிறுபான்மையினர் மொழிகளாகவும் அதிகாரம் அற்றனவாகவும் இருக்கும். இதனால் சமூகத்தில் நிலவும் வர்க்கம், இனத்துவம், சாதி, பிராந்தியம் என்ற அடிப்படையான வேறுபாடுகளும் ஏற்றத்தாழ்வுகளும் மொழியுடன் தொடர்புபட்டனவாய் அமைந்து விடுகின்றன. இரண்டாவதாக சமூகத்தில் பங்கிடப்படும் வளங்கள் மொழிவழியாகப் பெறும் அதிகாரத்தால் தீர்மானிக்கப்படுகின்றன என்ற கருத்தையும் மொழியியலாளர் முக்கியமானதொரு விடயமாகக் குறிப்பிடுவர். அதிகாரம் பெற்ற மொழி பொருண்மிய வளங்களைப் பங்கீடு செய்வதில் நீதியைப் பேணுவதில்லை என்ற சிக்கல் எழுகிறது. உதாரணமாக காலனித்துவ ஆட்சியின் போது ஆங்கிலம் அதிகார மொழியாக இருந்தது. அப்போது ஆங்கிலம் கற்றவர்கள் பொருண்மிய வளங்களை நீதியற்ற முறையில் பெற்றுக் கொண்டனர். பின் காலனித்துவ கட்டத்திலும் ஆங்கிலம் தன் அதிகார வலுவைத் தக்கவைத்துக்கொண்டிருக்கிறது. இச்சூழலில் பொருண்மிய வளங்கள் எப்படிப்பங்கிடப்படுகின்றன என்பது முக்கியமல்லவா. ஆங்கிலம் ஒரு பாடமாக எல்லாப் பாடசாலைகளிலும் கற்பிக்கப்படுகிறது. ஆனால் ஆங்கில ஆசிரியர் என்ற வளம் சமமாகப் பங்கிடப்பட்டுள்ளதா? என்ற கேள்வி எழுகிறது. வளங்களை பொருண்மிய வளங்கள் என்பதாகக் குறுக்கிப் பார்த்தலும் ஆகாது. குறியீட்டு வளங்களும் மொழிசார் வளங்களுள் முக்கியமானவை. உதாரணமாக தேசிய கீதத்தை எம்மொழியில் பாடலாம் என்ற பிரச்சினை குறியீட்டு வளம் பற்றிய ஒரு பிரச்சினையாகும்.

சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளையும் கற்பித்தல் அவற்றின் வளர்ச்சிக்கு வேண்டிய ஆக்கபூர்வமான செயற்பாடுகளை முன்னெடுத்தல், ஆகியவைவற்றை நுண்மொழியியல் விடய ஆய்வுகளாக Micro - Linguistic case studies குறுக்கிப் பார்க்க கூடாது. சமூக நிலைப்பட்ட இரு மொழியியம் எனும் கோட்பாட்டுப் பின்புலத்தில் விரிந்த தளத்தில் வைத்து நோக்கப்படுதல் வேண்டும். **- சண் -**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விண்ணப்பங்கள்

## பார்வை 1 - ஆசிரிய, ஆசிரிய மாணவர்களுக்கான - கட்டுரைப் போட்டி

"மனித குலம் நூறாயிரம் வருடங்களாக பேச்சுத்திறன் பெற்றிருந்த போதிலும் சுமார் ஆறாயிரம் ஆண்டுகளாகவே எழுதும் ஆற்றலை வளர்த்து வந்துள்ளது. எமது பண்பாட்டுப் பெருமைக்கு இன்று முக்கிய சான்றாக விளங்குபவை எழுத்தில் உள்ளவையே.தொடர்பு கொள்பவர் எதிரில் இல்லாததும் மனித நினைவாற்றலில் தங்கி இருக்காததுமான தொடர்பு எழுத்து மூலம் நடைபெறுகிறது. அது மயக்கத்துக்கிடமற்ற வகையில் தெளிவாக அமையவேண்டியது அவசியமாகும். அச்சியந்திரங்களின் வருகையினால் ஏற்பட்ட புரட்சிகரமான மாற்றத்தால் மொழியில் எழுத்து வடிவம் பெற்று விட்டது. எம்மைச் சுற்றி ஏராளமான புத்தகங்களும் சஞ்சிகைகளும் பத்திரிகைகளும் உள்ளன.

இந்நிலையில் எழுத முடியாதோர் அறியாதாரே என்று கொள்ளப்படலாம். செம்மையாக,தெளிவாக எழுதுவதென்பது இலேசான காரியமன்று. ஆனால் எழுத்தாற்றல் மிக அவசியமான ஒன்றாக விளங்குகிறது. விஞ்ஞானம், சட்டம், பொறியியல், கல்வி, மருத்துவம், முதலான துறைகளில் எதிலே பணியாற்றுபவராயினும் கடிதங்களையோ, குறிப்புக்களையோ அறிக்கைகளையோ எழுத வேண்டியவரேயாவர். வாசிப்பவர்களை ஏமாற்றாத வகையில் தெளிவுடனும் காலத்தை வீணாக்காத வகையில் சுருக்கமாகவும் அலுப்பூட்டாத வகையிலான வசனங்களில் எழுத வேண்டியது இன்றைய தேவை என்று பொதுவாக கருதப்படுகின்றது"

அவ்வகையில் கல்விசார் அதிகாரிகளே, ஆசிரியர்களே, ஆசிரிய மாணவர்களே! மேற்கூறிய கூற்றுக்கமைவாக உங்களிடமிருந்து பல்துறைசார்ந்த ஆக்கபூர்வமான கட்டுரையாக்கங்களை எதிர்பார்த்து கட்டுரைப்போட்டி ஒன்றை நடத்த தீர்மானித்துள்ளோம். அடுத்து வருகின்ற இதழில் கட்டுரைத் தலைப்புக்களையும் பரிசில் விபரங்களையும் அறிவிப்போம். இவ்விடயம் தொடர்பாக ஆக்கபூர்வமான கருத்துக்களை உங்களிடமிருந்து எதிர்பார்க்கின்றோம்.

## பார்வை - 2

### *தமிழர் ஆசிரியர் சங்கங்களுக்கானது.*

தேசிய, வலய, கோட்ட மட்டங்களில் இயங்குகின்ற தமிழர் ஆசிரியர் சங்கங்கள் தங்களது முக்கிய செயற்பாடுகள், செய்திகள், பிரச்சினைகள் மற்றும் கல்விசார் நடைமுறைமாற்றங்களை தெரிவிக்க விரும்பினால் அவற்றை அகவிழிக்கு எழுதுங்கள். அவை பிரசுரிக்கப்படும்.

## பார்வை - 3

### *ஆசிரியர்களுக்கானது* (ஒத்துமாறுதல்)

ஆசிரியர் பணிமாற்றங்கள் தொடர்பாக ஒத்துமாற விரும்புவோர் தங்களது விபரங்களைத் தெரிவிக்கலாம். பத்திரிகைகளில் தெரிவிப்பதைவிட அகவிழியில் தெரிவிப்பது பயனுடையதாயிருக்கும். ஏனெனில் இலங்கை முழுவதிலுமுள்ள தமிழ்மொழிமூல பாடசாலைகள் பெற்றுக்கொள்வதால் அனைத்து ஆசிரியர்களையும் இவ்விடயம் சென்றடையும்.

## பார்வை - 4

### *பாடசாலைகளுக்கானது*

பாடசாலைகளின் நூற்றாண்டு விழாக்கள், பொன்விழாக்கள், பரிசளிப்புவிழாக்கள், கலைவிழாக்கள் ஆசிரியர்களின் பாராட்டு விழாக்கள் மற்றும் முக்கிய நிகழ்வுகள் பற்றிய செய்திகளை நீங்கள் தெரிவிக்க விரும்பினால் சிறு தொகை கட்டணத்துடன் விளம்பரமாகவோ செய்திகளாகவோ பிரசுரிக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பார்வை 5 - ஐக்கிய தமிழர் ஆசிரியர் சங்கத்தின் வழிகாட்டல்

தேசிய ஆசிரியர் இடமாற்றக் கொள்கைக்கேற்ப ஆசிரியர் இடமாற்றசபைகள் வலய மட்டத்திலும் மாகாண மட்டத்திலும் அமைக்கப்பட்டுள்ளன. அச்சபைகளுக்கு ஐக்கிய தமிழர் ஆசிரியர் சங்கத்தின் சார்பில் 2012ம் ஆண்டுக்கான ஆசிரியர் இடமாற்ற சபைக்கு அங்கத்தவர்களாக பின்வருவோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

**01. திரு. M. விக்டர்**
கொ/ புனித அந்தோனியார்.த.ம.வி,
கொழும்பு - 14, (தேசிய பாடசாலைகள் கல்வி அமைச்சு)

**02. திரு. A. ஹேமானந்த்**
கொ/ முகத்துவார இந்துக்கல்லூரி,
கொழும்பு - 15, (மேல் மாகாணம்)

**03. திரு. R. ஜெயசீலன்** (அதிபர்)
ஹ/ பொகவந்தலாவ.த.வி,
பொகவந்தலாவ, (மத்திய மாகாணம்)

**04. திரு. S. ரமேஸ்**
மன்/ சித்திவிநாயகர் இந்துக்கல்லூரி
தேசிய பாடசாலை, மன்னார், (வட மாகாணம்).

**05. திரு. R. லோகநாதன்** (பிரதிஅதிபர்)
இ/ காவத்தை த.வி
நாவோதயப் பாடசாலை, காவத்தை,
இரத்தினபுரி, (சப்பிரகமுவ மாகாணம்).

**06. திரு. K. சண்முகானந்தன்** (பிரதிஅதிபர்)
கொ/ விபுலானந்த த.வி,
கொழும்பு - 10, (கொழும்பு வலயம்).

**07. திரு. இராஜரெட்டினம்** (அதிபர்)
களுத்துறை வலயம்

**08. திரு. A. ஜெயக்குமார்**
க/ சென் மேரிஸ்.கல்லூரி,
மத்துகம, (மத்துகம வலயம்).

**09. திரு. M. ஆனந்தகுமார்** (அதிபர்)
க/ பில்லக்கந்த த.ம.வி
புளத்சிங்கள. (ஹொரணை வலயம்)

**10. திரு. Q.S. ஜேசுதாசன்** (பிரதிஅதிபர்)
கம்/ R.C.T.M.S
வத்தளை, (களனி வலயம்).

**11. திரு. A. J. R. தூரம்**
மன்/ பற்றிமா ம.வி
பேசாலை, (மன்னார் வலயம்)

**12. திரு. M. இக்னேசியஸ் (அதிபர்)**
மன்/ பாலம்பிட்டி அ.த.க.பாடசாலை
மடு, (மடு வலயம்).

**13. திரு. K. பாலகணேசன்**
கிளி/ கிளிநொச்சி மகா.வித்தி
கிளிநொச்சி, (கிளிநொச்சி வலயம்)

**14. திரு. T. சிவயோகநாதன்**
யா/ கொடிகாமம்.அ.த.க.பாடசாலை
கொடிகாமம், சாவகச்சேரி, யாழ்ப்பாண வலயம்.

எதிர்வரும் காலங்களில் 10 வருடத்துக்கு மேல் ஒரே பாடசாலையில் கடமையாற்றியவர்களுக்கான இடமாற்றங்கள் நடைபெறவிருப்பதால் உதவி தேவைப்படுவோர் எம்மோடு இணைந்து பயன்பெறுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**தொடர்புகளுக்கு : 10/1 போதிராஜ மாவத்தை, கொழும்பு - 13.**
**தொ.பே. இல : 011 2470250, 0777444424**
**E.mail : uttu 2010 @yahoo.com.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொழும்பு தமிழ்ச் சங்கம்
நூலகம்

# அகவிழி

## கிடைக்குமிடங்கள்

**பூபாலசிங்கம் புத்தகக்கடை,**
202, செட்டியார் தெரு கொழும்பு-11
தொ.பே.இல: 0112422321

**பூபாலசிங்கம் புத்தகக்கடை,**
4A, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

**நியூ கேசவன் புக்ஸ்டோல்,**
52 டன்பார் வீதி ஹட்டன்.
தொ.பே.இல:051-2222504,051-2222977

**அறிவாலயம் புத்தகக்கடை,**
190 B புகையிரத வீதி,
வைரவப்புளியங்குளம், வவுனியா.
தொ.பே.இல: 024-4920733

**அன்பு ஸ்டோர்ஸ்,**
14 பிரதான வீதி, கல்முனை.
தொ.பே.இல 067-2229540

**புக் லாப்,**
20,22 சேர் பொன் ராமனாதன் வீதி,
பரமேஸ்வரா சந்தி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
தொ.பே.இல:021-2227290,
கை.தொ.இல:077-1285749

**அல்குரசி புத்தக நிலையம்**
28,1/2, புகையிரத வீதி மாத்தளை.
தொ.பே.இல:066-3662228

**பூபாலசிங்கம் புத்தகக்கடை,**
309-A 2/3 காலி வீதி,
வெள்ளவத்தை, கொழும்பு.
தொ.பே.இல:4515775, 2504266

**அபிஷா புத்தகக்கடை**
137, பிரதான வீதி தலவாக்களை
தொ.பே.இல:052-2258437

**நூர் மொஹமட் நியூஸ் ஏஜண்ட்,**
132, பிரதான வீதி,
கிண்ணியா-03.
தொ.பே.இல:026-2236266

**சாய் புத்தகக்கடை**
92, கொட்டாஞ்சேனை வீதி,
கொழும்பு-13
தொ.பே.இல:2452736

**குமரன் டிரேட் சென்டர்**
18, டெய்லிபயர் கொம்பிலக்ஸ்
நுவரெலியா.
தொ.பே.இல.: 052-2223416

**பிரியங்கா புத்தகக் கடை**
பிரதான வீதி,
பருத்தித்துறை.
தொ.பே.இல:077 9303246.

**கொலேஜ் நீட்ஸ் புத்தகக்கடை**
120, பிரதான வீதி, அட்டாளைச்சேனை 14.
கை.தொ.இல.: 077-3034469

ISSN 1800-1246

PRINTED BY UNIE ARTS (PVT) LTD.,
48B, BLOEMENDHAL ROAD, COLOMBO 13. TEL: 2330195

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org